பக்கங்கள் - 40
விலை - 40 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 179 வைகாசி 12ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 26 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Leading to MBA
BBA
(Bachelor of Business Administration)
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# அரசியல் கைதிகளை விடுவிப்பது கடினம்

## அரச தலைவர் மைத்திரி திட்டவட்டம்



யாழ்ப்பாணம், மே 26
நாட்டில் மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு தற்போது மன்னிப்பு வழங்குவது கடினம். இவர்களில் பெரிய குற்றங்களைப் புரிந்தவர்களை எந்தக் காரணம் கொண்டும் விடுவிக்கவும் முடியாது. இதுதான் உண்மை நிலவரம் என்று தெரிவித்துள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஞானசார தேரரையும் தமிழ் அரசியல் கைதிகளையும் ஒப்பிட முடியாது என்றும் காட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். 37

### பதவியேற்பு நிகழ்வில் மோடியை நேரில் வாழ்த்த டில்லி பறக்கிறார் மைத்திரி

கொழும்பு, மே 26
இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று இரண்டாவது தடவையாகவும் தலைமை அமைச்சராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொள்ளவுள்ளார். எதிர்வரும் 30ஆம் திகதி புதுடில்லியில் பதவியேற்பு நடைபெறவுள்ளது. (ஒ.5.22)

### ரிசாத்திடம் 5 மணிநேரம் விசாரணை

கொழும்பு, மே 26
நிதிமோசடி விசாரணைப் பிரிவில் (எவ்.சி.ஐ.டி.) முன்னிலையான அமைச்சர் ரிசாத் பதியூதீனிடம் 5 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.
2014ஆம் ஆண்டு காலப் பகுதியில் 2 லட்சத்து 57 ஆயிரத்து மெட்ரிக் தொன் அரிசி சதொசவுக்கு இறக்குமதி செய்யப்பட்டது. அதில் மோசடி இடம்பெற்றதாக, நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக, அமைச்சர் ரிசாத் பதியூதீன் நேற்று அழைக்கப்பட்டிருந்தார். (ஒ.5)

### மாமுனை கடற்பரப்பில் 233 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், மே 26
வடமராட்சி கிழக்கு மாமுனைக் கடற்பரப்பில் கஞ்சாவுடன் பயணித்த படகைக் கைப்பற் 37



### தேவாலயம், மருத்துவமனை, பாடசாலை மீது வெள்ளி இரவு திடீர்த் தாக்குதல்

#### மன்னாரில் பதற்றம்



மன்னார், மே 26
மன்னார் மடு பொலிஸ் நிலையக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உட்பட்ட கீரிச்சுட்டான் பகுதியில் தேவாலயம், மருத்துவமனை, பாடசாலை ஆகியன மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு திடீர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தேவாலயத்தின் சொரூபங்கள், பாடசாலை கதிரைகள், மருத்துவமனைக் கண்ணாடிகள் என்பன சேதமாக்கப்பட்டுள்ளன. இனந்தெரியா 37

### பாடசாலைப் பைகளுக்கு மாற்றீட்டு பைகளை வாங்கக் கூறவில்லை

#### கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, மே 26
பாடசாலை பைகளுக்கு மாற்றீடாக வேறு பைகளைக் கொள்வனவு செய்யுமாறு பெற்றோரிடம் கோரப்படுகின்றமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பெற் 37

### ஆட்டத்தை ஆரம்பித்தார் விடுவிக்கப்பட்ட ஞானசாரர்

கொழும்பு, மே 26
புர்கா, நிகாப் ஆகியவற்றையும், மத்ரஸாக்களையும் தடை செய்ய வேண்டும் என்றும் அதற்கு முஸ்லிம் சமூகத்துடன் ஆலோசனை செய்யத் தேவையில்லை என்றும், பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தேஞானசார தேரர் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இது எமது நாடு என்ற உண்மையை விளங்கி தைரியமாக கூறுவதற்கு இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகளுக்கு முதுகெலும்பு இல்லை.
அரசியல்வாதி 37

### வடக்கில் பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 26
வடக்கு மாகாணத்தில் பல பொலிஸ் அதிகாரிகளுக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தினேஸ் கருணாரத்ன, நுகேகொட பொலிஸ் பிராந்தியத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். 37



### ஸ்டாலினை இலங்கை வருமாறு அழைப்பு

#### வாழ்த்துச் செய்தியில் விக்னேஸ்வரன் கோரிக்கை

37

### காணிகளை மீள ஒப்படைப்பதில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை

#### கூறுகிறார் யாழ்ப்பாணத் தளபதி

யாழ்ப்பாணம், மே 26
யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தினரின் பாவனையில் உள்ள காணிகளை விடுவிப்பதில் எந்தவித பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லை என்று கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வந்த காணி விடுவிப்புகள் தொடர்ச்சியாக இடம்பெறுமெனவும் காணி விடுவிப்பில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லையெனவும் தெரிவித்துள்ளார்.
பலாலியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு நேற்று சனிக்கிழமை ஈருருளி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு கூறினார். 37

### பிறந்தநாள் கொண்டாட்டத்தில் வாள்வெட்டுக் குழு மடக்கப்பட்டது

#### கூறுகின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 26
வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த ஒருவரது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது வாள்வெட்டு வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மானிப்பாய் மற்றும் நவாலிப் பகுதிகளில் வைத்து அவர்கள் 9 பேரும் நேற்றுச் சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் 37

### 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்லறைகளுடன் மயானம்!

#### திருகோணமலையில் கண்டுபிடிப்பு

திருகோணமலை, மே 26
திருகோணமலை, கன்னியா நிலாவெளி வீதியில், வள்ளுவர் கோட்டம் பிரதேசத்தில் புராதன மயானம் கண்டுபிடிக்கப்பட்டதாக திருகோணமலை தொல்பொருள் திணைக்கள அதிகாரி சுமணதாச தெரிவித்தார்.
இந்த மயானமானது சுமார் 2000 தொடக்கம் 2500 வருடகால பழமையானது என்று கணிக்க கூடியதாக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.
தற்போது ஐந்து கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் பல கல்லறைகள் காட்டுப்பகுதியில் இருக்கக்கூ 37

# 8000 பேருக்கு சிசேரியன் செய்ததை ஒப்புக் கொண்டாராம் மருத்துவர்

## ‘திவயின’ பரபரப்புத் தகவல்

கொழும்பு, மே 26

சிங்களப் பெண்களுக்குச் சட்டவிரோதமாகக் கருத்தடை சத்திர சிகிச்சையை மேற்கொண்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள குருநாகல் மருத்துவர் சேகு சிஹாப்தீன் மொஹமட் சாபி, தான் 8 ஆயிரம் பேருக்கு மகப்பேற்று சத்திர சிகிச்சை புரிந்தமையை ஒப்புக்கொண்டார் என்று ‘திவயின’ பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.


கைதான மருத்துவா

அவர் கருத்தடை சத்திர சிகிச்சையை சட்டவிரோதமாக மேற்கொண்டிருப்பதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக, குருநாகல் பொதுமருத்துவமனைப் பணிப்பாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் விசாரணை இடம்பெற்றது. இதன்போது அவர் இந்தத் தகவலைக் கூறியுள்ளார்.

சட்டவிரோதக் கருத்தடை சத்திர சிகிச்சை, மருத்துவமனையில் பிறக்கின்ற குழந்தைகளை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச் செயல்களின் ஊடாக அவர் பெருமளவில் பணம் ஈட்டியுள்ளார் எனப் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது எனவும் ‘திவயின’ செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்ட குறித்த மருத்துவர், சந்தேகத்துக்கு இடமான முறையில் சொத்து சேகரித்தார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்காகவே கைதானார் என்று பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அவர் கருத்தடை சத்திர சிகிச்சையைப் புரிந்தாரா? என்பது தொடர்பில் பொலிஸ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை.

ஏற்கனவே அவர் 4 ஆயிரம் சிங்களப் பெண்களுக்குச் சட்டவிரோதமாகக் கருத்தடை சத்திர சிகிச்சையைப் புரிந்தார் என ‘திவயின’ செய்தி வெளியிட்டிருந்ததை அடுத்து, இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில் எதுவும் இடம்பெறவில்லை என்று புலனாய்வுப் பிரிவினர் கூறியதாக சபாநாயகர் சபையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,22)

# சந்தேகத்துக்கிடமாக சொத்து சேர்த்த மருத்துவர் கைது

கொழும்பு, மே 26

சந்தேகத்துக்கு இடமான முறையில் சொத்துக்கள் சேர்த்தமை தொடர்பில் குருநாகல் பகுதியில் உள்ள மருத்துவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

42 வயதான சேகு சிஹாப்தீன் மொஹமட் சாபி என்ற மருத்துவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

மருத்துவருக்குச் சொந்தமான சந்தேகத்துக்கிடமான சொத்துக்கள் தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதற்கமைய, சந்தேகநபருக்கு எவ்வாறு சொத்துக்கள் கிடைத்தன என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்த மருத்துவர் கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டமை குறிப்பி டத்தக்கது. (ஒ.5)

# சமூகத்தள வதந்திக்கு இராணுவம் விளக்கம்

கொழும்பு, மே 26

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை இலங்கையில் களமிறங்கியுள்ளதாக சமூக ஊடகங்களில் சில தினங்களாக தகவல்கள் பரப்பட்டு வருகின்றன.

நாட்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தொடர்ந்து ஐ.நா. அமைதிப் படையினர் இலங்கையில் களமிறங்கியுள்ளதாகவும், ஐ.நாவின் இலட்சினை பொறிக்கப்பட்ட வாகனம் ஒன்று இலங்கை வீதிகளில் உலாவும் ஒளிப்படமும் இணைக்கப்பட்டு சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் விளக்கமளித்துள்ளார்.

சமூகவலைத் தளங்களில் வெளியிடப்பட்டுள்ள தகவல் உண்மைக்குப் புறம்பானது என்று குறிப்பிட்டுள்ளார். மாலியில் அமைதி காக்கும்பணியில் இலங்கை இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். இலங்கை இராணுவத்திடமிருந்த பவள் வாகனங்கள் புதுப்பிக்கப்பட்டு ஐ.நா. இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளன. அவை மாலிக்கு அனுப்ப முன்னர் இலங்கையில் பரீட்சார்த்தமாக பயணித்தன. அந்த ஒளிப்படத்தையே சமூகவலைத் தளங்களில் தவறான செய்திகளுடன் பகிர்ந்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.5)




# படையினருக்கு கேக் வெட்டும் கத்திக்கும் வாளுக்கும் வித்தியாசம் தெரியவில்லை

## சாடுகிறார் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் மக்கள் பெரிய நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளனர். சோதனை நடவடிக்கைகள் என்ற பெயரில் பாதுகாப்புத் துறை மக்களுக்குப் பெரிய அசௌகரியங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு முஸ்லிம் மக்களையும், பள்ளிவாசல்களையும் சோதனைக்குட்படுத்துவதால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்து விடாது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

பயங்கரவாதச் செயற்பாடுகள் எந்த இடங்களில் முன்னெடுக்கப்பட்டதோ அந்த இடங்களில் தான் குழுக்களை அமைத்து ஆராய வேண்டும். நாம் இப்போதும் வலியுறுத்துவதென்னவென்றால் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பை தடை செய்யும் எந்தப் பயனும் கிடையாது. தடை செய்யப்பட வேண்டிய அமைப்புக்கள் இன்னும் எத்தனையோ உள்ளன. அவை குறித்து யாரும் தேடவில்லை. இவற்றுக்கு தலைமை தாங்குபவர்கள் இனங்காணப்பட்டும் இன்னும் கைது செய்யப்படவில்லை. பாதுகாப்புதுறையில் சிறந்த தலைமைத்துவம் இன்மையே இதற்கான காரணமாகும் - என்றார். (ஒ.5)

# திருத்தம்

வடக்கு மாகாண ஆளுநரின் எண்ணக்கருவுக்கு அமைவாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் புத்தக விற்பனை மற்றும் கண்காட்சி ஒகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் உதயனில் நேற்று வெளியான செய்தியில், தவறுதலாக நாளை ஆரம்பமாகவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

# பிபிசிக்கு எதிர்ப்பு லண்டனில் போராட்டம்!

கொழும்பு, மே 26

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 10ஆவது ஆண்டு நினைவு நாளன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் குறித்து அவதூறானதும் உண்மைக்கு புறம்பான இரு காணொலிகளை பிபிசியின் தமிழ் பிரிவு முகப்புத்தகப் பக்கத்தில் பதிவு செய்ததாக குற்றஞ்சாட்டி லண்டனில் பிபிசி தலைமையகம் முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் தலைவர் வே.பிரபாகரனையும் கொச்சைப்படுத்தும் வகையில் இந்த காணொலிகளை வெளியிட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும், இந்தப் பதிவுகளை உடனடியாக நீக்கக்கோரியும், பிரிட்டன் வாழ் தமிழர்கள் லண்டனிலுள்ள பிபிசி தலைமை பணியக முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எதிர்காலத்தில் பிபிசி இவ்வாறான உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடக் கூடாது என்றும், பகிரங்க மன்னிப்புக் கோருமாறும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரியிருந்தனர். (ஒ.5)





# படகுகளுக்கு தீ வைப்பு

திருகோணமலை, மே 26

திருகோணமலை புல்மோட்டையில் முஸ்லிம் மீனவர்களின் 3 மீன்பிடிப் படகுகள் மற்றும் இரண்டு இயந்திரங்கள் நேற்று முற்பகல் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. புல்மோட்டை, ஜின்னாபுரம் கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 படகுகள் மற்றும் 40 குதிரைவலுக் கொண்ட 2 இயந்திரங்களுக்கே தீ வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5)

# தேவையற்ற கைதுகளை உடன் தடுத்து நிறுத்துக!

## முஸ்லிம் அரசியல்வாதிகள் மைத்திரியிடம் கூட்டாக வேண்டுகோள்

கொழும்பு, மே 26

நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் முஸ்லிம்கள் தார்மீக வருத்தம் தெரிவித்து தீவிரவாதிகளை அழிக்கும் முயற்சிகளில் ஒத்துழைப்பு வழங்கி வரும் தற்போதைய சூழ்நிலையில் அநாவசியமான கைதுகள் இடம்பெறுவது வேதனைக்குரியது. இதனை உடன் தடுத்து நிறுத்துங்கள். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் வேண்டுகோள் விடுத்துள்ளனர் முஸ்லிம் அரசியல்வாதிகள்.

நேற்று சனிக்கிழமை காலை அரச தலைவரின் இல்லத்தில் நடந்த சந்திப்பின்போதே அரச தலைவரிடம் இந்த வேண்டுகோளை அவர்கள் விடுத்துள்ளனர்.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர்களான அமீர் அலி, அலிசாஹிர் மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர்களான பௌசி, தௌபீக், மஹ்ரூப், பைசர் முஸ்தபா உள்ளிட்டோரும், பாதுகாப்பு அதிகாரிகள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

‘தேவையற்ற கைதுகள் நிறுத்தப்பட்டு குண்டுத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்பில்லாதவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை இவ்வாறான கூட்டத்தைக் கூட்ட வேண்டும். சில ஊடகங்கள் போலியான பரப்புரைகளைச் செய்து வருகின்றனர். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பாவி முஸ்லிம் மக்கள் மீது விதிக்கப்படும் கெடுபிடிகளால் நிலமை மோசமடையாமல் இருக்க உடனடி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்’ என்று இதில் கலந்துகொண்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் கூட்டாக வலியுறுத்தினர்.

சில ஊடகங்கள் செய்துவரும் போலியான பரப்புரைகள் குறித்து இங்கு கவலை வெளியிட்ட அரச தலைவர், அப்படியான ஊடகங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியதுடன் சாதாரண முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படுவதை தான் அனுமதிக்கப்போவதில்லை எனவும் குறிப்பிட்டார். (ஒ.5,22)


Vespa
அதிநவீன இத்தாலி தொழில்நுட்பத்தில் மற்றும் வடிவமைப்பில்
அபான்ஸ் ஓட்டோ அறிமுகம் செய்யும் வெஸ்பா மற்றும் எப்ரிலியா ஸ்கூட்டர்
aprilia
#be a racer
இத்தாலி
தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு
2 வருடங்கள் அல்லது 24,000 கி.மீ. உத்தரவாதம்
5 சேவைகள் இலவசம்
வெஸ்பா
ரூ. 350,000/- இலிருந்து
SR 125 (125CC) - ரூ. 299,990/-
SR 150 (150CC) - ரூ. 345,000/-
• டியூப்லெஸ் டயர்கள், அலோய் வீல்
• 7 லீட்டர்கள் கொண்ட பிரம்மாண்ட எரிபொருள் தாங்கி
• 125cc/ 150cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின், வெல்வு 3
• MAP Sensing மற்றும் Variable Spark Timing Management
• முன்புறம்: Aircraft-derived Anti-Dive Front Suspension
பின்புறம்: இரட்டை செயற்பாட்டு ஹைட்ரோலிக் ஷொக் அப்ஸோபர்
• டிஜிட்டல் மீட்டர்
• CVT ஓடோமெடிக் கியர் பொக்ஸ்
• Monocoque ஸ்டீல் போர்ட்
• 14" அலோய் வீல்
• 6.5 லீட்டர்கள் கொண்ட பிரம்மாண்ட எரிபொருள் தாங்கி
• CVT ஓடோமெடிக் கியர் பொக்ஸ்
• MAP Sensing மற்றும் Variable Spark Timing Management
• முன்புறம்: டெலஸ்கொப்பிக் சஸ்பென்ஸன்,
பின்புறம்: ஹைட்ரோலிக் ஷொக் அப்ஸோபர்
• டியூப்லெஸ் டயர்கள்
• கைபேசி சார்ஜ் செய்யும் வசதி
• 125cc/150cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின், வெல்வு 3
• டுவின் பிஸ்டர் கெலிபர் உடன் முன்புற
ஹைட்ரோலிக் 220mm டிஸ்க் பிரேக்
011 5 777 000 / 076 329 1919
அபான்ஸ் ஓட்டோ மோட்டார் சைக்கிள் காட்சியறைகள் மற்றும்
அங்கீகாரம் கொண்ட விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
Abans
AUTO


EDUKO
PATHWAYS
STUDY IN
Malaysia
JULY INTAKE IS NOW ON
Intake is now on for all courses from foundation to PhD Programmes at top Malaysian Universities.
Scholarships Available*.
MONASH University
A·P·U ASIA PACIFIC UNIVERSITY OF TECHNOLOGY & INNOVATION
SEGi University
SUNWAY UNIVERSITY
Contact us: 0774246564 / 0766472444 / 0763978000
UCL Building, 503, Sri Jayawardenepura Mawatha, Rajagiriya

# கலவரம் ஏற்படுத்தியாவது ஆட்சியைப் பிடிக்க முயற்சி

## குற்றஞ்சாட்டுகின்றார் சஜித்

கொழும்பு, மே 26
அரச தலைவர் தேர்தலை இலக்கு வைத்து 1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தைப் போன்று வன்முறைகளை ஏற்படுத்தும் அரசியல் சூதாட்டமே தற்போதும் இடம்பெற்று வருகின்றது என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.
கண்டி, குண்டசாலை கோணவெல தெற்கு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட இசுரு உயன் புர எழுச்சிக் கிராமம் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
திரைப்படக் காட்சிகளைப் போன்றே இன்று இலங்கை அரசியலில் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. இவை வெறும் நடிப்பு மாத்திரமே. இதனால் எவ்வித நன்மைகளும் மக்களுக்கு ஏற்படப் போவதில்லை. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது காலத்தின் தேவையாகும்.
இது ஆட்சியாளர்களின் கடமையும் பொறுப்புமாகும். ஆனால், மக்களின் பிரச்சினைகளுக்கு எவரும் முன்னுரிமையளிப்பதில்லை. நாட்டை தீ வைத்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் சூதாட்டமே நடைபெற்று வருகிறது.
1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தை போன்று சில அரசியல் குழுக்கள் நாட்டுக்குச் சேதங்களை விளைவித்தேனும் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்ற னர். எதிர்வரும் தேர்தல்களில் தெரிவாகும் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் யார் என்ற அரசியல் சூதாட்டம் அரங்கேற ஆரம்பித்துள்ளது. இது நாட்டுக்குப் பெரும் பாதகமாகும். என்றார்.

(எ)

### வீடு வாடகைக்கு
யாழ். ரயில் நிலையத்திற்கு அண்மையாக அத்தியடி புதிய வீதியில் வீடாகவோ, அலுவலகமாகவோ பாவிக்கக்கூடிய 1300 சதுரஅடி விஸ்தீரணமுள்ள வீடு 4 பரப்புக் காணியுடன் (Car parking,Facilities including ) வாடகைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: **076 824 6113**

### வீடு காணி விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன் கொக்குவிலில் 2பரப்பு காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
**076 702 3565**

### வாடகைக்கு
வெள்ளவத்தை காலி வீதிக்கு முகப்பாக 10 அறைகள் இணைந்த குளியலறையுடன் 2000 சதுர அடி கொண்ட மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு விடப்படும். (CS 25610) (14,17)
**072 255 2222**

### தேவை
புத்தகக் கடைக்கு போட்டோக் கொப்பி தெரிந்த / பழகவிரும்பும் பெண்பிள்ளை தேவை.
**077 2096 310 / 075 038 4092**

### மணமகன் / மணமகள் தேவை
உள்நாட்டு வெளிநாட்டு மணமக்களுக்கு எம்முடன் தொடர்புகொள்க.
**Tel: 076 318 1533**

### வேலையாள்கள் தேவை
பான்சி கடை ஒன்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை.
வயது (18 - 25)

### வாடகைக்குண்டு
நாவலர் வீதி. பெருமாள் கோயிலடியில் அறைகள் வாடகைக்கு உண்டு.
**Tel: 076 080 3075**

### வீடு வாடகைக்குத் தேவை
மூவர் கொண்ட அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றுக்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள். கல்வியங்காடு/ திருநெல்வேலி பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: **071 117 3686**

### மாபிள் வேலை
**உங்கள் வீட்டிற்கு தரமாகவும் அழகாவும் மாபிள் வேலை செய்து தரப்படும்**
**1 சதுர அடி ரூபா 45.00**
**077 334 1281**

### கொள்வனவு செய்யப்படும்
No21, Kanakapuram Road. Kilinochchi
தேங்காய், கொப்பறா, நெல், தானியங்கள் கொள்வனவு செய்யப்படும்.
**Phone No : 076 144 9918**

### வீடு வாடகைக்குண்டு
யாழ் நகருக்கு மிக அண்டிய சூழலில் வண்ணார் பண்ணை வீதியில் வீட்டின் மேல்மாடி வாடகைக்கு உண்டு. (இரண்டு படுக்கை, Hall, Bathroom) மாத வாடகை 10,000/= ஒரு வருட முற்பணம் (CS 00623)(14,17)
தொடர்பு: **077 931 1889**
**076 883 3713**

### அபிவிருத்தி அதிர்ஷ்டம் — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 247
சீட்டிழுப்பு திகதி ▸ 25.05.2019 சிவப்பு

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| Y | 7 31 33 | 9 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி: ரூ. 1,7264, 676/=
29.05.2019 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.ஐ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3187 திகதி: 2019.05.25 சனிக்கிழமை
SATURDAY FORTUNE — பச்சை

| வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் |
|---|---|---|
| 39 46 59 61 Y | 44 | 43,772,205/- |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space A Kema டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 619
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.05.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,123,265/-

| வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து |
|---|---|
| 08 25 36 44 | Q |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space A Kema டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### அறைகள் வாடகைக்கு
கண்டி வீதி, அரியாலையில் மாத வாடகைக்கு அறைகள் உண்டு.
**072 017 3289**

### வேலைவாய்ப்பு
கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மலேசியாவில் சாரதிகளுக்கான வேலைவாய்ப்புகள் வயதெல்லை 18 - 42 வரை, சம்பளம் 120000 -130000 வரை நேர்முக பரீட்சை 02.06.2019 அன்று நடைபெறும்.
**076 289 6258, 071 741 0169**

### வேலைவாய்ப்பு
மலேசியாவில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் சிறந்த தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்புகள் வய தெல்லை 18 - 42 வரை சம்பளம் 65000 - 75000 வரை தங்குமிட வசதி போக்குவரத்து உட்பட 2 -3 ஆண்டு வரை வேலைவாய்ப்பு விசா வழங்கப்படும். நேர்முக பரீட்சை 02.06.2019 அன்று நடைபெறும்.
**076 289 6258, 071 741 0169**

### கடைத்தொகுதி/ காணி தேவை
பிரபல நிறுவனம் ஒன்றின் காட்சியறைக்கு யாழ் மாநகர எல்லைக்குள் பிரதான வீதியின் முன்புறமாக வாகனதரிப்பு வசதியுடன் கூடிய 3000 Sqft அமைந்துள்ள கடைத்தொகுதி உடன் தேவை. அல்லது கடைத்தொகுதி அமைக்கக் கூடிய காணி விரும்பத்தக்கது.
**077 323 7594**

### காணி விற்பனை
புத்தூர் கிழக்கு, வாதரவத்தையில் காணிகள் மற்றும் வயல் காணிகள் என்பன விற்பனைக்குண்டு. (CS 25607)(04,17)
**077 677 8359/077 416 7634**

### அறைகள் வாடகைக்கு
படிக்கும் வேலை பார்க்கும் பெண்களுக்கு யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் சமைத்து சாப்பிட கூடிய வசதியுடைய அறைகள் வாடகைக்கு உண்டு. (CS 25613) (04,17)
**077 769 8553/076 769 8554**

### மணமகன் தேவை
ரேவதி 1982 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான சைவப்பற்றுள்ள டிவோஸ் பெண்ணிற்கு 42 வயதுக்கு உட்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன் தேவை. (CS 25614) (04,17)
**077 460 6507/076 030 8691**



# ஊடகங்களால் முஸ்லிம்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்

## வேதனையைக் கொட்டினர் யாழ்ப்பாண முஸ்லிம்கள்

யாழ்ப்பாணம், மே 26

தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் ஊடகங்கள் எம்மைச் சிறைப்பிடித்துள்ளன. அந்தச் சிறையில் இருந்து ஊட கங்கங் தான் எம்மை விடுவிக்கவேண்டும் என்று யாழ்ப்பாண முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்தனர்.

கொழும்பு, மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் பின்னர், முஸ்லிம் சமூகம் தொடர்பாக ஊடகங்களுடைய பார்வை. அல்லது செய்திகள் வெளியிடும் தன்மை தொடர்பான ஊடகவியாளர்கள் சந்திப்பு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் பெரிய முஹியித்தீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் ஜம்இய்யதுல் உலாமா சபையினர் இந்த ஊடகசந்திப்பை ஏற்பாடுசெய்திருந்தனர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின்ஜம்இய்யதுல்உலாமா சபையின் தலைவர் எஸ்.ஏ. பி.ஏ.எஸ்.சுபியான் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"குண்டுத்தாக்குதலின் பின்னர், ஒரு சில தமிழ், ஊடகங்கள் முஸ்லிம் மக்கள் பற்றிய செய்தியை வேண்டுமென்றே திரிபுபடுத்துகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்கள் வெறுங்கையோடு வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள். தமிழ்பேசும் மக்களாக தமிழ் மக்களுடன் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்ற எண்ணமே யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு உள்ளது. குண்டுத் தாக்குதலுக்கும், இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று நாங்கள் கூறிவருகிறோம். உறுதியாகத் தெரிவிக்கிறோம். இந்த உறுதிமொழிகளை, பொலிஸ் அதிகாரிகள், இராணுவத் தளபதிகளிடம் கூறியுள்ளோம். அப்படி ஒரு தீவிரவாதப் போக்குடையவர்கள் யாராவது அடையாளப்படுத்தப்பட்டால் அவர்களைச் சட்டநடவடிக்கைக்காகப் பொலிஸாரிடம் நாங்களே ஒப்படைப்போம் என்றும் அவர்களிடத்திலே நாங்கள் உறுதியாகத் தெரிவித்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் வாழும் இடங்களில் தீவிரவாதிகள் எவரும் இல்லை என்றும், தீவிரவாதிகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை என்றுமே கூறிவருகின்றோம்.

இந்தப் பயங்கரவாதத்தை இலங்கையில் இருந்து துடைத்தெறிய வேண்டும் என்பதிலேயே முஸ்லிம் மக்கள் குறியாக உள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பில் இருந்தார்கள் என்று ஒளிப்படங்கள் வெளியிட்டபோது, அவர்களை இனங்காட்டிக் கொடுத்தவர்கள் முஸ்லிம் மக்கள்தான். ஆனால் தனிப்பட்ட கோபங்களுக்காக சில அப்பாவி முஸ்லிம்களும் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளார்கள். பயங்கரவாத்தை ஒழித்துவிட்டோம் என்று அரசும், பாதுகாப்புத் தரப்பும் சொல்லும் அளவுக்குப் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒரு குறுகிய காலத்துக்குள் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உதவியவர்கள் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தான் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் இங்கு வாழும் முஸ்லிம் மக்களுடைய ஒரே நோக்கம் நாங்கள் பூர்வீகமாக வாழ்ந்த இந்த மண்ணிலே, எங்களுடைய பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதோடு, எங்களைச் சூழவுள்ள சமூகங்களுடன் கலந்து சுமுகமாக வாழவேண்டும் என்பதுதான். எனவே எம்மூடாக எந்தப் பயங்கரவாத நோக்கங்களும் இடம்பெறமாட்டாது. ஆனால் குண்டுத் தாக்குதலின் பின்னர் ஊடகங்களில் வெளிவந்த செய்திகளைப் பார்க்கின்ற போது, யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் வாழும் பிரதேசம், பயங்கரவாதத்தினுடைய குகை என்று மற்றவர்கள் நினைக்ககூடிய அளவுக்கு செய்திகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. அந்தச் செய்திகள் வெளிவந்தமையால் இன்று இங்கு முஸ்லிம் சமூகத்தினர் சிறைக்கைதிகளாக மாற வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். திரிவுபடுத்தப்பட்ட செய்திகளால், வெளியிடங்களுக்குச் சென்று வர்த்தகம் செய்யமுடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. பயமின்றி வர்த்தகம் செய்யமுடியாதுள்ளது. இவ்வாறு இன்று நாங்கள் ஊடகங்களால் சிறைப்படுத்தப்பட்ட சமூகமாக மாறியிருக்கிறோம். இது மிக வேதனைக்குரிய விடயமாகும். இந்தப் பெருமை யாழ்ப்பாண முஸ்லிம் சமூகத்தைச் சிறைப்படுத்திய பெருமை எங்களுடைய ஊடகங்களுக்குத்தான் இருக்கிறது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்ல விரும்புகிறோம். செய்திகளை வெளியிடுகின்ற போது அந்தச் செய்திகளை உறுதிப்படுத்த வேண்டும். உறுதிப்படுத்தப்படாத செய்திகள் ஒரு மனிதனுடைய, ஒரு சமுதாயத்தினுடைய மானத்தைப் பறிக்கக் கூடியதாக இருக்கக்கூடாது. செய்திகள் திணிக்கப்பட்டதன், அல்லது மிகைப்படுத்தப்பட்டதன் காரணமாக இன்று முஸ்லிம்கள் இந்த நிலைமைக்கு ஆளாகியுள்ளார்கள். எங்களுடைய வேண்டுகோள் என்னவென்றால், உங்களால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள எங்களை இந்தச் சிறையில் இருந்து விடுவிக்ககூடிய பொறுப்பையும் ஊடகங்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

சந்திப்பில் கலந்து கொண்ட பள்ளிவாசல்களின் தலைவர்களும் இந்தக் கருத்தையே முன்வைத்தனர். யாழ்ப்பாணத்தில், பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்நகர், மண்கும்பான், நயினாதீவு போன்ற இடங்களில் வாழும் முஸ்லிம்களுடைய பெயர்கள் அண்மைக் காலமாக பத்திரிகைகளில் வெளிவருகின்றன. அந்தச் செய்திகள் திரிவு படுத்தப் பட்டே வெளிவருகின்றன. முஸ்லிம் மக்களும் தமிழ்பேசும் மக்களே. இவ்வாறன செய்திகளை வெளியிட்டு, தமிழ்பேசும் மக்களை இனி ஒருபோதும் பிரிக்க முற்படக்கூடாது என்றும் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (ம-21)

# நம்பிக்கையில்லா தீர்மானத்தால் இலாபம் கிடையாது

## எதிர்க்கட்சித் தலைவர் இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, மே 26

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும் எதிரணிக்கு எந்த இலாபமும் கிடைக்கப் பெறாது. மாறாக அமைச்சர் ரிசாட் பதியுதீனை பகைத்துக் கொள்ளவே நேரிடும் இவ்வாறு தெரிவித்தார் எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சி உறுப்பினார்களின் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை முறையாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் பல காரணிகளை குறிப்பிட்டுக் கொண்டு அரசு காலம் கடத்திக்கொண்டு வருகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து அமைச்சர் ரிசாட் பதியுதீனுக்கு எதிராக மக்கள் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்கள். கடந்த காலங்களிலும் பல குற்றச்சாட்டுக்கள் பல்வேறு தரப்பினரால் முன்வைக்க ப்பட்டன. மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்தே நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பினர்கள் நம்பிக்கையில்லா பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளார்கள்.



நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெற்றாலும், தோல்வியடைந்தாலும் எதிர்த்தரப்பினருக்கு எவ்வித இலாபமும் கிடைக்கப் பெறாது. மாறாக அமைச்சர் ரிசாட் பதியுதீன் எம்மீது வெறுப்பினை ஏற்படுத்திக் கொள்வது மாத்திரமே மிகுதியாகும் - என்றார். (ம-61)

# ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கெதிராக யாழ்.முஸ்லிம் மக்கள் போராட்டம்

## வரும் வெள்ளியன்று ஐந்து சந்தியில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 26

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிராகப் போராடுவதற்கு யாழ்ப்பாண முஸ்லிம் சமூகம் முன்வந்துள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் அந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு, மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர், முஸ்லிம் சமுகம் தொடர்பாக ஊடகங்களுடைய பார்வை, அல்லது செய்திகள் வெளியிடும் தன்மை தொடர்பான ஊடகவியாளர்கள் சந்திப்பு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் பெரிய முஹியித்தீன் ஜும் ஆப் பள்ளிவாசலில் இடம் பெற்றது. இந்தச் சந்திப்பின் போதே இந்த விடயமும் அறிவிக்கப்பட்டது.


ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கும், முஸ்லிம் மக்களும் எந்தவிதத் தொடர்பும் இல்லை,

அவர்கள் முஸ்லிம் மார்க்கத்தில் ஏற்றுக் கொள்ளப்படாதவர்கள் என்பதை வெளிப்படுத்தியும், நாட்டில் சமூக ஒற்றுமையைச் சீர் குலைக்காது அனைத்துச் சமூகங்களுடனும் ஒற்றுமையாக வாழ்வதே முஸ்லிம்களின் நோக்கம் என்பதை வலியுறுத்தியும், அதைத் தெரியப்படுத்தியும் ஐ.எஸ்.ஐ.ஏஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிராகப் போராடுவதற்கு யாழ்ப்பாண முஸ்லிம் சமூகம் முன்வந்துள்ளது என்று ஏற்பாட்டார்கள் தெரிவித்தனர். (ம-21)

# அபாயா நெருக்கடி நிலமை நல்லிணக்கத்துக்குக் கேடு

## கிழக்கு முன்னாள் முதல்வர் நஸீர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 26



அபாயகரமான ஆடையாக 'அபாயா' உருவகப்படுத்தப்படும் நடைமுறை தற்போது தோற்றம் பெற்றுள்ளது. ஆன்மீகக் கோட்பாடுகளுக்கு அமைவாக, ஒரு சமூகத்தின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கப் பயன்படுத்தப்பட்ட இந்த ஆடை அணிதல் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் நடைமுறைகள் நல்லிணக்கத்துக்கும் இனங்களுக்கும் இடையிலான புரிந்து ணர்தலுக்கும் எதிர்காலத்தில் பாதகங்களை ஏற்படுத்திவிடுமோ என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

உயிர்த்த ஞாயிறு சம்பவத்துக்குப் பின்னர் நாட்டின் பாதுகாப்புக் கருதி முகத்தை மறைக்கும் ஆடைகளை அணியக்கூடாது என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. பின்னர் அதில் திருத்தமும் செய்யப்பட்டது.

இத்தயை ஆடை ஆணிதல் என்பது முஸ்லிம் சமுகத்தினருக்கு மட்டும் உரித்துடையதாக இருக்கும் நிலையில் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் இதனால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவுக்குப் பின்னர் முகத்தை முழுமையாக மூடும் ஆடைகளை (புர்கா, நிகாப்) அணியாமல் சாதாரணமாக அபாயா அணிந்து தமது கடமைகளுக்குச் சென்ற ஆசிரியைகள், மாணவிகள், மருத்துவமனைக்குச் சென்ற பெண் நோயாளிகள், பஸ்களில் பயணம் மேற்கொண்ட பெண்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தனர். இந்த விவகாரம் தொடர்ந்தும் பல்வேறு வடிவங்களில் ஓர் அடக்குமுறையாக மாறி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

அவசரகால நிலமையைக் கருத்தில்கொண்டு முஸ்லிம் மக்கள் இந்த சட்ட அமுலாக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் நிலையில் சிலர் இதனைத் தவறாகப் புரிந்துகொண்டு தத்தமது சொந்த விருப்பங்களுக்கு அமைய இந்த ஆடை அணிதல் தொடர்பில் கருத்துக்களை பகிர்ந்து வருகின்றனர்.

தனிமனித சுதந்திரம் மறுக்கப்படுகின்றமைக்கு அப்பால் கலாசாரப் பாரம்பரியங்களை வேரறுக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது என்றே கருதவேண்டியுள்ளது. எனவே, இந்த விடயத்தில் முஸ்லிம் மத மற்றும் அரசியல் தலைமைகள் விழிப்புடன் செயற்பட வேண் டியது அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன் - என்றுள்ளது. (எ-22)

# இரணைமடுக்குள சிறுபோகத்தில் 700 ஏக்கரில் அத்துமீறிய செய்கை!

*யாழ்ப்பாணம், மே 26*

*கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு குளத்தின் கீழ் 2019ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையின்போது அனுமதிக்கப்பட்ட அளவீடுகளை விடவும் சுமார் 700 ஏக்கர் நிலம் அத்துமீறலாக மேலதிகமாக விதைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.*

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்தின் கீழ் இம்முறை 15 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையும் 500 ஏக்கர் சிறுதானியமும் அனுமதிக்கப்பட்டு அதற்கேற்ப அளவீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுச் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பலர் மேலதிக விதைப்பிலும் ஈடுபட்டுள்ளதாக முறையிடப்பட்டது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் திணைக்களங்கள் கமக்கார அமைப்புக்களின் உதவியுடன் அளவீட்டில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறு இடம்பெற்றுவரும் அளவீடுகளில் இதுவரை சுமார் 700 ஏக்கர்களில் மேலதிக விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளமை கண்டறிப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு இனம் காணப்பட்ட அளவுகளில் அதிக பட்சமாக பெரியகுளம் பகுதியில் 200 ஏக்கரும், குமரபுரத்தில் 150 ஏக்கரும், வலதுகரை 70 ஏக்கர் பகுதி என அழைக்கப்படும் பிரதேசத்தில் 100 ஏக்கரும் காணப்படுவதோடு பழைய வட்டக்கச்சியின் உடையார் வளவை அண்டிய பகுதிகளில் 150 ஏக்கர் நிலமும் அடையாளம் காணப்பட்டு கமநல சேவைத் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம் என்பவற்றுக்குத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேநேரம் அளவீட்டுப் பணிகள் முழுமை பெறாது தொடர்ந்தும் இடம்பெறும் நிலையில் இதன் அளவுகள் மேலும் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளதாகவே தெரிவிக்கப்படும் நிலையில் இது தொடர்பில் கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் ஆயகுலனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் தெரிவித்ததாவது:

"இந்த முறை சிறுபோகத்தில் ஆயிரம் ஏக்கரை அண்மித்த அளவில் மேலதிக விதைப்பு இடம்பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனால் உரிய தகவல்கள் அனைத்தும் திரட்டப்பட்டு உடனடியாக மாவட்டச் செயலர் தலைமையிலான விவசாயக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது. அங்கே நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தரவுகளும் கவனம் செலுத்தப்பட்டு இறுதித் தீர்மானம் எட்டப்படும். அந்த முடிவு நடைமுறைப்படுத்தப்படும். இதேநேரம் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு மேலதிக விதைப்பு இடம்பெற்றவேளையில் தீர்மானத்துக்கு அமைய அழிப்புச் செய்யப்பட்டவேளை பல விமர்சனம் எழுந்த நிலையில் அதே ஆண்டு மேலதிக விதைப்பை மேற்கொண்ட பலர் இம்முறையும் மேலதிக விதைப்பை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது" - என்றார்.

இது தொடர்பில் மாவட்டச் செயலரும் விவசாயக் குழுவின் தலைவருமானசு.அருமைநாயகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் நீர் வரத்து தொடர்பில் கவனம் செலுத்தப் "பட்டு அவற்றுக்கு சாத்தியம் இல்லையேல் அனுமதிக்கப்பட்ட அளவு நெற்பயிரைக் காக்கும் நோக்கிலும் கடந்தகால தீர்மானத்தை மீறாத வகையிலும் கண்டிப்பாக அவை அனைத்தும் உழுது அழிக்கும் நிலமையே ஏற்படும்" என்றார். (ம-105)

## பசுமாடு திருட்டு என்று பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, மே 26

வவுனியா மூன்று முறிப்பு பகுதியிலுள்ள பட்டியிலிருந்து பசுமாடு திருட்டு போயுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா மூன்று முறிப்பு பகுதியிலுள்ள வீட்டில் வளர்த்து வந்த பசு மாட்டைக் கடந்த இரு தினங்களாக எங்கு தேடியும் காணவில்லை. பட்டிக்கும் வராத காரணத்தால் பசுவின் உரிமையாளர்களால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-222)



## நெடுங்கேணி பொதுநோக்கு மண்டபம் சீரமைப்பு

யாழ்ப்பாணம், மே 26

இடர் ஏற்படும் போது பொதுமக்களைப் பாதுகாப்பாகத் தங்க வைக்கும் வகையில் நெடுங்கேணி தெற்கு பொது நோக்கு மண்டபம் 10 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்படுகிறது என்று தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலைய மாவட்ட இணைப்பாளர் எஸ். தனுராஜ் தெரிவித்தார்.

மழை மற்றும் வெள்ளம் உள்ளிட்ட ஏதாவது இடர்கள் ஏற்படும் போது மக்களை பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நெடுங்கேணி தெற்கு பொது நோக்கு மண்டபமும் ஒன்றாகும். வவுனியா வடக்கு, நெடுங்கேணி பகுதி மக்களைப் பாதுகாப்பாக தங்க வைக்கும் வகையில் நெடுங்கேணி தெற்கு பொது நோக்கு மண்டபம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் அதில் சில திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

இந்த நிலையில், குறித்த மண்டபத்தின் திருத்த வேலைக்காக தேசிய இடர் சேவைகள் நிலையத்தால் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போது அதன் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ம-222)

## விதி மீறல் காரணமாக சாரதிகளுக்கு தண்டம்

கிளிநொச்சி, மே 26

வெள்ளைக் கோட்டில் வாகனத்தை முந்திய இரு சாரதிகளுக்குத் தலா ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீதியில் உள்ள வெள்ளை கோட்டில் வைத்து ஏனைய வாகனங்களை முந்தி செல்ல முற்பட்ட இரு சாரதிகள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் காரணத்தால் அவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ம-6)

## மீளக் குடியமர்ந்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள்

தெல்லிப்பழை, மே 26

தெல்லிப்பழை பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான சுயதொழில் வாழ்வாதார உதவிப் பொருள்கள் மற்றும் நிதி உதவிகள் நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

மீன்பிடி வெளியிணைப்பு இயந்திரங்கள், மீன்பிடி உபகரணங்கள், சுயதொழிலுக்கான நிதி உதவிகள் போன்றவை பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டன. பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெற்ற உதவிப் பொருள்கள் கையளிக்கும் நிகழ்வில் பிரதேச செயலக அதிகாரிகளும் அந்தப் பகுதி மதகுருவும் கலந்து கொண்டு உதவிப் பொருள்களை வழங்கினர். (ம-9)





## பளை பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளின் கண்ணாடிகள் உடைப்பு

கிளிநொச்சி, மே 26

பளை பொது பேருந்து நிலையத்தில் காணப்படுகின்ற கடைகளின் கண்ணாடிகள் தொடர்ச்சியாக உடைக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டு வருகிறது என்று பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பளை பொது பேருந்து நிலையத்தின் கீழ்பகுதியில் கண்ணாடிகளால் சீரமைக்கப்பட்ட இரண்டு கடைகள் காணப்படுகின்றன. குறித்த கடைகளை யாரும் வர்த்தக நடவடிக்கைக்காக எடுக்காத நிலையில் தொடர்ச்சியாக அங்கு பொருத்தப்பட்டிருக்கும் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டு வருகின்றன. இரவு நேரங்களில் மதுபோதையில் வருகின்ற இளைஞர்கள் இவ்வாறு கண்ணாடிகளை அடித்து நொருகுன்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது தொடர்பாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளரிடம் கேட்டபோது, இவை தொடர்சியாக அவதானிக்கப்பட்டு தற்போது பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரைக்கும் சுமார் 1.5 லட்சம் ரூபா பொறுமதியான கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளன - என்று தெரிவித்தார். (ம-6)

## ஒட்டுசுட்டானில் விவசாயிகள் மதிப்பளிப்பும் வயல் விழாவும்

முல்லைத்தீவு, மே 26

சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் மதிப்பளிப்பு மற்றும் வயல் விழா முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உலகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்களத்தால் செய்கை செய்யப்படுகின்ற உற்பத்திகள், நவீன இயந்திரங்களின் செயற்பாடுகள், வறட்சியின்போது பயிர்கள் பராமரிக்கும் முறை தொடர்பில் விளக்கம் கொடுக்கப்பட்டது.

சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள், சிறந்த சேதன செய்கையாளர்கள், சிறந்த நிலக்கடலைச் செய்கையர்ளர்கள், சிறந்த உயர் அடர்த்தி முறையிலான மாமரச் செய்கையாளர்கள், சிறந்த வர்த்தக ரீதியிலான பயிர்ச் செய்கை உற்பத்தியாளர்கள் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர். (எ-222)



## முதியவர் கொலை: சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

தென்மராட்சி, மே 26

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவியில் கடந்த 30ஆம் திகதி நடந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 10 பேரின் விளக்க மறியலையும் சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் நீடித்தது.

கடந்த 30ஆம் திகதி இரவு பாலாவியில் நடத்தப்பட்ட தாக்குதலில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். 8 பேர் காயமடைந்தனர். இது தொடர்பாகப் பொலிஸார் 10 பேரைக் கைது செய்திருந்தனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நேற்றுமுன்தினம்வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேக நபர்களின் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் பிணை மனுத் தாக்கல் செய்தனர். பிணை வழங்க மறுத்த நீதிமன்று எதிர்வரும் 6ஆம் திகதிவரை சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (எ-9)

# கிளி. கௌதாரிமுனையில் சட்டவிரோத மணல் அகழ்வு

## புவிச் சரிதவியல் திணைக்களத்துக்கு மாவட்டச் செயலர் கடிதம்

யாழ்ப்பாணம், மே 26

கிளிநொச்சி கௌதாரிமுனையில் மாவட்ட நிர்வாகங்களின் முறையான அனுமதி இன்றி அகழப்படும் மணல் அகழ்வை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு புவிச் சரிதவியல் திணைக்களத்துக்கு மாவட்டச் செயலர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கௌதாரிமுனைப் பகுதியில் மணல் அகழ்வுக்காக 2018ஆம் ஆண்டு 6 தனி நபர்கள் அனுமதிக்காகப் பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பித்திருந்தனர்.

இவ்வாறு விண்ணப்பித்தவர்களுக்கு அனுமதி வழங்குவதை அந்தப் பகுதி மக்களும் பொது அமைப்புக்களும் விரும்பாத காரணத்தால் குறித்த தகவலுடன் பிரதேச செயலர் மாவட்டச் செயலருக்கு அனுப்பியிருந்தார்.

இவ்வாறு மாவட்டச் செயலகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராயப்பட்ட நிலையில் குறித்த இடத்தில் மணல் அகழ்வுக்கு அனுமதிக்க முடியாது என தீர்மானிக்கப்பட்டு அந்தத் தீர்மானம் உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புவிச் சரிதவியல் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சகோதரனுக்கு மணல் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட்ட நிலையில் தற்போது அங்கே வகை தொகையற்ற மணல் அகழ்வு இடம் பெறுகின்றது.

இதனை அப் பகுதி அமைப்புக்கள் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற நிலையில் பிரதேச செயலர் மாவட்டச் செயலரின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

இவற்றின் அடிப்படையில் மாவட்ட நிர்வாகம் உரிய முறையிலான பரிந்துரைகள் இன்றி வழங்கப்பட்ட அனுமதியை உடனடியாக இல்லாமல் செய்யுமாறு மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இது தொடர்பில் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "பிரதேச செயலரின் பரிந்துரை உரிய அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தது. (ஐ-105)

### இறந்தோரின் ஆத்ம சாந்தி வேண்டி வழிபாடு

கொழும்பு, மே 26

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலை குண்டுதாக்குதல் சம்பவங்களில் உயிரிழந்த மற்றும் படுகாயமடைந்தவர்களுக்கான சிறப்புத் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கொழும்பு மறைமாவட்ட சமூக தொடர்பாடல் மற்றும் கலாசார கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் எட்மன் திலகரட்ண அடிகளார் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தத் திருப்பலி ஆராதனை கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் காலை 7.30 மணியளவில் பொரளையில் அமைந்துள்ள பேராயரின் இல்லத்தில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (ம-61)

### தாக்குதலில் இறந்தோருக்கு அஞ்சலி

கொடிகாமம், மே 26

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

துணுக்காய் பிரதேச சபையின் அமர்வு கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது தவிசாளரால் குண்டுத் தாக்குதல்களைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்று சபையில் சமர்பிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டதையடுத்து கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட உயிர்கள் சாந்தியடைய மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.(ஐ-159)



### வீதி சீரமைப்பு பணிகள் ஆரம்பம்

முல்லைத்தீவு,மே 26

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதியில் உள்ள சாய்பாப கோவில் வீதியின் சீரமைப்புப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் 7 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த வீதிக்கு கிரவல் இட்டு செப்பனிடும் வேலைத்திட்டப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. கிராம அபிவிருத்தி சங்கத்தினர், கமக்கார அமைப்பினர், கிராம சக்தி நிர்வாகத்தினர், கிராம அலுவலகர் ஆகியோர் கலந்து கொண்டு வீதி செப்பனிடும் பணியைத் தொடக்கி வைத்த னர். (ஐ-ரி3)

### தேசியரீதியிலான பன்னாட்டுச் செஞ்சிலுவை தின நிகழ்வு இம்முறை முல்லைத்தீவில் இடம்பெற்றது


முல்லைத்தீவு, மே 26

பன்னாட்டு செஞ்சிலுவை செம்பிறை தின தேசிய ரீதியிலான நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செஞ்சிலுவை கிளையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

"மனிதாபிமானம் மற்றும் இயற்கையை நேசிப்போம்" என்கின்ற கருட் பொருளில் இவ் வருடம் இவ் நிகழ்வு கொண்டாடபட்டது.

தேசியக் கொடி மற்றும் செஞ்சிலுவைக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமானது. இந்த தேசிய நிகழ்வு முல்லைத்தீவில் கொண்டாடபட்டமைக்கான நினைவுச் சின்னம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜெகத் அபேசிங்கவால் திரைநீக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து இழந்த எமது உலகத்தைப் புதுபிப்போம் என்கின்ற உறுதியுடன் மரக் கன்றுகள் நடும் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவை சங்கத் தலைவர் ஜெகத் அபேசிங்க, முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் மகேஸ் குணசேகர, பன்னாட்டு செஞ்சலுவை சங்கப் பிரதிநிதி மார்க் சோபா உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-ரி3)






### வவுனியா – நாவற்குழி வரை ஜூன் 5 ஆம் திகதி மரநடுகை

கொடிகாமம், மே 25

வடக்கு மாகாண ஆளுநரின் மரநடுகைத் திட்டத்தின் கீழ் ஒருதொகுதி மரங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி வவுனியா தொடக்கம் நாவற்குழி வரையிலான ஏ-9 முதன்மை வீதியில் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மீசாலை புத்தூர் சந்தியிலிருந்து எழுதுமட்டுவாழ் சந்தி வரையிலான பகுதியில் சுமார் 250 மரக்கன்றுகள் முதல் கட்டமாக நடப்படவுள்ளன. அந்தந்தப் பிரதேச சபைகள் தத்தம் எல்லைகளுக்குள் நடப்படும் மரங்களை முறைப்படி கண்காணிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9,159,131)

### போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 26

போதைப் பொருளை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மன்னாரில் ஒருவர் ஊழல் ஒழிப்புப் பிரிவின்ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு சாந்திபுரம் பாடசாலைக்கு அருகில் இராணுவத்தினருடன் இணைந்து ஊழல் ஒழிப்புப் பிரிவினர் சோதனை நடத்தினர் என்றும், அதன்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேல்திக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.(எ-213)

### திருமலை வளாக கற்றல் செவ்வாயன்று

மட்டக்களப்பு, மே 26

கிழக்குப் பல்கலைக் கழக திருகோணமலை வளாகத்தின் அனைத்து பீடங்களுக்கும் உரிய மாணவர்களுக்குரிய கல்விசார் நடவடிக்கைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன. குறித்த வளாக மாணவர்கள் நாளை மாலை 6 மணிக்கு முன் பாகவிடுதிகளுக்குவருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### மீளாய்வு கலந்துரையாடல்



கொடிகாமம்,மே 26

சமகால முன்னேற்ற செயற்பாடுகள் தொடர்பானமீளாய்வுக்கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் தலைமை காரியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர்கள், தொகுதி காரியாலய இணைப்பாளர்கள், உள்ளூராட்சி சபைகளில்பிரதிநிதித்துவம் வகிக்கும் உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்திருந்து மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள், கிராம சக்தி செயற்திட்ட முன்னெடுப்புக்கள் தொடர்பாக கலந்துரையாடினர் . (ஐ-159)

சூரியகாந்தி
உதயன்

பக் 12



இந்தியாவில் மோடி!

பக் 11
இராணுவ மயப்படும் ஜனநாயகம்



விமர்சனம்
மான்ஸ்டர்




பக் 15

# தலை தப்புமா?



■ நியூட்டன் .

அதி மேற்றிராணியார் மல்கம் ரஞ்சித் ஆண்டகை 19.5.2019 அன்று சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட எதிர் நடவடிக்கைகள் அனைத்தும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அரசியல்வாதிகள், முப்படையினர் என எல்லோருமாக அந்தப் படலத்தை மூடிவிடுகின்ற நிலை காணப்படுகின்றது: விடுத்து இந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்குக் காரணமாக இருந்தவர்கள் கண்டறியப்பட்டு உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்ற சாரப்படக் கருத்துரைத்தார்.

10

# கலப்பை இயந்திரத்தை வழங்காவிட்டால் செலுத்திய பணத்தைத் திருப்பித் தாருங்கள்

## தென்மராட்சி விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 26

ஊடுபயிர் கலப்பையுடனான புதிய இயந்திரத்தை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கமுடியாதெனில் தம்மால் செலுத்தப்பட்ட பணத்தை மீள வழங்க வேண்டும் என்று தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வருடம் மாவட்டச் செயலகத்தால் விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் ஊடு பயிர் கலப்பையுடனான இயந்திரம் வழங்கப்படவுள்ளதால் தேவையான விவசாயிகளை விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் இயந்திரத்துக்கு விண்ணப்பித்து 50 வீத மானியத் தொகை (37 ஆயிரம்) ரூபா செலுத்தியுள்ளனர். அறிவிக்கப்பட்டபடி இயந்திரங்கள் மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டு தென்மராட்சி பிரதேசத்தில் வைத்து வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட இயந்திரம் சந்தையில் 32 ஆயிரம் ரூபா விற்பனை செய்வதையறிந்த விவசாயிகள் இயந்திரத்தைப் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக பிரதேச செயலகத்தினர் மாவட்டச் செயலகத்துக்கு அறிவிக்கவே தவறுதலாக வேறு இயந்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளதால் அவற்றை மீளப்பெறுமாறும் புதிய இயந்திரம் விரைவில் வழங்கப்படுமென அறிவித்திருந்தனர்.

3 மாதத்தின் பின்னர் இயந்திரங்கள் அனுப்பப்பட்டு விவசாயிகளுக்கு அறிவிக்கவே அவர்கள் வந்து பார்த்து ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட இயந்திரத்துக்கு வர்ணம் பூசியுள்ளதால் புதிய இயந்திரம்வழங்குமாறு கோரியிருந்தனர்.

ஆனால் இதுவரை புதிய இயந்திரம் வழங்கப்படவில்லை.

தற்போது உற்பத்தி செய்யப்பட்ட பயிர்களுக்கு இயந்திரத்தின் அவசியம் குறித்து முறையிடும் விவசாயிகள் தமக்கு முன்னர் அறிவிக்கப்பட்டபடி மானிய விலையிலான இயந்திரத்தை வழங்குமாறும் இல்லையேல் தம்மால் வழங்கப்பட்ட பணத்தை மீள வழங்குமாறு கோரி வருகிறோம் எனவும் இதுவரை புதிய இயந்திரம் வழங்கபடவில்லையெனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பிரதேச செயலக அதிகாரிகளிடம் கேட்டபோது, "ஊடு பயிர் கலப்பையுடனான இயந்திரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டதால் அங்கு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயலக விவசாயப் பிரிவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த விடயம் தொடர்பில் முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை" என்றனர். (ஜ-7,9)

# தொடர்ச்சியான மண் அகழ்வைத் தடுக்க பொலிஸ் பாதுகாப்புப் போடவேண்டும்

## சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவிப்பு

கொடிகாமம் மே 26

தென்மராட்சிப் பிரதேசத்தில் மறவன்புலவு, தனங்களப்பு, கெற்பேலி, பாலாவி ஆகிய பகுதிகளில் மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்த அண்மைக் காலமாக நடவடிக்கை எடுத்தும் அதற்கான தீர்வுகள் கிடைக்காது மறவன்புலவு, தனங்களப்பு, கெற்பேலி, பாலாவி ஆகிய பகுதிகளில் நெல்வயல்களின் வரம்புகளையும் ,வயல் மணல்களையும் வாகனங்களில் ஏற்றிச் செல்வதாக பொது மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர்கள் கடந்த சபை அமர்வில் தெரிவித்தனர்.

"மணல் அகழ்வு தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்தாலும் அவர்கள் அங்கு வருவதில்லை. கெற்பேலி ,பாலாவி பகுதிகளில் மணல் அகழ்வைத் தடுக்கவும், அதனால் ஏற்படும் வாள்வெட்டுச் சம்பவங்களைத் தடுக்கவும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

அதே போன்று மறவன்புலவு, தனங்களப்பு பகுதிகளுக்கும் பொலிஸ் பாதுகாப்புப் போட வேண்டும். பொலிஸ் பாதுகாப்பு இருந்தால் பொலிஸார் மணல் அகழ்வோருக்கு உடந்தையாக இருக்க முடியாது. பொலிஸ் காவலில் இருக்கும்போது மணல் அகழ்வு நடைபெற்றால், அவர்கள் தான் பொறுப்பு கூற வேண்டும்.

அத்துடன் மணல் அகழ்வுச் செய்திகள் பத்திரிகையில் பிரசுரிப்பதில்லை. அண்மையில் மறவன்புலவு பகுதியில் டிப்பர், ஹன்டர் வாகனங்களில் மணல் ஏற்றியவர்களை வட்டார உறுப்பினரும் கிராம மக்களும் இணைந்து பிடித்து 119 சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தும் அவர்கள் அந்த இடத்துக்கு வரவில்லை. நாம் எச்சரிக்கை செய்து அனுப்பினோம். எனவே மணல் அகழ்வோரைப் பிடித்து வைத்து ஒரு பிரயோசனமுமில்லை. பொலிஸ்மா அதிபர், மாவட்டச் செயலர் ஆகியோருடன் கதைத்து இதற்கான தீர்வை எடுக்க வேண்டும்" என்றனர்.

இதற்கு தவிசாளர் பதிலளிக்கையில், "மணல்ஏற்றுவதை தடுப்பதற்கு தனிமனித சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் இவ்விடயத்தை முன்மொழிவாக சபையில் சமர்ப்பித்து தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு மாவட்டச் செயலர் மூலம் தடுப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்" எனத் தெரிவித்தார். (ஜ-159 ,9)



# சின்னக்கிணற்றடி வீதி சீரமைப்பு

யாழ்ப்பாணம்,மே 26

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் அரியாலையில் சின்னக்கிணற்றடி வீதி முழுமையாகச் சீரமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 17ஆம் வட்டாரமான அரியாலை மேற்கில் உள்ளடங்கியுள்ள நாவலர் வீதியையும் ஏ-9 வீதியையும் இணைக்கும் சின்னக்கிணற்றடி வீதியே சீரமைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பரிந்துரையின் கீழ் இடம் பெற்று வரும் இந்தப் பணிகளை யாழ்ப்பாண மாநகரசபையின் பிரதி முதல்வர் து.ஈசன் மற்றும் 2 ஆம் வட்டார தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந் ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை நேரில் பார்வையிட்டனர்.

மிக நீண்ட நாள்களாகச் சீரமைக்கப்படாத வீதியைச் சீரமைத்து வழங்கியமைக்காக மக்கள் நாடாளுமன்ற உறுப்பினருக்கும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர். (ஜ)





# பழைமை வாய்ந்த இரு மரங்கள் தறிப்பு

அனலைதீவு, மே 26

அனலைதீவு காளி அம்பாள் ஆலயத்துக்கு அருகில் காணப்பட்ட நூற்றாண்டு காலம் பழைமை வாய்ந்த இரு மரங்கள் கனரக வாகனம் மூலம் வெட்டிவீழ்த்தப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

மரங்கள் தெய்வங்களுக்குச் சமமாக மதிக்கப்படும் இந்தக்காலகட்டத்தில் கோவிலுக்கு வரும் அடியார்களுக்கு நீண்டகாலமாக நிழல் கொடுத்து வந்த இரு மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டமையால் அப் பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர். (ஜ-9)

# முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம்,மே 26

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 20 பேருக்கு அடுத்த கட்டமாக வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்தில் நேற்று இடம்பெற்றது என்று அவரது ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் பழனியாண்டி நந்தகுமார் மற்றும் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் விஸ்வநாதன் வித்தியா னந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ)

# விளையாட்டு உபகரணங்கள் பழுதால் சிறுவர்களின் ஆரோக்கியத்தில் பாதிப்பு

## சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி,மே 26


சிறுவர் பூங்காவில் உள்ள விளையாட்டு உபகரணங்கள் பழுதடைந்து காணப்படுவதால் சிறுவர்களின் பாதுகாப்புக் கருதி அதனை விரைவில் சீரமைக்க வேண்டும். இவ்வாறு சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் திருமதி இ.ஜானகி தெரிவித்தார்.

சாவகச்சேரிப் பிரதேச சபை அமர்வு கடந்த புதன்கிழமை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது சாவகச்சேரிப் பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்துடன் இணைந்த சிறுவர் பூங்காவில் பொருத்தப்பட்டிருந்த பல விளையாட்டு உபகரணங்கள் பழுதடைந்து காணப்படுகிறன. இதனால் சிறுவர்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

எனவே பழுதடைந்து காணப்படும் விளையாட்டு உபகரணங்களைச் சீரமைத்து வழங்க வேண்டும் என்று முன்மொழிவைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர், இது தொடர்பாக சபையின் தொழில்நுட்ப அலுவலர் மூலம் பார்வையிட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னர் பழுதடைந்து காணப்படும் விளையாட்டு உபகரணங்கள் திருத்தி வழங்கப்படும் - என்றார். (ஜ-159)

**குண்டுத் தாக்குதல் தற்போது சிங்களவர் – முஸ்லிம் பிரச்சினையாக மாற்றமடைந்திருக்கிறது. பெரும்பான்மைச் சிங்களவர்கள் முஸ்லிம்களை எவ்வாறு பார்க்கின்றனர் என்பதைக் கண்டறிந்து அவர்களது சந்தேகத்தைப் போக்கும் நிலைக்கு முஸ்லிம் தலைவர்களதும் மதத் தலைவர்களும் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.**





உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை முன்னெடுத்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் மீதான நடவடிக்கைகள், அவர்களால் பாதிக்கப்பட்ட அதிகளவான தமிழ்க் கிறிஸ்தவர்களின் ஆறாத் துயர் எனப் பலவித விடயதானங்களைக் கடந்த இந்தச் சம்பவம் பின்னாளில் நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரமாகியது. தற்போது அந்த நிலை தணிக்கப்பட அது முஸ்லிம் அமைச்சர் றிசாத் பதியுதீனின் தலைக்கு வைக்கப்பட்ட குறியாகியிருக்கிறது. அதிமேற்றிராணியார் கூறியதற்கு அமைவாகத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்த சந்தேகக் கண் றிசாத் பதியுதீன் மீது ஆழ இறக்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றில் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**அரசியல்வாதிகளின் வீணடிப்புகளுக்குச் சட்ட இறுக்கம் தேவை**

இலங்கைச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினரோ, அமைச்சரோ, அரச அலுவலர்களோ இவர்கள் அனைவரும் அரச கட்டமைப்பில் இணைவதற்குச் சத்தியப் பிரமாணம் செய்யும்போது, இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் இறைமைக்குப் பாதிப்பற்ற வகையிலும், பிரிவினையை ஏற்படுத்தாத வகையிலும் அவ்வாறான செயற்பாடுகளைத் தூண்டுகின்ற எந்தச் செயற்பாட்டிலும் ஈடுபட மாட்டோம் என்பதாகவும் உறுதிபூண்டிருப்பர். ஆனால் அவர்கள் அனைவரும் பின்னாளில் அதைப் பின்பற்றுவது அரிது. அது குறித்த சட்ட இறுக்கங்களும் மலினம். இதனடிப்படையில் குறிப்பிட்ட இந்தத் தரப்பினர் தமக்குக் கிடைக்கின்ற அரச வரப்பிரசாதங்கள், சலுகைகளைத் தவறடிப்பர். தமது உத்தியோகபூர்வக் கடிதத் தலைப்புகளில் சிபாரிசுக் கடிதங்களை வழங்குதல், தமது வாகனங்களில் தடை செய்யப்பட்ட பொருள்களை ஏற்றிச் செல்லல், குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்களை ஏற்றிச் செல்லல், ஆயுதம், போதைப் பொருள் போன்றனவற்றைக் கடத்துவது, தமக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மற்றவர்கள் பயன்படுத்த அளிப்பது, தமக்கு வழங்கப்பட்ட தொலைத் தொடர்புக் கருவிகள் ஊடாக உத்தியோகப் பற்றற்ற விடயங்களை மேற்கொள்வது என எல்லாமே அவர்களின் பதவி ஏற்றபின் செய்யப்படுகின்ற சத்தியப் பிரமாணத்துக்கு முரணாணவையே. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட இறுக்கத்தை மேற்கொண்டு அவற்றைக் கட்டுக்குள் வைத்திருப்பது அரச கட்டமைப்பின் அவசியம் ஆகும். இந்த வீணடிப்பு கள் காரணமாக இடம்பெறக்கூடிய அசம்பாவிதங்களை இதன் மூலமே தடுக்க முடியும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுடன் நேரடியாகத் தொடர்புபட்ட பெரு வர்த்தகரான இப்ராஹிமுடன் றிசாத் பதீன் வைத்திருந்த தொடர்பு காரணமாகத் தொடர்ச்சியாக றிசாத் பதியுதீன் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு படுத்தப்பட்டு வருகிறார் இறுதியாக முக்கிய நபர் ஒருவரின் கைது தொடர்பில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் அவர் மீதான குற்றச்சாட்டுகள் நீண்டு செல்கின்றன. இராணுவத் தளபதியைக் கையாண்டு தனது செல்வாக்கைப் பயன்படுத்த முனைந்திருக்கிறார் றிசாத் என்று பல தரப்பினராலும் கருதப்படுகிறது.

**தீர்வைக் காண வேண்டியவர்கள் முஸ்லிம்களே**

இராணுவத் தளபதியானவர் அதற்கான தொழில் ரீதியான உள்ளடக்கத்தைக் கொண்டவர். அரச கட்டமைப்பில் புகுவதற்கு அவருடைய தனிப்பட்ட திறமைகளே செல்வாக்குச் செலுத்தும். ஆனால், அரசியல்வாதிகள் அவ்வாறல்ல. தேர்தலில் தோற்கடிக்கப்பட்டால் வீடு திரும்ப வேண்டும். மக்களே இவர்களைத் தீர்மானிப்பர். தற்போதைய சூழலில் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரிகளை வளர்த்துவிட்டவர்கள் அல்லது தாக்குதல் நடத்தும் வரையான தொடர்புகளை வைத்திருந்தவர்கள் என்ற அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊடகங்கள், மக்கள், பாதிக்கப்பட்டவர்கள் எனப் பல தரப்பிலும் தாக்குதலுக்கான மூல வேரைத் தேடி அழிக்க வேண்டும் என்ற எண்ணம் அதிகரித்திருக்கிறது. ஐ.எஸ்.ஐ.எஸ் என்கிற இந்த அமைப்பில் ஏனைய இனத்தவரே, மதத்தவரோ இணைய முடியாத நிலை இருப்பதால் இந்த விசாரணைகள் தனியாக முஸ்லிம்களை மட்டும் குறி வைப்பது தவிர்க்க முடியாதது ஆகிறது. அத்தோடு இதற்கான தீர்வைக் காண வேண்டியவர்களும் முஸ்லிம்களே. அவர்கள் தான் யார் பயங்கரவாதிகள்? யார் சாதாரண மக்கள்? என்பதைத் தம்மிடையே இருந்து பிரித்தெடுத்துத் தகவல் வழங்கவேண்டியுள்ளது. இவ்வாறான ஒரு நடைமுறையை முஸ்லிம் மக்கள் மேற்கொள்வதற்குத் தாமதிக்கின்ற ஒவ்வொரு நாளும் முழு முஸ்லிம்களும் பயங்கரவாதிகள் என்ற எண்ணப்பாடு மற்றையவர்களின் மனதில் இருப்பதே தற்போதைய நிலையாக இருக்கிறது.

**தார்மீகப் பலத்தை இழந்த முஸ்லிம்கள்**

தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து முஸ்லிம்களின் பகுதிகள் அதிகம் குறி வைத்துச் சோதனை நடத்தப்படுவது தவிர்க்க முடியாததாகி இருக்கிறது. இத்தோடு பெரும்பான்மைச் சிங்கள மனோநிலையும் இணைந்து செயலாற்றுவதால் முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறைகள் அதிகரிப்பதே வாய்ப்பாகியுள்ளது. பள்ளிவாசல்களுக்குள் இராணுவம் அல்லது பொலிஸார் தேடுதல்களை நடத்தும்போது சப்பாத்துகளுடன் உட்செல்லவும், மோப்ப நாய்களை உள்ளே கூட்டிச் செல்லவும் வேண்டி ஏற்படுகிறது.

இதை அனுமதிக்க முடியாது என்கின்ற முஸ்லிம் அமைச்சர்கள் அத்தகைய சூழலை ஏற்படுத்திய, சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் அளவுக்குத் தமது வழிபாட்டிடத்தை மாற்றியமைத்த பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.


மட்டக்களப்பு - சியோன் தேவாலயத் தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலையாளி அதற்கு முன்பாக மட்டக்களப்புப் பள்ளிவாசலுக்குள் தனது குண்டுப் பொதியை வைத்துவிட்டு, தொழுதுவிட்டுப் பின்னர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார் என்று கூறப்படுவதாலும், அதன் பின்னர் பல பள்ளிகளின் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டதாலும் பள்ளிவாசல்களுக்குள் இவ்வாறாகத் தேடுதல் நடத்தக்கூடாது என்று கூறுவதற்கான தார்மீகப் பலத்தை முஸ்லிம்கள் இழந்து விட்டனர் என்றே கருத வேண்டியுள்ளது.

**கருத்துக்கள் வன்முறையைத் தூண்டலாகாது!**

குண்டுத் தாக்குதல் தற்போது சிங்களவர் - முஸ்லிம் பிரச்சினையாக மாற்றமடைந்திருக்கிறது. பெரும்பான்மைச் சிங்களவர்கள் முஸ்லிம்களை எவ்வாறு பார்க்கின்றனர் என்பதைக் கண்டறிந்து அவர்களது சந்தேகத்தைப் போக்கும் நிலைக்கு முஸ்லிம் தலைவர்களதும் மதத் தலைவர்களும் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால், முஸ்லிம் தலைமைகளின் கருத்துக்கள் நிலைமையைச் சீராக்கும் வகைகளில் இல்லாமல் அவை சிங்கள மக்களைக் கோபப்படுத்துபவையாகவே உள்ளன. வவுனியாவைச் சேர்ந்த மௌலவி ஒருவர் இது குறித்த ஒரு கானொலியை வெளியிட்டு விட்டுச்சவூதிக்குச்சென்றுதிரும்புப்போது கைது செய்யப்பட்டார். இது ஏனைய மௌலவிகளையும் கேள்விக்குட்படுத்தியிருக்கிறது.

அத்துரலிய ரத்தின தேரரால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் கையெழுத்துடன், றிசாத் பதியுதீன் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானம் ஜீன் மாதம் 18, 19 ஆகிய திகதிகளில் நாடாளுமன்றில் விவா தத்துக்கு எடுக்கப்படும் என்று சபாநாயகர் அறிவித்திருக்கிறார். 3 வாரங்கள் தாமதமாகக் குறித்த தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவிருப்பது எதிர்க் கட்சியினர் தரப்பில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த 3வார காலத்துக்குள் முக்கிய தடயங்கள் பலவற்றை அழித்துவிட வாய்ப்புண்டு என்பது அவர்களின் வாதமாக இருக்கிறது. இந்தத் தீர்மானம் சபையில் எடுக்கப்படுவதற்கு முன்னர் றிசாத் தனது அமைச்சுப் பதவியைத் துறந்தாலும் அதன் பின்னர் அவருக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகப்படுத்தப்படவே வாய்ப்புண்டு.

இறுதிப் போரை முன்னின்று நடத்திய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவையே சிறையில் அடைத்தது என்கிற பெருமைக் கிரீடத்தை அணிந்துள்ள பெரும்பான்மைச் சமூகத்துக்கு றிசாத்தின் விவகாரத்தைக் கையாள்வது இலகு என்பதும் பலரின் கணிப்பு.



சந்திரசேகர ஆசாத்

# இராணுவ மயப்படும் ஜனநாயகம்

ஜனநாயக ஆட்சியும் இராணுவ ஆட்சியும் ஒன்றுக்கொன்று விரோதமானவை என்றே கருதப்படுகின்றன. ஜனநாயகம் என்றால் மக்களால் மக்களுக்காகத் தேர்தல் மூலம் உருவாக்கப்பட்டது. அதற்கே மக்களாட்சி என்று வரைவிலக்கணம் கூறப்படுகின்றது. இராணுவ ஆட்சி என்பது ஒரு தனிநபரது அல்லது குழுவினரது சர்வாதிகார ஆட்சியென்று கருதப்படுகிறது. அங்கு மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு இராணுவத்தினர் அல்லது தனிநபர் மக்கள் மீது அதிகாரம் செலுத்துவர். சில நாடுகளில் ஆட்சியாளர்கள் மக்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டாலும் கூட 'மக்களாட்சி' என்ற போர்வையில் இராணுவமே சகலவற்றையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவதைக் காணக் கூடியதாகவுள்ளது. மியன்மார், இந்தோனேசியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளை இதற்கு உதாரணங்களாகக் கொள்ள முடியும்.

**பாகிஸ்தானில் இராணுவ அதிகாரம்**


பாகிஸ்தான் 1948ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றாலும் கூட அதன் பெரும்பாலான காலம் இராணுவ ஆட்சியிலேயே கழிந்தது. ஒரு கட்டத்தில் தேசிய வாதியான அலி சார் பூட்டோ தேர்தல் மூலம் மக்களின் பேராதரவுடன் ஆட்சியமைத்தார். சில காலத்தின் பின் சதிப் புரட்சி மூலம் அவரின் ஆட்சி குலைக்கப்பட்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. பல வருடங்களின் பின் திருமதி பெனசீர் பூட்டோ தலைமை அமைச்சரானார். அவரும் தேர்தல் காலத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்பு நவாஷ் ஷெரிப் அதிகாரத்துக்கு வந்தார். அவர் ஊழல் குற்றச்சாட்டில் சிறையில டைக்கப்பட்டார். தற்போது முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான் தலைமை அமைச்சராகியுள்ளார். இராணுவத்துக்குத் திருப்தியளிக்கும் விதமாக நடந்து கொள்ளாவிடில் அவருக்கும் என்ன நடக்குமெனச் சொல்லி விட முடியாது. அங்கு இராணுவத்திடம் ஆயுதபலம் மட்டுமன்றி முக்கிய உற்பத்தி நிறுவனங்களும் அவர்களின் பிடியில் உள்ளமை அவர்களின் பலத்துக்கு ஒரு முக்கிய காரணமாகும். ஆயுத உற்பத்தி, கனரக வாகன உற்பத்தி உட்படப் பல பொருளாதார உற்பத்திகள் அந்த நாட்டு இராணுவத்தின் கைகளிலேயே உள்ளன.

**இலங்கையில் இராணுவ ஆட்சியை தோற்றுவிக்கும் சூழல்**

இலங்கையில் போர் முடிந்த பின்பு 2015 ஆம் ஆண்டு வரை பாகிஸ்தான் போன்றதான ஒரு நிலையை நோக்கியே மகிந்த ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சிக் காலத்தில் இராணுவம் வளர்க்கப்பட்டது. பாதுகாப்புச் செயலராகப் பதவி வகித்த கோத்தபாய ராஜபக்ச முன்னாள் இராணுவ அதிகாரி என்ற வகையில், அவரால் அதைக் கனகச்சிதமாகச் செய்ய முடிந்தது. இராணுவம் சுற்றுலா விடுதிகள், பண்ணைகள், வீடமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் பொது நிர்வாகங்களில் தலையீடு செய்யும் போக்கும் காணப்பட்டது. ஆனால் 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்பு ஓரளவுக்கு அந்த நில்மை பல வீனமடைய ஆரம்பித்தது. பொது நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு முடி வுக்குக் கொண்டுவரப்பட்டு குற்றவியல் விடயங்களைப் பொலிஸாரே கையாளும் நிலமை ஏற்பட்டது. அதுமட்டுமன்றி வரி கோரி ஆள்கடத்தலில் ஈடுபட்ட சில படை அதிகாரிகள் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட்டனர்.

**அண்மைய தாக்குதல்களின் பின்னர் நிலமை**

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புப் படுகொலைகளை அடுத்து அவசர காலச் சட்டம் நாட்டில் நடைமுறைக்கிடப்பட்டது. அந்த நிலமையில் இராணுவம் மீண்டும் அதிகார மேலாதிக்கத்தைப் பெறுவதில் பல்வேறு முனைகளில் அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளது.



குண்டுவெடிப்பு நடந்தவுடனேயே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச திறமையுள்ள படை அதிகாரிகளையும் புலனாய்வாளர்களையும் அரசு சிறையில் அடைத்தமையால்தான் குண்டு வெடிப்புக்களை முன்கூட்டியே அறிந்து தடுக்க முடியாமல் போனதெனக் குற்றம் சாட்டினார். பத்தாயிரம் புலனாய்வாளர்கள் செயற்படும் ஒரு நாட்டில் குறித்த 7 புலனாய்வு அதிகாரிகளும் 2 லட்சம் படையினர் உள்ள ஒரு நாட்டில் 3 படை அதிகாரிகளும் சிறையில் அடைக்கப்பட்டதால்தான் ஒரு பேரழிவைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்பது மகிந்தராஜபக்சவின் நகைப்புக்கிடமான கருத்து.

மகிந்தவின் கருத்துப்படி பாதாள உலகக் கோஷ்டியினர் செய்யக் கூடிய பயங்கரமான குற்றங்களைப் படையினர் மேற்கொள்கின்ற போதும் அவர்கள் மீது நட வடிக்கை எடுக்கக் கூடாதென்பது அமைகிறது.

**பழையபடி அடாவடிக்குச் செல்லும் விருப்பு**

இராணுவத் தளபதி லெப் ஜெனரல் மகேஷ் சேன நாயக்கா அவசர காலச் சட்டத்தின் கீழ் படையினருக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் சாதாரண காலங்களிலும் வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டிருந்தார். அதாவது சந்தேகநபர்களைக் கைது செய்யவும் அவர்களைத் தடுத்து வைத்து விசாரிக்கும் அதிகாரத்தையும் கோரியிருந்தார். மேலும் துணை இராணுவக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும் அவர் கேட்டிருந்தார். பொலிஸாருக்குரிய பொது நிர்வாக அதிகாரங்களை அவர் ஆயுதப் படைகளுக்கும் கோருகிறார். போர்க் காலத்திலும் அதற்குப் பின்பும் கைது செய்து விசாரிக்கும் அதிகாரத்தைப் பாவித்தும், துணை இராணுவக் குழுக்களைப் பயன்படுத்தியும் மேற்கொண்ட படுகொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல்கள் என்பனவற்றை வடக்குக் கிழக்கில் அளவு கணக்கற்று மேற்கொண்டிருந்ததைத் திரும்பவும் விரும்பி நிற்கிறார் அவர். அதே நேரத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்து வரும் கருத்துக்கள் மிக மிக முக்கியமானவையாகும். இலங்கையில் குற்றப் புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாதத் தடைப்பிரிவின் புலனாய்வுப் பிரிவு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு, கடற்படை வானூர்திப் பிரிவு, வான்படை வானூர்திப் படை, தேசிய புலனாய்வுப் பிரிவு உட்படப் பத்துப் புலனாய்வுப் பிரிவுகள் இருப்பதாகவும் இதில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஆற்றலும், அனுபவமும் வாய்ந்தது எனவும் அரசால் அதற்கு பூரண அதிகாரமும் சுதந்திரமும் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார். இராணுவப் புலனாய்வுப் பிரிவைப் பற்றி வடக்குப் பகுதி மக்கள் மிக நன்றாகவே அறிந்து வைத்துள்ளனர். எப்போது ஒருவர் கைது செய்யப்படுவார். எப்போது காணாமற் போகச் செய்யப்படுவார். எப்போது கொல்லப்படுவார்கள், கிறிஸ் மனிதர்களின் அச்சுறுத்தல் எனப் பயங்கர வாழ்வின் அனுபவம் வட பகுதி மக்களுக்கு நிறையவே உண்டு.

**உருவாக்கப்பட்ட பாதுகாப்புப் படையணி**

இவையெல்லாவற்றையும் விட அண்மையில் இடம்பெற்ற சில விடயங்கள் உற்று நோக்கும்போது ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. அண்மையில் மகிந்த ராஜபக்சவால் கோத்தபாயவின் அனுசரணையுடன் முன்னாள் இராணுவ, கடற்படை, வானூர்திப்படைத் தளபதிகள், ஓய்வு பெற்ற உயர்மட்டப் படையதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட ஒரு பாதுகாப்புப் படையணியொன்று அமைக்கப்பட்டது. அதன் நோக்கம் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக அரசுக்கும் முப்படைகளுக்கும் ஆலோசனை வழங்குவதாக அமையும் எனக் கூறப்பட்டது. அது ஆலோசனைகளாக அமையுமா? கட்டளைகளாக அமையுமா? என்பது தான் இங்கு எழும் கேள்வியாகும். ஏனெனில் தற்சமயம் பதவியில் உள்ள படை அதிகாரிகள், முன்னாள் படையதிகாரிகளின் கீழ் பணியாற்றியவர்கள் என்பது கவனிக்க வேண்டிய விடயமாகும்.

போரில் உயிரிழந்த படைச் சிப்பாய்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஒன்று அண்மையில் இடம்பெற்றது. அங்கு அரச தலைவர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பிரசன்னமாகியி ருந்தனர். அப்போது வானூர்திப் படையின் முன்னாள் தளபதி றோகான் குணவர்த்தனா, முன்னாள் கடற்படைத்தளபதி வசந்தபெரேரா, முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்திநாயக்கா ஆகியோர் கருத்து வெளியிடுகையில் நாட்டிலிருந்து பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமானால் குறைந்த பட்சம் நான்கைந்து வருடங்களுக்காவது அதற்குரிய தடைச் சட்டங்கள் நடைமுறையில் இருக்க வேண்டுமெனத் தெரிவித்தனர். அவசரகால நிலமையில் ஆயுதப் படையினருக்குள்ள கட்டற்ற அதிகாரம் பற்றி அனைவரும் அறி வர். இந்த நிகழ்வில் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். எனவே இராணுவ மயப்படுத்தப்படும் ஒரு ஜனநாயகத்தை நோக்கி பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் இலங்கை தள்ளப்படும் அபாயம் இருப்பதை ஜனநாயகவாதிகள் எனப்படுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் எதிர்காலம் பெரும் ஆபத்தாகவே அமையும்.



# இந்தியாவில் மோடி! தமிழகத்தில் ஸ்ராலின்!

பா.ஜ.கா வுக்கு மீண்டும் ஒருமுறை வாய்ப்பளித்திருக்கிறார்கள் இந்திய மக்கள். ஒரே வார்த்தையில் இந்த வெற்றியை வரையறுக்க வேண்டும் என்றால், மோடி என்று சொல்லிவிடலாம். ஆனால், மோடியின் ஆளுமை - செல்வாக்கைத் தாண்டி இந்த வெற்றியை எப்படிப் புரிந்துகொள்வது?



எதிர்க்கட்சிகளால் மோடிக்கு இணையாக ஒருவரைப் போட்டியில் நிறுத்தவே முடியவில்லை என்பதும், அவர்களுக்குள் எந்த ஒற்றுமையும் இல்லை என்பதும், ஒருவேளை மோடிக்கு எதிராக வாக்களித்தாலும் அப்படி உருவாகும் அரசு, நீடித்த நல்ல அரசாக இருக்கும் என்ற நம்பகத்தன்மை உருவாக்கப்படவே இல்லை என்பதும் முக்கியமான காரணம். ஆம், இந்திய எதிர்க்கட்சிகளை மக்கள் பெருமளவில் நிராகரித்திருக்கிறார்கள். பா.ஜ. காவுக்கு எதிராக ஒரு வலுவான கூட்டணியை உருவாக்க முடியாத காங்கிரஸ் கட்சிதான் இதற்கான முதல் பொறுப்பாளி. கூட்டணியை மட்டுமல்லாது, மோடியைத் தாண்டிய ஒரு கதையாடலையும் காங்கிரஸாலோ ஏனைய எதிர்க்கட்சிகளாலோ உருவாக்க முடியவில்லை.

**தேசப் பாதுகாப்பு**

எதிர்க்கட்சிகள் அதிகம் பேசிய வேலைவாய்ப்பின்மை உள்ளிட்ட வாழ்வாதாரப் பிரச்சினைகள் எல்லாமே இந்தத் தேர்தலில் பின்னுக்குச் சென்றிருப்பது தெரிகிறது. அப்படியென்றால், மக்கள் முதல் கவனம் அளித்த விடயம் எது? தேசப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள். 'பதான்கோட்' தாக்குதலுக்குப் பிந்தைய சூழலில் தேர்தல் களமே மாறியிருந்தது. தேசத்துக்கு ஓர் அச்சுறுத்தல் வந்தால், உறுதியாக அதை எதிர்கொள்ள ஓர் உறுதிமிக்க அரசும் தலைவரும் தேவை என்று முடிவெடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் தனிப் பெரும்பான்மை பெறும் என்ற எண்ணம் அந்தக் கட்சிக்கே தொடக்கம் முதலாக இல்லாத நிலையில், மாநிலக் கட்சிகள் ஆட்சியில் பெரும் பங்கு வகித்தால், புதிதாக அமையும் அரசானது மாநிலக் கட்சிகளின் கைப்பாவையாக இருக்க வேண்டியிருக்கும் என்று மக்கள் எண்ணியிருக்கவும் வாய்ப்பிருக்கிறது. எப்படியும் நிலையற்ற ஒரு மத்திய அரசை மக்கள் விரும்பவில்லை.

**மக்களைக் கவர்ந்த திட்டங்கள்**

எதிர்க்கட்சிகள் மோடி அரசைக் குற்றஞ்சாட்டுவதில் காட்டிய ஆர்வத்தை அரசு அவற்றை எப்படி எதிர்கொண்டது என்பதிலும், புதிதாகக் கொண்டுவரும் திட்டங்கள் கீழே எத்தகைய மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கின்றன என்பதிலும் கவனம் செலுத்தவில்லை.

சாதாரண மக்களைச் சென்றடையும் வகையில், மோடி அரசு கொண்டுவந்த, கிராமங்களில் வீடுகள் கட்டித் தரும் திட்டமும், வறியவர்களுக்குச் சமையல் எரிவாயு இணைப்பை வழங்கும் திட்டமும் பெண்களைக் கவர்ந்திருக்கின்றன என்பதும், இந்தத் தேர்தலில் பெண்கள் அதிகளவில் வாக்களித்திருக்கிறார்கள் என்பதும் பொருத்திப் பார்க்கப்பட வேண்டியவை.

இருளில் மூழ்கிக் கிடந்த வட இந்தியக் கிராமங்களுக்கு மின்சார வசதியை விரிவுபடுத்தியது, ஏழைக் குடும்பங்களின் மருத்துவச் செலவுகளை அரசே ஏற்றது ஆகிய நடவடிக்கைகளும் கீழே ஒரு தாக்கத்தை உண்டாக்கியிருக்கின்றன.

முந்தைய ஆட்சியில் நிலவிய மின்சார வெட்டும் நிலக்கரித் தட்டுப்பாடும் மோடி ஆட்சியில் இல்லை என்பது தொழில் துறையினருக்கு நிம்மதியை அளித்தது. மின் வணிக தேசியச் சந்தையை உருவாக்கியது.

குறைந்தபட்சக் கொள்முதல் விலையை உயர்த்தியது, நெல், கோதுமை, கரும்பு, பருப்பு வகைகளைப் போல மேலும் சில பயிர்களுக்கும் குறைந்தபட்சக் கொள்முதல் விலை நிர்ணயத்தைக் கொண்டுவந்தது, மரபணு மாற்றப் பயிர்களில் விவசாயிகளின் கருத்துகளுக்கேற்பச் செயற்பட்டது, 60 வயதை எட்டிய விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப் புதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

விவசாயிக ளுக்கு ஆண்டுக்கு மூன்று முறை பணம் வழங்கும் திட்டங்களெல்லாமும் தாக்கத்தை உண்டாக்கியிருக்கின்றன.

**மத அடையாளத்தின் கீழ் ஒருங்கிணைவு**

இந்து மத அடையாளத்தின் கீழ் சாதிகளைத் தாண்டி மக்களை மோடியால் ஒருங்கிணைக்க முடிந்திருக்கிறது. இந்து மதம் சம்பந்தப்பட்ட எந்த விவாதத்தையும் தனதாக்கிக்கொள்ள பா.ஜ.காவால் முடிகிறது. 'இந்து மத நம்பிக்கைகளை ஒருவிதமாகவும் ஏனைய மதங்களின் நம்பிக்கைகளை வேறுவிதமாகவும் அணுகுகிறார்கள்' என்ற குற்றச்சாட்டை இடதுசாரிகள் மீது அவரால் வெற்றிகரமாக நிறுவ முடிந்திருக்கிறது. பா.ஜ.காவை இந்து மதத்தின் எல்லாத் தரப்பினருக்குமான கட்சியாக உருமாற்றும் முயற்சியிலும் மோடி முன்னேறியிருக்கிறார்.



**தமிழ் நாட்டில் மாற்றம்**

இந்தத் தேர்தல் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பல கேள்விகளுக்கான பதில்களை எதிர்நோக்கியிருந்தது. தமிழ்நாட்டில் இரு பெரும் ஆளுமைகளாக விளங்கிய கருணாநிதி, ஜெயலலிதா இருவரின் மறைவுக்குப் பின், தமிழ்நாட்டு மக்கள் யாரைத் தன்னுடைய அடுத்த நம்பிக்கையாகப் பார்க்கிறார்கள் என்ற கேள்வி முதன்மையான ஒன்று. தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு மக்களவைத் தேர்தலில் 38 தொகுதிகளில் 37தொகுதிகளும் சட்டமன்ற இடைத்தேர்தலில் 22 22தொகுதிகளில் 13 தொகுதிகளையும் வழங்கியிருப்பதன் மூலம் மக்கள் தங்கள் பதிலைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தி.மு.காவின் தலைவராகப் பொறுப்பேற்ற இந்த ஓராண்டு காலத்தில் கட்சியைத் தன்னுடைய முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஸ்ராலின், இந்தத் தேர்தல் வெற்றியின் மூலம் மக்கள் தலைவராகவும் உயர்ந்திருக்கிறார்.

**இந்தியாவைத் திரும்பிப் பார்க்கச் செய்த ஸ்ராலினின்**

இந்தத் தேர்தலில் ஸ்ராலின் வகுத்த வியூகமும் அதில் கிடைத்திருக்கும் வெற்றியும் ஒட்டுமொத்த இந்தியாவையும் தமிழகத்தை வியப்போடு திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. பா.ஜ.காவுக்கு மாற்றாக இவ்வளவு உறுதியாக ஒரு மாநிலக் கட்சிக்குத் தமிழக மக்கள் ஆதரவு அளித்திருக்கிறார்கள். கடந்த முறை 37 தொகுதிகளை இப்படி அ.தி.மு.காவுக்கு மக்கள் கொடுத்தபோது, திமுக ஒரு தொகுதியில்கூட வெல்லவில்லை. இந்த முறை அதே 37 தொகுதிகளை தி.மு.க கூட்டணிக்குக் கொடுத்திருக்கிறார்கள். தி.மு.க. அது போட்டியிட்ட 24 தொகுதிகளிலும் வென்றிருக்கிறது. ஆம், பூஜ்ஜியத்திலிருந்துதான் இவ்வளவு பெரிய வெற்றி நோக்கி தி.மு.க. கூட்டணி யைக் கொண்டுவந்திருக்கிறார் ஸ்ராலின். தற்போதைக்கு, இந்தியாவைத் திரும்பிப்பார்க்க வைத்த தென்னகத்தின் முக்கியமான தலைவராக உருவெடுத்திருக்கிறார்.

**கருணாநிதிக்கு அடுத்து...**

ஐம்பதாண்டு பொது வாழ்க்கை, கால் நூற்றாண்டு சட்டமன்றப் பணி, பல ஆண்டுகளாகவே தி.மு.காவில் கருணாநிதிக்கு அடுத்த இடம் என்றெல்லாம் பயணித்திருந்தாலும், கட்சியின் தலைவராக முன்னின்று ஸ்டாலின் எதிர்கொண்ட முதல் தேர்தல் இதுவே. அடுத்தடுத்த மூன்று பெரிய தேர்தல் தோல்விகளைச் சந்தித்திருந்த தி.மு.காவுக்கு இது மிக முக்கியமான தேர்தல். நாடு முழுக்கக் கிளை விரித்துவரும் பா.ஜ.க. ஒவ்வொரு மாநிலத்திலும் வௌ;வேறு கட்சிகளை எதிர்கொண்டாலும், சித்தாந்த ரீதியாக அது முடிவுக்குக் கொண்டுவர விரும்பும் கட்சிகளில் ஒன்று தி.மு.க. இதைச் சரியாகவே புரிந்துகொண்ட ஸ்ராலின், தொடக்கத்திலேயே பா.ஜ.க. எதிர்ப்புக் கொள்கையை உறுதியாக வெளிப்படுத்தினார். மாநிலத்தில் தி.மு.காவை முதன்மை இடம் நோக்கி நகர்த்தும் வகையில், கேரளத்திலும் வங்கத்திலும் எதிரெதிரே நிற்கும் காங்கிரஸ் - கம்யூனிஸ்ட்டுகளைத் ஓரணியில் கொண்டு வந்தார். தேர்தலில் ஸ்ராலின் கையாண்ட முக்கியமான வியூகம், தோழமைக் கட்சிகளின் பேரச் சக்தி மீறியும் தொகுதிகளை அவர் ஒதுக்கியது. காங்கிரஸுக்கு 10 இடங்களைத் தி.மு.க. ஒதுக்கியபோது, அரசியல் வட்டாரமே அதிர்ச்சிக்குத்தான் ஆளானது. அடுத்தடுத்து, இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக ஆகியவற்றுக்கு இரு தொகுதிகளை அவர் ஒதுக்கியதும் அப்படியே. தோழமைக் கட்சிகள் மனம் கோணக் கூடாது என்று ஸ்ராலின் எண்ணினார். அதையே சாக்காக்கி சட்டமன்ற இடைத்தேர்தலில் முழு இடங்களிலும் தி.மு.காவே நிற்க வழிவகுத்தார். மத்தியிலும் மாநிலத்திலும் ஆளுங்கட்சிகள் கூட்டணி அமைத்துக்கொண்ட பிறகு தி.மு.காவின் வெற்றி எளிதாகிவிட்டது. இரண்டு அரசுகளுக்கும் எதிராக தமிழ்நாட்டில் நிலவிய அதிருப்தியைத் தனதாக்கிக்கொண்டிருக்கிறார் அவர்.

**தமிழகத்தில் சாதனை**

நாடு முழுவதும் காங்கிரஸ் கூட்டணி கைப்பற்றியிருக்கும் தொகுதிகளோடு ஒப்பிடுகையில், தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி மட்டுமே 37 இடங்களைக் கைப்பற்றியிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு சாதனைதான். ஆனால், மக்களவைத் தேர்தலில் வாகை சூடிய தி.மு.க, இடைத்தேர்தலில் கொஞ்சம் பின்தங்கிவிட்டிருக்கிறது. ஏற்கெனவே தமிழக சட்டமன்றத்தில் தி.மு.க. கூட்டணிக்கு 98 இடங்கள் இருக்கும்நிலையில் 20 சட்டமன்றத் தொகுதிகளில் வென்றால், தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நிகழ அது வழிவகுத்திருக்கும். ஆனால், 13 இடங்களில் மட்டுமே அது வென்றிருக்கிறது. இதிலும் ஒரு சாதகம் இருக்கிறது. 22 தொகுதிகளிலும் தி.மு.க. வென்றிருந்தாலும் காங்கிரஸின் 9 இடங்களின் உதவியுடனும் வெறும் ஒரு தொகுதி பெரும்பான்மையுடனும்தான் நிர்வாகத்தை நடத்த வேண்டியிருக்கும். தி.மு.க. விரும்பினாலும், பெரிய மாற்றங்கள், சீர்திருத்தங்கள் எதையும் அந்தச் சூழலில் செய்ய முடியாது. ஆனால், இப்போது கிடைத்திருக்கும் குறிப்பிட்ட அளவிலான வெற்றியானது தி.மு.காவை மேலும் வலிய எதிர்க்கட்சி ஆக்கியிருக்கிறது. மேலும் பலத்தோடு சட்டமன்றத்தில் அது இனிப் பணியாற்றலாம்.

நன்றி - தி ஹிந்து




# கட்டவிழ்க்கப்பட்டவர்களும் அவிழ்க்கப்படாத முடிச்சுக்களும்!

■ ஸூடோ ஸ்வாமி



கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நடந்த குண்டுத் தாக்குதல்களுக்குப் பிற்பாடு இலங்கை எங்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் என்பன தமது வழமையான நடவடிக்கைகளைத் தொடர ஆரம்பித்திருக்கின்றன. கத்தோலிக்க தேவாலயங்களும் தமது நாளாந்தப் பிரார்த்தனை நடவடிக்கைகளை மீளத் தொடரத் தொடங்கியுள்ளன.

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் நடந்த வன்முறைகளை தொடர்ந்து ஒரு வித அச்ச நிலை தொடர்ந்தாலும் பொதுவில் ஒரு வகை மீளத்திரும்பல் நிலை தென்படவே செய்கிறது. வீதிச் சோதனைச்சாவடிகள் புதிதாகத் தோன்றிப் பயணத் தாமதங்களை ஏற்படுத்தினாலும் முகத்தைச் சுழித்துக் கொண்டே முகம்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் நீடிக்கிறது. பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதம் என்பவற்றால் தோன்றக்கூடிய இழப்புக்கள் மற்றும் அழிவுகள் முற்கூட்டியே தடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. அதனை விட இன ரீதியான, மத ரீதியான வன்முறைகள் வெடிக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டிய நிலை



வரமும் எதிர்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நிலைப்பாட்டில் அரசு இதயசுத்தியுடன் இயங்குகிறதா? என்பதை கேள்விக்குட்படுத்தியிருக்கின்றது நடந்தேறியிருக்கும் ஒன்றையொன்று ஒத்த இருவேறு விடயங்கள்.

**அரசதலைவரின் மன்னிப்பைப் பெற்ற ஞானசார தேரர்!**

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காகச் சிறைத்தண்டனை பெற்றிருந்த சிங்களக் கடும்போக்குவாதப் பௌத்த துறவியான ஞானசார தேரர் அரச தலைவரின் மன்னிப்பைப் பெற்று வெளியேறியிருக்கிறார். வெசாக் தினத்தை அண்டியதாக நடந்த கைதிகளின் விடுதலையில் பங்கேற்றிருக்காத அவர் கடந்த வியா ழக்கிழமை மன்னிப்புப் பெற்று வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து சுதந்திரம் அடைந்திருக்கிறார். பொதுபல சேனா என்னும் அமைப்பின் பொதுச்செயலராக விளங்கிய இவர், பிரகீத் எக்னலிகொட தொடர்பான வழக்குக் ஹோமாகம நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்டமைக்காக ஆறு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக் கப்பட்டிருந்தது. 2014ஆம் ஆண்டு அளுத்கமை நகரிலும் அதைச் சூழவர உள்ள பிரதேசங்களிலும் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளுக்குத் தூண்டுகோலாக இருந்தார் என்பதுடன் முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புப் பேச்சுகளையும் நிகழ்த்தி வந்தார் என்னும் குற்றச்சாட்டும் இவர் மீது இருக்கிறது. இதை விட றிசாத் பதியுதீனின் அமைச்சினுள் புகுந்து ரகளை பண்ணிய விவகாரத்திலும் தனது பெயரைப் பதிந்திருந்தவர் இவர். தற்போது வடமேல் மாகாணத்தின் சில இடங்களில் வெடித்த வன்முறையைத் தொடர்ந்து, கடும்போக்கு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் அமித் வீரசிங்க மற்றும் நாமல் குமார ஆகியோர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்தத் தேரர் விடுவிக்கப்பட்டி ருக்கிறார். கடந்த வியாழக்கிழமை கலபொடஅத்த ஞானசார தேரர் விடுதலையான நிலையில் றிசாத் பதியுதீன் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மான விவகாரமும் நாடாளுமன்றில் சூடுபிடித்திருக்கிறது.

**விடுவிப்புக்கு எதிராகக் கிளம்பியிருக்கும் விமர்சனங்கள்!**

மஹா சங்கத்தினரின் கோரிக்கை மற்றும் அழுத்தங்களின் தொடர்ச்சியாக ஞானசார தேரர் விடுவிக்கப்பட்டிருக்கும் நிலையில், குறித்த சம்பவம் சுயாதீன நீதித்துறைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதமானது என விமர்சிக்கப்பட்டிருக்கிறது. ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டிருக்கும் மன்னிப்பை அதிகார முறைகேடு எனக் கண்டித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், இதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டிவிடுவது என்பது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்னும் தவறான செய்தி சென்றடைவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேரரின் விடுதலை தொடர்பாகக் கீச்சகத்தில் கருத்துத் தெரிவித்திருக்கும் ஜே.சி. வெலியமுன என்னும் சட்டத்தரணி, குறித்த மன்னிப்பைச் சுயாதீன நீதித்துறைக்கு விழுந்த அறையாகக் கருத்திட்டிருக்கிறார். சந்தியா எக்னலிகொடவும் தனது ஏமாற்றத்தைத் தெரிவித்திருக்கிறார். அரச தலைவர் வழங்கிய மன்னிப்புத் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் மௌனமும் ஏமாற்றத்துடன் நோக்கப்பட்டிருக்கிறது.

**விடுவிக்கப்பட்ட திஸ்ஸ அத்தநாயக்கா!**

2014ஆம் ஆண்டு இறுதிக்காலப்பகுதியில் அரசதலைவர் தேர்தலுக்கான பரபரப்பு சூடுபிடித்திருந்த வேளையில் வேலி பாய்ந்து பட்டையைக் கிளப்பிய பரிவாரங்களில் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய பொதுச்செயலராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்கா. அரச தலைவர் தேர்தலுக்கான பொது வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரம சிங்கவுக்கிடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டதாகத் தெரிவித்துப் போலி ஆவணம் ஒன்றை ஊடகங்களுக்குச் சமர்ப்பித்திருந்தார். சம்பந்தப்பட்டோரின் போலிக் கையெழுத்துக்களைக் கொண்டிருந்த அந்த ஆவணம் பின்னர் மைத்திரிபால தரப்பு வெற்றி பெற்று ஆட்சி அமைத்தபோது திஸ்ஸ அத்தநாயக்காவைச் சிறையில் தள்ளியது. இருபெரும் அரசியல் கட்சிகளைப் பகைத்தும் அதன் தலைவர்களுக்கு நெருக்கிடை வரக்கூடிய விதத்தில் செயற்பட்ட திஸ்ஸ அத்தநாயக்கா பின்னர் தனது அரசியல் எதிர்காலம் சூனியமான நிலையில் சுற்றிச் சுற்றி வந்தார்.

இனங்களுக்கிடையில் அமைதியின்மையைத் தூண்டிவிடக்கூடிய உள்ளடக்கத்தைக் கொண்டிருந்த அந்த ஆவண நாடக விவகாரம் கடந்த நான்கு ஆண்டுகளாக இழுபட்ட நிலையில் தற்போது முடிவுக்கு வந்திருக்கிறது. அதுவும் கமுக்கமாக முடிந்திருக்கிறது.

கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி, திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிரான வழக்கிலிருந்து கொழும்பு உயர் நீதிமன்றம் அவரை விடுவித்திருக்கிறது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 15 பேர் சாட்சிகளாகக் காட்டப்பட்ட வழக்கில் முறைப்பாட்டாளர் தரப்பு மற்றும் பிரதிவாதி தரப்பு சமரச இணக்கத்துக்கு வந்ததை அடுத்து வழக்கு திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. திஸ்ஸ அத்தநாயக்கா மீது சுமத் தப்பட்ட மூன்று குற்றச்சாட்டு களிலிருந்தும் அவர் விடு விக்கப்பட்டிருக்கிறார்.


இனங்களுக்கிடையிலான, மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்ட இருவரும் விடுதலை பெற்றுச் சுதந்திரமடைந்திருக்கிறார்கள். அதுவும் நாடு ஒரு சிக்கலான தருணத்தை அனுபவிக்கும் நிலையில் இந்தக் கட்டவிழ்ப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. திஸ்ஸ அத்தநாயக்கவின் விடுதலைவிவகாரம் நீதித்துறைக்கு ஏற்புடையதான ஒன்றாக நோக்கப்பட்டாலும் ஞானசார தேரருடைய விடுதலை விவகாரம் விமர்சனத்துடனேயே நோக்கப்பட்டிருக்கிறது. இருவேறு விடயங்கள் தொடர்பான விவகாரங்களில் இவர்களுடைய விடுதலை அமைந்திருந்தாலும் இரண்டிலும் ஒருவகை ஒற்றுமை தொக்குநிற்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

இன மத விவகாரங்களில் அமைதியின்மையை ஏற்படுத்தத்தக்க வகையில் நடந்துகொண்டோர் (முழுமையான தண்டனையின்றி) நீதித்துறை யின் பிடியில் இருந்து விடுபட்டிருப்பது. அந்த வகையான நிலைவரம் மீளத்தோன்றுவதைக் கட்டுப்படுத்தும் நிலைப்பாட்டுடன் அரசு இயங்குகிறதா? என்பதை அவிழ்க்கப்படாத முடிச்சுக்களாகவே விட்டுச்செல்கிறது. ■

**நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காகச் சிறைத் தண்டனை பெற்றிருந்த சிங்களக் கடும்போக்குவாதப் பௌத்த துறவியான ஞானசார தேரர் அரசதலைவரின் மன்னிப்பைப் பெற்று வெளியேறியிருக்கிறார். வெசாக் தினத்தை அண்டியதாக நடந்த கைதிகளின் விடுதலையில் பங்கேற்றிருக்காத அவர் கடந்த வியா ழக்கிழமை மன்னிப்புப் பெற்று வெலிக் கடை சிறைச்சாலை யி லிருந்து சுதந்திரம் அடைந்திருக்கிறார்.**

■ நரசிம்மன்

# பேராசிரியர் விக்னேஸ்வரனின் பதவி பறிக்கப்பட்டது ஏன்?



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் எந்த வித காரணமும் கூறப்படாமல் துணைவேந்தர் பதவியில் இருந்து அகற்றப்பட்டிருக்கிறார். அவருடைய அதிகாரங்களை விட அதிகளவான அதிகாரங்களுடன் தகுதி வாய்ந்த அதிகாரியாக அதே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பேராசிரியர் கதிர்காமநாதன் கந்தசாமி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

1978ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்துக்கு அமைவாக அரச தலைவருக்குள்ள அதிகாரங்களின் அடிப்படையிலேயே இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் நியமனம் இடம்பெறுகின்றது. அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் ஆளும் அதிகார சபையாகிய பல்கலைக் கழகப் பேரவையில் துணை வேந்தர் பதவிக்காக விண்ணப்பித்த வர்களின் திறமைகள், தகுதிகள் காண்பிக்கப்பட்ட பின் நடாத்தப்படும் தேர்தல் வாக்குகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்களின் பெயர்கள் பேரவையின் சிபார்சுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவரின் பரிந்துரையுடன், உயர்கல்வி அமைச்சரினூடாகக் குறித்த பெயர்கள் அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும். சகல மட்டங்களிலிருந்தும் கிடைக்கின்ற சிபார்சுகள், பரிந்துரைகளுக்கு மேலதிகமாக முன்மொழியப்பட்டவர்களின் சுய விவரங்கள் மற்றும் தேசிய புலனாய்வு அமைப்புக்களின் அடிப்படையில் எவரைத் துணை வேந்தராக நியமிப்பது என்பது அரச தலைவரின் கையிலேயே தங்கியிருக்கும்.

**அரச தலைவரின் முடிவே இறுதியானது**

அரச தலைவரால் துணைவேந்தராக நியமிக்கப்படுபவர் யார்? அவர் தகைமை என்ன? பல்கலைக்கழகப் பேரவையின் தேர்தலில் அவர் எத்தனையாம் இடத்தைப் பெற்றார் என்பதெல்லாவற்றுக்கும் மேலாக அரசதலைவரின் நியமனத்தில் யாரும் எந்தக் கேள்வியையும் எழுப்ப முடியாதென்பது சட்டம். இந்தச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்படும் துணை வேந்தர் ஒருவரை நீக்கும் அதிகாரம் அரச தலைவருக்குண்டு. அதேபோல 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் அத்தியாயம் 20 பிரிவு '4' உப பிரிவு 'பி' இன் படி நாட்டில் எற்படுகின்ற அசாதாரண சூழ் நிலைகள், பல்கலைக்கழகத்தினுள் ஏற்படுகின்ற ஸ்திரமின்மை போன்ற காரணங்களால் பல்கலைக் கழகத்தை மூடுவதற்கும், துணைவேந்தருக்குப் பதிலாகத் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கும் உயர்கல்வி அமைச்சருக்கு அதிகாரம் உண்டு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் விக்னேஸ்வரனின் பதவி பறிப்பில் வெளியில் தெரிந்தவரை அரச தலைவருக்கு இருக்கின்ற அதிகாரங்களின் படி நியமிக்கப்பட்ட துணைவேந்தர் ஒருவரை அவர் பதவி நீக்கினார் என்பதும், அமைச்சருக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார் என்பதுமே. ஆனால் அதன் பின்னணியில் அரசியல் புரையோடிப் போயிருக்கின்றது.

**விக்னேஸ்வரன் நியமனத்திலே இழுபறி**

அதுவரையிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பதவிக் காலம் 2017 மார்ச் மாதத்துடன் நிறைவுக்கு வருவதை அடுத்துப் புதிய துணை வேந்தர் தெரிவுக்காக விண்ணப்பித்திருந்த ஐந்து பேரில் இருந்து மூன்று பேரைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்வதற்காக யாழ். பல்கலைக்கழகப் பேரவை 26.02.2017 அன்று கூடியது. பேரவையில் விண்ணப்பதாரிகள் ஐவரும் தமது பதவிக்காலத்தில் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி பற்றிய தங்கள் சிந்தனைகளை முன்னிறுத்திப் பேரவை உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தற்குப் பிறகு புதிய துணைவேந்தருக்கான தேர்தல் இடம் பெற்றது. வாக்குப் பதிவின் நிறைவில் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜா, போராசிரியர் கே.விக்னேஸ்வரன் ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம் இடங்களில் நிற்க மூன்றாவது இடத்துக்கான தெரிவு சமநிலையில் இருந்ததனால் மறு வாக்குப் பதிவின் மூலம் பேராசிரியர் ரீ.வேல்நம்பி மூன்றாவது இடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு மூவரின் பெயர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக அரச தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பதவியில்இருக்கின்றதுணைவேந்தரின் பதவிக்காலம் முடிவதற்குள் புதியவரின் நியமன அறிவித்தல் அரச தலைவரிடமிருந்து வெளியாகிவிடும். ஆனால் அந்த முறை அப்போது பதவியில் இருந்த பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் பதவிக்காலம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது. புதிய நியமனம் பின் தள்ளப்பட்டது. பேரவையின் முதற் தெரிவாகக் குறிப்பிடப்பட்ட பேராசிரியர் ச.சிறீசற்குணராஜா அரச தலைவரால் துணை வேந்தராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கசியத் தொடங்கியிருந்தது. ஆனால், பேராசிரியர் விக்னேஸ்வரனைத் துணைவேந்தராக நியமித்திருப்பதாக அரச தலைவரின் மேலதிக செயலர் பின்னர் அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்களே, தமக்கிருந்த 'உச்சக்கட்ட' செல்வாக்கைப் பயன்படுத்தி அரசதலைவரால் நியமிக்கப்பட்ட ஒருவரைப் புறம் தள்ளி - தம்மை அணுகியவருக்காக இன்னொருவரை நியமிக்க வைத்ததாகப் பேச்சுக்கள் இருந்தன. அதன் பின் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணை வேந்தராகவே பார்க்கப்பட்டார். ஆனால் எந்தவொரு வேளையிலும் அத்தகைய ஒருவராக அவர் செயற்பட்டிருக்கவில்லை.

**பேரவைத் தெரிவிலும் கூட்டமைப்பின் தயவு**

பேராசிரியர் விக்னேஸ்வரன் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், அவரது பதவிக்காலத்துக்கான பேரவையை அமைப்பதிலும் அதிக அக்கறை காட்டினார். தன்னுடைய பதவிக் காலத்தில் தனக்கு 'அலுப்புத்' தரக் கூடியவர்களைப் பேரவையிலிருந்து அகற்றித் தன்னுடைய நிர்வாகத்தைச் சுமுகமாகக் கொண்டியக்கும் நோக்கில் பதவி வழி உறுப்பினர்கள் 14 பேர் போக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் உறுப்பினர்களை முன் மொழிவதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவு தேவைப்பட்டதுடன் அரச தலைமை மத்தியிலும் பல்கலைக்கழக நிர்வாக இயந்திரம் கூட்டமைப்புக்குள் இருப்பதான ஒரு மாயை இருந்து வந்தது. முன்னைய காலங்களில் பதவி வகித்த துணைவேந்தர்கள் நேரடியாகக் கட்சி சார்ந்து செயற்பட்ட போதிலும், பேராசிரியர் விக்னேஸ்வரன் அவ்வாறு செயற்படவில்லை.

**கூட நின்றவர்களே குழிபறித்தார்கள்**

பேராசிரியர் விக்னேஸ்வரன் பதவிக்கு வந்த காலத்தில், இராணுவக் கெடுபிடிகள் ஓரளவுக்கு யாழ்ப்பாணத்தில் குறைந்திருந்ததால் பல்கலைக்கழகச் சமூகம் தமிழ்த் தேசியம் சார்ந்த செயற்பாடுகளை - நினைவு நாள்களைத் தடையின்றிக் கொண்டாடுவதற்கு வசதியாக இருந்தது. அரசும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகள் எதிலும் தலையிடவில்லை. பல்கலைக்கழக சமூகம் என்ற அடையாளத்தோடு முன்னெடுக்கப்பட்ட பெரும்பாலான நிகழ்வுகளில் அழைப்பை மறுக்க முடியாத நிலையில் துணைவேந்தர் பங்கெடுத்தார். இதுவே அவருக்குப் பின்னாளில் பாதகமாகியது.

**2018 செப்ரெம்பரில் முதல் காய் நகர்த்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவியில் இருந்து பேராசிரியர் விக்னேஸ்வரனை அப்புறப்படுத்தும் நோக்கில் பல்கலைக்கழகத்தின் உள்ளிருந்து கிடைத்த பல 'மொட்டைக் கடிதங்களின்' அடிப்படையிலும், எழுச்சி நிகழ்வுகள் குறித்துக் கிடைத்த புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படையிலும் பேராசிரியரை அப்புறப்படுத்துவதற்கான முதல் முயற்சி 2017ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நடந்தது. அந்த நேரத்தில் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நல்லாட்சியின் பேரால் நல்லுறவில் இருந்ததனால் அரசு கூட்டமைப்பு உறவில் விரிசல் காண விரும்பாத சக்திகள் அந்த முயற்சியை சந்திப்புகள் கூட்டங்கள் எச்சரிக்கையோடு நிறுத்திக் கொண்டன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணை வேந்தர் நிர்வாக ரீதியாக இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றத் தவறுகிறார். கடமையில் கவனமில்லை. எனப் பொதுவான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்ட அதே வேளையில் பல்கலைக்கழகப் பணியாட் தொகுதி ஆட் சேர்ப்புகளின் போது தெரிந்தோ, தெரியாமலோ மோசடிகளுக்கு உடந்தையாக இருக்கிறார் என்று இருபதுக்கும் மேற்பட்ட முறைப்பாட்டுக் கடிதங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, உயர்கல்வி அமைச்சு உட்பட பல இடங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அவற்றின் அடிப்படையிலேயே 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் பேராசிரியர் விக்னேஸ்வரனுக்கு எதிராக முதலாவது உத்தியோகப்பற்றற்ற விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தினுள் இயங்குகின்ற தொழிற் சங்கங்களும் இந்த முறைப்பாட்டுக்காரர்களுள் அடக்கம். '2018ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அப்போதைய உயர்கல்வி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களை சந்தித்தபோது இதை உறுதி செய்தார்.

இருந்த போதும் அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட சிரேஷ்ட பேராசிரியர் உட்பட ஏனைய சில உறுப்பினர்களும் அமைச்சரின் அந்தக் கருத்தை நிராகரித்து, பல்கலைக்கழகத்தைச்சீர்படுத்தும்பொறுப்பு பேரவையைச் சாரும் என்று அமைச்சரை உடன்பட வைத்திருந்தனர்.

கால நகர்வில், அரசில் ஏற்பட்ட அதிரடி மாற்றங்களின் காரணமாகப் பேராசிரியர் விக்னேஸ்வரன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அடிபட்டுப் போயினவே தவிர கைவிடப்படவில்லை.

**முன்னர் பதவியிலிருந்த இரு துணைவேந்தர்களும், இத்தகைய நிகழ்வுகள் வரப்போகின்றன என்று தெரிந்ததுமே, ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிச்சென்று விடுவதைவழக்கமாகக்கொண்டிருந்த போது பேராசிரியர் விக்னேஸ்வரன் தன்னுடைய பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்கான காபந்து நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.**

(15ஆம் பக்கம் பார்க்க)

# மான்ஸ்டர்



சென்னையில் மின்சார சபை அலுவலகம் ஒன்றில் பொறியாளராகப் பணியாற்றுகிறார் அஞ்சனம் அழகியபிள்ளை என்கிற எஸ்.ஜே.சூர்யா. வாடகை வீட்டில் இருந்தபடி வேலைக்குச் சென்று வரும் அவருக்குத் திருமணம் செய்வதற்கு மணமகள் கிடைப்பது தாமதமாகிறது. 'மனையாள் பொருந்துவதாயின் முதலில் நல்ல மனை வாங்க வேண்டும்' என்று நண்பர் கருணாகரன் யோசனை சொல்கிறார்.
அதனால் வீடு பார்க்கும் படலத்தில் இறங்குகிறார் சூர்யா. அடுக்குமாடிக் குடியிருப்பில் வீடு பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், திருமணவிடயம்தொடர்பாகப் பிரியா பவானி சங்கரிடம் இருந்து அலைபேசி அழைப்பு வருகிறது. அந்தவீட்டை ராசியான அந்த வீட்டையே விலை பேசி முடிக்கிறார்சூர்யா. உற்சாகமாக அங்கு குடியேறும் அவரது நிம்மதியைக் கெடுக்கிறது அந்த வீட்டை அதகளம் பண்ணும் ஓர் எலி. அதனால் அவர் அனுபவிக்கும் தொந்தரவுகள் என்ன? அந்த எலி ஏன் அவரைக் குறிவைக்க வேண்டும்? அவரது திருமணம் நடந்ததா? வள்ளலார் வழி வாழும் எஸ்.ஜே.சூர்யா, எலியை என்ன செய்தார்? இது தான் 'மான்ஸ்டர்' படத்தின் மீதிக் கதை.



பரவாயில்லை
ரகம்

**பாத்திரங்கள்**

நாயகனுக்கு நிகரான பாத்திரமாக எலி இருக்கிறது. எலி, எஸ்.ஜே. சூர்யா, பிரியா பவானி சங்கர், கருணாகரன் இந்த நான்கே கதாபாத்திரங்கள் தான்கதையின்மையம். அனைவரும் தங்கள் பகுதி களைச் சிறப்பாகச் செய்துள்ளனர். இரட்டை அர்த்த வசனம், முரட்டு வில்லத்தனம் இல்லாத, 'அஞ்சனம் அழகிய பிள்ளை' யாக, அரச உத்யோகம் பார்க்கும் நடுத்தர வீட்டு இளைஞன் பாத்திரத்தில் கச்சிதமாக பொருந்துகிறார் எஸ்.ஜே. சூர்யா. மிகையில்லாத நடிப்பு. கருணாகரனுடன் சேர்ந்து அவர் அரங்கேற்றும் நகைச்சுவைக் கலாட்டாக்கள் சிறப்பு.
நாயகனை நகைக்கடையில் எதிர்கொள்வது, உணவகத்தில் சந்தித்து அன்பை வெளிப்படுத்துவது, பொலிஸ் நிலையத்தில் நிற்பது என ஒவ்வொரு இடத்திலும் இயல்பாக நிற்கிறார் பிரியா பவானி சங்கர்.

**பலம் பலவீனம்**

காதல் காட்சிகள் கண்ணியமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நாயகனுக்கு இணையாக ஓர் எலியை நடிக்க வைத்து, துளியும் சோர்வு ஏற்பட வைக்காமல் கடைசி வரை இரசிகர்களைக் குஷிப்ப டுத்துகிறார் இயக்குநர் நெல்சன் வெங்கடேசன். எலி விஸ்வரூபம் எடுத்து மனிதனோடு சண்டை போடுவது, எதிரியைப் பழிதீர்ப்பது, காதலிப்பது என்று கற்பனைப் பக்கம் திரும்பாமல், சாதாரணமாக வீடுகளில் எலி செய்யும் தொந்தரவுகள், சேட்டைகளை அப்படியே காட்சிப் படுத்த வேண்டும் என்பதில் தெளிவாக இருந்திருக்கிறார். அதில் முடிந்தவரை வெற்றியும் பெறுகிறார். அதேசமயம், 'இந்த இடத்தில் எலி நின்று மிரட்டினால் நன்றாக இருக்கும்' என நாம் எதிர்பார்க்கும் இடங்களில்கூட அதன் சேட்டை கள் இல்லாதது ஏமாற்றமே. பெண் பார்க்கச் செல்லும் இடத்தில் எஸ்.ஜே.சூர்யாவுக்கு நடக்கும் ஏமாற்றம், வாடகை வீட்டில் அனுபவிக்கும் பிரச்சினைகள், மின்சார அலுவலராக அவர் எதிர்கொள்ளும் சம்பவங்கள் ஆகியவை இயல்பாக இருப்பதால் கதைக்குள் முழுமையாக ஒன்ற முடிகிறது. வீட்டுக்குள் வைரத்தை மறைத்து வைத்துவிட்டுத் தேடும் வில்லனின் பகுதிகளும், அதைச் சுற்றி நடக்கும் நிகழ்வு களும் செயற்கை.

**ஒளிப்பதிவு, இசை, காட்சித் தொகுப்பு**

நெல்சன் வெங்கடேசன் சங்கர் தாஸ் கூட்டு எழுத்தாக்கம் கவனிக்க வைக்கிறது. ஜஸ்டின் பிரபாகரன் இசையில் பாடல்கள் பரவாயில்லை. எலி வரும் காட்சிகளில் பின்னணி இசை சேர்ப்பு கச்சிதம். சாபு ஜோசப் காட்சித் தொகுப்பில் நல்ல உழைப்புத் தெரிகிறது. வீடு முழுக்க எலியோடு பயணிக்கும் கோகுலின் கமரா படத்துக்குப் பலம். குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கு இந்த எலியின் கதை சுவாரஸ்ய அனுபவமாக இருக்கும்.

# பேராசிரியர் விக்னேஸ்வரனின்... (தொடர்ச்சி)

**முள்ளிவாய்க்கால் முற்றமும் ஒரு காரணம்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டிருக்கும் முள்ளி வாய்க்கால் இனப்படுகொலை நினைவு முற்றம் அமைக்கப்பட்ட விவகாரமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மட்டத்தில் பேராசிரியர் விக்னேஸ்வரனுக்குஎதிரானநிலைப்பாடொன்றைத்தோற்றுவித்தது.
முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைப்பதற்கான முயற்சியில்அப்போதையமாணவர்ஒன்றியம்இறங்கிய போதுபல்கலைக்கழகமானியங்கள்ஆணைக்குழுவின் தலைவரிடமிருந்து பேராசிரியர் விக்னேஸ்வ ரனுக்கு மிகப்பெரும் அழுத்தங்கள் வழங்கப்பட்டன.
அதனைமெல்லவும்முடியாமல், விழுங்கவும்முடியாமல் இருந்ததுணைவேந்தர், முதலில்மாணவர்களால்தெரிவு செய்யப்பட்ட இடம் பல்கலைக்கழகப் பாவனைக்குத் தேவையானஓர்இடம்என்றுகாரணம்காட்டி, அந்த இடத்தில் நினைவு முற்றத்தை அமைப்பதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தினார்.
அந்த இடத்தில் நினைவு முற்றத்தைக் கட்டாமல் விட்ட மாணவர் ஒன்றியம், தற்போது முள்ளிவாய்க்கால் நினைவிடம் அமைந்துள்ள இடத்தில் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்தது.
சம காலத்தில் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட வேண்டிய தூபியைப் பல்கலைக்கழகத்துக்கு வெளியே உள்ள இடமொன்றில் வைத்து வடிவமைத்துக் கொண்டிருந்தார்கள்.
நினைவு முற்றத்துக்கான கட்டுமான வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது பலட்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடமிருந்து உடனடியாகஅந்தவேலைகளைநிறுத்துமாறுதுணைவேந்தருக்குக்கடும்தொனியில் அறிவுறுத்தப்பட்டது.




உடனடியாகவே மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளை அழைத்ததுணைவேந்தர்நிலைமையைவிளக்கியபோது மாணவர் ஒன்றியப்பிரதிநிதிகளும் அதனை நிறுத்துவதற்குச்சம்மதித்தனர்.
முதன்மை நினைவுத்தூபி நிறுவப்படவேண்டிய கட்டத்தோடுஅந்தப்பணிகள்நிறுத்தப்பட,பல்கலைக்கழகத்துக்கு வெளியே அமைக்கப்பட்ட தூபி அந்த இடத்திலேயே பக்குவமாக வைக்கப்பட்டது.
இந்தநிலையில்2018ஆம்ஆண்டுதியாகிதிலீபன்நினைவு நிகழ்வைநடாத்துவதற்குத்தடையேதுமில்லைஎன்பதாக நல்லாட்சி அரசின் சமிக்ஞைகள் அமைந்ததால், பல்கலைக்கழகத்தினுள் அதுவரை காலமும் சிறிய அளவில் நடாத்தப்பட்டு வந்த தமிழீழ எழுச்சி நிகழ்வுகள் அதன் பின் பிரமாண்டமான முறையில் முன்னெ டுக்கப்படலாயின.
அதன்பின்பல்கலைக்கழகத்தினுள்அமைக்கப்பட்டிருந்த 'பொங்குதமிழ்' அறிவிப்பு மிகவும் உணர்வு பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னும் சரி முன்னும் சரி பல்கலைக்கழகத்தினுள் நடைபெற்ற பெரும்பாலான எழுச்சி நிகழ்வுகளின் போது முதன்மைச் சுடரை ஏற்றுவதற்காகப்பேராசிரியர்விக்னேஸ்வரனேமாணவர்களால் அழைக்கப்பட்டு வந்தார். முன்னர் பதவியிலிருந்த இரு துணைவேந்தர்களும், இத்தகைய நிகழ்வுகள் வரப்போகின்றன என்று தெரிந்ததுமே, ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிச் சென்று விடுவதைவழக்கமாகக்கொண்டிருந்தபோதுபேராசிரியர் விக்னேஸ்வரன்தன்னுடையபதவியைத்தக்கவைத்துக் கொள்வதற்கான காபந்து நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.
எழுச்சிநிகழ்வுகள்இடையூறேதுமின்றிநடைபெற்றுவந்த நிலையில், யாரும் அறியாத் தருணத்தில் பல்கலைக்கழகத்துக்கு வெளியே அமைக்கப்பட்டு தயார் நிலையில் இருந்த முள்ளி வாய்க்கால் நினைவு முற்றத்தின் பிரதான தூபியை மாணவர்கள் கொண்டுவந்து அதற்கென அமைக்கப்பட்ட மேடையில் பொருத்தி விட்டனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, அரச உயர் மட்டத்தின் மத்தியில் அது மிகப் பெரிய ஆதங்கத்தை உண்டாக்கியிருந்தாலும், உடனடியாக மறுதலிக்காமல் காலம் பார்த்துக் காத்திருந்தது அரச நிர்வாகம். ஏனெனில் தூபி மற்றும் எழுச்சி நிகழ்வு களைக் காரணம் காட்டி நடவடிக்கையில் இறங்கினால் நல்லாட்சி என்பதன் போலி முகம் வெளுத்து விடும் என்பதாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழர் தரப்புக்களின் எதிர்ப்புக்கு ஆளாக வேண்டி வரும் என்பதாலும் அந்த நேரத்தில் உடனடியாகச் செயற்படாமல் மௌனம் காத்தது அரச நிர்வாகம்.
இப்போது - அவசர காலச் சட்டம் நடைமுறையிலுள்ள நேரத்தில் என்ன செய்தாலும்இ மறுதலித்து மாணவர்களால் போராட்டங்களைச் செய்ய முடியாது என்பதனால் பொருத்தமான நேரத்தில் பேராசிரியர் விக்னேஸ்வரன் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையிலான தற்போதைய இணக்க நிலையும் இதற்கு இன்னுமொரு காரணமாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

# ‘டெர்மினேட்டர்: டார்க் வ்பற்’

ஹொலிவூட் இயக்குநர் ஜேம்ஸ் கமரூனின் தயாரிப்பில் ‘டெர்மினேட்டர்: டார்க் வ்பேட்’ படத்தின் முன்னோட்டக் காட்சி வெளியாகியுள்ளது. ஜேம்ஸ் கமரூனின் இயக்கத்தில் அர்னோல்ட் நடித்து வெளியான படம் ‘டெர்மினேட்டர்’. 1984 ஆம் ஆண்டு வெளியான இந்தப் படம், உலகம் முழுவதும் பெரும் வெற்றி பெற்றது. இந்தப் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு ‘டெர்மினேட்டர்’ படத்தின் இரண்டாம் பாகமான ‘ஜட்ஜ்மென்ட் டே’ படம் வெளியானது.

இதையும் ஜேம்ஸ் கமரூனே இயக்கினார். முதல் பாகத்தைத் தாண்டி விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் இந்தப் படம் பெரும் வரவேற்பைப் பெற்றது. இன்றுவரை வெளியான சிறந்த ஹொலிவூட் படங்களைப் பட்டியலிட்டால், அதில், ‘ஜட்ஜ்மென்ட் டே’ தவறாமல் இடம்பெறும். ஆனால், இதற்குப் பிறகு வெளியான ‘டெர்மினேட்டர் 3 றைஸ் ஒவ் தி மெஷின்’, ‘டெர்மினேட்டர் சால்வேஷன்’, ‘டெர்மினேட்டர் ஜெனிசிஸ்’ ஆகிய படங்கள் சரியான வரவேற்பைப் பெறவில்லை.

ஜட்ஜ்மென்ட் டே’ படத்துக்குப் பிறகு வெளியான டெர்மினேட்டர் படங்களை ஜேம்ஸ் கமரூன் இயக்கவில்லை. இந்நிலையில், டெர்மினேட்டர் பட வரிசையில் ‘டெர்மினேட்டர்: டார்க் வ்பேட்’ படத்தைத் திரும்பவும் கையிலெடுத்திருக்கிறார் ஜேம்ஸ் கமரூன். ‘டெட்பூல்’ படத்தை இயக்கிய டிம் மில்லர் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். படம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## மிரட்டல்

# ‘ஜாவ்ஸ்’

**1975** ஆம் ஆண்டு வெளியான ஹொலிவூட் இயக்குநர் ஸ்பீல்பெர்க்கின் ‘ஜாவ்ஸ்’ படம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. சுறா மீனை வைத்து மிரட்டினார் ஸ்பீல்பெர்க். ஒரு மீன் இவ்வளவு மிரட்டுமா? என்ற கேள்வி, படத்தைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது. யுனிவர்ஸல் ஸ்டுடியோஸ் தயாரிப்பாளர்களான ரிச்சர்ட் டி ஜானுக், டேவிட் ப்ரவுன் ஆகிய இருவரும், பீட்டர் பென்ச்லீ எழுதிய நாவலான ‘ஜாவ்ஸ்’ பற்றித் தெரிந்து கொள்கின்றனர். சிறிய நகரத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்த ஒரு பெரிய வெள்ளைச் சுறாவைப் பற்றியும், அதைக் கொல்வதற்காகக் கடல் பயணம் மேற்கொண்ட மூன்று நபர்களையும் பற்றிப் பேசுவதே அந்த நாவல். அதைப் படித்து முடித்த இருவரும், உடனடியாக இதைப் படமாக்கியே தீரவேண்டும் என்று முடிவு செய்கின்றனர். ஆனால், நூற்றுக்கணக்கான படங்களைத் தயாரித்து ஜாம்பவானாகத் திகழ்ந்த யுனிவர்ஸல் ஸ்டுடியோஸ் நிறுவனம், இந்த மாதிரி ஒரு படத்தைத் தயாரித்தது அதுவே முதன்முறை. இந்தப் படத்தை ஸ்பீல்பெர்க் இயக்கினார்.

**கதை**

அமிட்டித் தீவின் கடற்கரை ஓரத்தில் ஒரு களியாட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஓர் ஆணும் பெண்ணும் குளிப்பதற்காகக் கடலை நோக்கி ஓடுகிறார்கள். போதையில் இருக்கும் ஆணால், அந்தப் பெண்ணுக்கு ஈடாக ஓட முடியவில்லை. போதை தலைக்கேறி கரையிலேயே படுத்து விடுகிறான்.

நீந்தியபடி கடலின் உள்ளே சென்றுவிடும் அந்தப் பெண்ணை, ஏதோவொன்று நீருக்கடியிலிருந்து கொடூரமான முறையில் தாக்குகிறது. இப்படியான பரபரப்புடன் தொடங்குகிறது படத்தின் முதல் காட்சி. மறுநாள் காலையில் பொலிஸ் அதிகாரி ப்ரோடியின் வீட்டுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. போனில் சொல்லப்பட்ட இடத்துக்குச் செல்லும் ப்ரோடி, கரையில் கண்ட காட்சியைப் பார்த்து உறைந்து நிற்கிறார். ஒரு பெண்ணின் உடல் சிதைந்த நிலையில் கரை ஒதுங்கியிருக்கிறது. இது நிச்சயம் சுறா மீனின் தாக்குதல்தான் என்று உறுதி செய்யும் ப்ரோடி, கடற்கரையைப் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவர முயல்கிறார். ஆனால், இந்த விடயம் வெளியே தெரிந்தால் அமிட்டித் தீவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துவிடும் என்று, இதை அப்படியே மூடி மறைத்து விடுமாறு ப்ரோடிக்குக் கட்டளையிடுகிறார் மேயர் லாரி வான். வேறுவழியின்றி தலையாட்டுகிறார் ப்ரோடி. சிறிது இடைவெளியிலேயே அடுத்த தாக்குதலும் நடக்கிறது.

உஷாராகும் காவல்துறை, சுறாவின் தலைக்கு விலை நிர்ணயம் செய்கிறது. உள்ளூர் வேட்டைக்காரரான குயிண்ட், தான் சுறாவைக் கொன்று கொண்டு வந்தால் 10ஆயிரம் டொலர்கள் தரவேண்டும் என்று நிபந்தனை வைக்கிறார். இதற்கிடையே, கடல் ஆராய்ச்சியாளரான ஹூப்பர் என்பவரைப் பொலிஸ் நியமிக்கிறது.

இறந்த பெண்ணின் உடலைப் பரிசோதனை செய்யும் ஹூப்பர், இந்தத் தாக்குதலுக்குக் காரணம் ஒரு ராட்சசச் சுறா என்று அடித்துக் கூறுகிறார். இந்த நிலையில், மீனவர்கள் கூட்டம் ஒன்று சுறாவை வேட்டையாடப் புறப்படுகிறது. அன்று மாலையே ஒரு மிகப்பெரிய சுறாவைக் கொன்றுவிட்டும் கரை திரும்புகிறது. காவல்துறையும், ஊர் மக்களும் சுறா ஒழிந்தது என கொண்டாடித் தீர்க்கின்றனர். ஆனால், சுறாவின் உடலை ஆய்வு செய்யும் ஹூப்பர், இது சாதாரண சுறா என்றும், அதன் உடலில் கடந்த 24 மணி நேரத்தில் எந்த மனித உறுப்புகளும் இல்லை என்றும் ப்ரோடியிடம் கூறுகிறார். அதை உறுதிப்படுத்தும் வகையில், அடுத்த நாளே கடற்கரையில் மக்கள் குழுமியிருக்கும் ஒரு நேரத்தில் அடுத்த உயிரையும் காவு வாங்குகிறது ராட்சத ஆட்கொல்லிச் சுறா. இந்தத் தாக்குதலில் ப்ரோடியின் மகன் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்.

இதனால் கடும் கோபமடையும் ப்ரோடி, ஹூப்பர் மற்றும் குயிண்ட் உதவியுடன் சுறாவை வேட்டையாடக் கடலுக்குள் பயணம் செய்கிறார். இதனால் அந்தச் சுறா கொல்லப்பட்டதா? என்பதே ‘ஜாஸ்’ படத்தின் கதை.

**நாவலில் இருந்து வேறுபடும் விதம்**

படத்தின் தலைப்புக்குப் பிறகு ஒரு பெண் கொல்லப்படும் காட்சியில் வேகமெடுக்கும் படம், எங்கும் நிற்காமல் வேகமாகவே இறுதிவரை பயணிக்கிறது. வி{வல் எஃபெக்ட்ஸ் பெரிதாக வளராத காலகட்டம் என்பதால், படம் முழுவதும் செயற்கைச் சுறாவே. ஆனாலும், ஒரு காட்சியில் கூட அது பொம்மை என்று நம்ப முடியாதபடி காட்சிப்படுத்தப்பட்டிருப்பதே இயக்குநர் ஸ்பீல்பெர்க்கின் சாமர்த்தியம். அடிப்படையில் "ஜாவ்ஸ்' நாவலை அப்படியே எடுத்துவிடாமல், படத்தில் சுவாரஸ்யத்தைக் கொண்டுவர ஆங்காங்கே பல நகைச்சுவை வசனங்களைப் புகுத்தியிருப்பார் ஸ்பீல்பெர்க்.

**கடலில் எடுக்கப்பட்ட முதல் படம்**

பெரும்பாலான காட்சிகள் கடலில் எடுக்கப்பட்ட முதல் படமும் இதுவே. 1975ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி வெளியானது படம். ஒரு சுறா மீனை வைத்து இப்படிக்கூடப் படமெடுக்க முடியுமா என இரசிகர்கள் வியந்தனர். உலகெங்கும் பல கோடிகளைக் குவித்தது. விளைவு, ஹொலிவூட் வரலாற்றில் அதிக வசூலைக் குவித்த படமாக ‘ஜாவ்ஸ்’ விளங்கியது. 45 ஆண்டுகள் கடந்த பின்னரும் ஹொலிவூட்டில் அதிக வசூலைக் குவித்த படங்களில் இது 7ஆவது இடத்தில் இருக்கிறது.







தேவநாயகம் தேவானந்த்

போர் நெருப்பில் சுவாசக்காற்று தமிழோசை - 02

# போர்க்காலத்தில் தமிழோசை




பி.பி.சி. தமிழோசை ஆரம்பித்தபோது இலங்கைக் கடிதம் என்று ஒரு நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது. அந்த நிகழ்ச்சியை எழுதிப் படித்தவர் தம்பு என்பவராவர். அவர் இலங்கைக்காரர். ஆனால் இந்தியப் பொதுச் சேவையில் சென்னையில் கலெக்டராகப் பணியாற்றியவர். அவர் தான் அந்த இலங்கைக் கடிதத்தை எழுதிப் படித்தவர்.

"இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பின்னர் 1947ஆம் ஆண்டு தமிழ் ஒலிபரப்பைச் சஞ்சிகை நிகழ்ச்சியாக விரிவுபடுத்தும் நோக்குடன் பி.பி.சி. என்னை அழைத்தது. 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நான் பி.பி.சி.க்கு வந்தேன். 1948ஆம் ஆண்டு ஒரு முறையான சஞ்சிகை நிகழ்ச்சியாக இதை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதற்காக ஒரு முறையான முகப்பிசையை உருவாக்கி, இலங்கைக் கடிதம் என்று இருந்ததை உலகக் கடிதமாக, உலக நிகழ்ச்சியாக நடத்துவதற்கு ஏற்பாடாகி, 1948 ஆம் ஆண்டில் இந்தத் தமிழ் நிகழ்ச்சிக்குத் தமிழோசை என்கிற பெயர் ஏற்பாடாயிற்று" என்று தெரிவித்தார் 'தமிழோசை' என்ற உலகஒசையை எமக்குத் தந்த சோ.சிவபாதசுந்தரம்.

**டி.பி.ஜெயராமையரால் இசையமைக்கப்பட்ட முகப்பிசை**

இசைக்கலைஞர் டி.பி.ஜெயராமையர் அவர்களால் இசையமைக்கப்பட்ட தமிழோசையின் முகப்பிசை ஒரு தனித்துவமான அடையாளம். அது ஈழத்தவர் அடையாளமாகவும் மிளிர்ந்தது. இப்போதும் எமது காதுகளில் அது ரீங்கா ரமிடுகிறது. ஈழப்போராட்டம் கூர்மைப்பட்ட 198384 ஆண்டுக் கால கட்டத்தில் இருந்து ஈழத்திலிருந்து இலட்சக்கணக்கானவர்கள் புலம் பெயர்ந்தார்கள். அவர்களுக்குத் தாயகச் செய்திகளுக்கான நம்பகமான தோழனாகத் தமிழோசையே விளங்கியது.

**பி.பி.சியின் வளர்ச்சியும் விருத்தியும்**

ஆரம்ப காலகட்டங்களில் வாரமொரு முறையாகவும் பின்னர் வாரமிரு முறையாகவும் ஒலிபரப்பான பி.பி.சி. தமிழோசை பின்னர் செய்தி மற்றும் நடப்புச் செய்திகள் என்று பரிணமித்தது.

1980களில் தமிழோசை செய்தி மற்றும் சித்திரங்கள், வானொலி நாடகங்கள் என்று விரிவடைந்து 15 நிமிடமாகவிருந்த நிகழ்ச்சி நேரம் அரைமணி நேரமாக உயர்த்தப்பட்டது. அத்துடன் வாரத்தில் இரண்டு நாள்கள் நடந்த தமிழோசை நிகழ்ச்சி வாரம் 5 நாள்களுக்கு மாற்றப்பட்டது. தமிழ்நாட்டின் வெவ்வேறு பகுதிகளின் தமிழ் உரையாடல்களோடு ஈழத்தமிழை உலக வானொலியொன்றில் கேட்கின்றபோது எமக்கிருந்த மகிழ்ச்சிக்கு அளவேதும் கிடையாது.

**போர்க்காலத்தில் தமிழோசை**

போர்க் காலத்தில் 'தமிழோசை' இன்றி வாழ்வு இல்லை என்ற நிலையே நீடித்தது. இலங்கை உள்நாட்டுப் போரில் பக்கச் சார்பற்ற சாட்சியமாய் அது நீடித்தது. இலங்கையின் இறுதிப் போர் நடைபெற்ற காலகட்டத்தில் போர்ச் செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் போர்ப் பகுதிகளுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், போர் முனையில் இருந்து நேரடித்தகவல்களை மக்கள், விடுதலைப்புலிகள், இராணுவத்தினர் மற்றும் அரச மருத்துவர்களிடம் தொலைபேசியில் தொடர் கொண்டு பெற்று தமிழோசை உலகத் தமிழர்களுக்கு வழங்கியது.

**பி.பி.சிக்குப் புலிகள் வழங்கிய அறிவிப்பு**

ஆனையிறவு இராணுவத்தளத்தை விடுதலைப்புலிகள் தரை வழியாகவும் கடல் வழியாகவும் தாக்க ஆரம்பிக்கிறார்கள். போர் நடைபெறப்போகும் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றவில்லையென்றால் அதிக உயிர்ச் சேதம் ஏற்படும். இதனால் மக்களை வெளியேற்ற வேண்டும். இந்த அறிவித்தலை விடுதலைப்புலிகள் ஒரு நம்பகமான ஊடகம் ஊடாக மக்களுக்கு வழங்க நினைத்தார்கள். அப்போது தான் மக்கள் உடனடியாகச் செயற்படுவார்கள் என்று நம்பினார்கள். அப்போது தமிழோசையில் இந்த அறிவிப்பை விடுப்பதே சரியானது என்று எண்ணினார்கள். அதற்காக யாழ்ப்பாணத்தில் தமிழோசைச் செய்தியாளராக இருந்த உதயன் பத்திரிகையின் அப்போதைய ஆசிரியர் வித்தியாதரனுக்கு இந்த விடயத்தை அறிவித்தார்கள்.

அவர் அன்றிரவே தனது தொலைபேசியூடான செய்தி அறிவிப்பில் போர் தீவிரமடையும் ஆனையிறவுக்கு அண்மையில் உள்ள பகுதிகள் மற்றும் கடலோரப் பகுதி மக்கள் வெளியேறவேண்டும் என்ற அறிவித்தலைத் தமிழோசையூடாக வெளிப்படுத்தினார். மக்கள் உடனடியாகவே வெளியேறியதால் சாவுகள் தவிர்க்கப்பட்டன. இதை வித்தியாதரனும் நினைவு கூர்ந்தார். இந்த அறிவித்தலைத் தமிழோசையில் தெரிவித்ததற்காக வித்தியாதரன் பின்னர் இராணுவத்தினரால் விசார ணைக்குட்படுத்தப்பட்டார்.

போர்க் காலத்தில் 'தமிழோசை' இன்றி வாழ்வு இல்லை என்ற நிலையே நீடித்தது. இலங்கை உள்நாட்டுப் போரில் பக்கச் சார்பற்ற சாட்சியமாய் அது நீடித்தது. இலங்கையின் இறுதிப் போர் நடைபெற்ற காலகட்டத்தில் போர்ச் செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

தொடரும்...

கட்டுரையாளர் - மக்கள் இதழியல் இயக்கம், இலங்கை

---

# அம்மாவைப் படைத்தது குழந்தை!

எஸ்.தர்சி




புதிதாய் எதையோ வரைந்து
கொண்டிருந்தது குழந்தை......
வட்டமும் சில கோடுகளும்
வரைந்த குழந்தை
அம்மாவைக் கண்டது......
வட்டத்துக்குள்
மேலும் ஒரு கோட்டை
கீறி அதில்
அப்பாவையும் கைப்பிடித்தது.....

மேலும் ஒரு வட்டத்தை
அம்மாவுக்குப் பக்கத்தில் வைத்து
தானே மூன்றாவதானது.....
படைத்தவர்களை ஒன்றாகவும்
படைப்பைத் தனியாகவும்
காட்சிப்படுத்திய குழந்தையின்
கன்னத்தில் முத்தமிட்ட தாய் ,
அம்மாவுக்கு

முத்தம் தாவென யாசிக்கையில்
குழந்தை முத்தமிட்டது
தான் படைத்த அம்மாவுக்கு...

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்





49

■ தாஸ் மாஸ்ரர்

கைதிகள் மீதான அத்துமீறல் தம்மீதான அச்சுறுத்தலுக்கு வழிவகுக்கும் என்பதில் அவர்களுக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

10.5.2001 அன்று பூஸாவில் 'எ' பிரிவில் கைதிகளின் எண்ணிக்கை 110 ஆகக் குறைந்திருந்தது. அதன் அர்த்தம் பல கைதிகள் விடுதலையாகி விட்டார்கள் என்பதல்ல. வேறு சிறைச்சாலைகளுக்கு வழக்குகளுக்காக அனுப்பப்பட்டிருந்தனர்.

30.5.2001 அன்று மாலையில் ஒரு வித்தியாசமான சம்பவம் நடைபெற்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்தி வாசிக்கப்பட்ட போது எல்லோரும் சத்தம் போட்டு ஆர்ப்பரித்தனர். (அப்போது இரண்டு வானொலிப் பெட்டிகள் இருந்தன) ஐ.சி.ஆர்.சியினர் தந்ததைவிடக் கைதிகள் சிலர் பணம் சேர்த்து இன்னொன்றை வாங்கியிருந்தனர். இந்த இரண்டு வானொலிப் பெட்டிகளும் தொழிற்பட்டாலும் அவற்றின் அலறல் சத்தமே அதிகம்.

தவிர தெளிவு குறைவு. அவற்றில் ஒலி பரப்பானதைக் கேட்டு எல்லோரும் ஆர்ப்பரித்தபடியால் ஏதோ எமக்குச் சார்பான விடயம் ஒலிபரப்பப்பட்டதாகத் தெரிந்தது. அருகிலுள்ள நண்பர்களிடம் கூப்பிட்டுக் கேட்டோம். "புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக அரச தலைவர் செயலகத்தில் இருந்து (அப்போதைய அரச தலைவர் சந்திரிகா) விடுக்கப்பட்ட சிறப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது" என்றார்கள்.


✦✦✦✦

எல்லா அறைகளிலும் ஒரே கலகலப்பு. அன்று முழுதும் அது ஓயவேயில்லை. சிலர் வாக்குவா்தப்படுவது போலவும் கேட்டது. கைதிகளில் பலரும் தாம் விடுவிக்கப்படு வதைப்போன்ற பவனையில் தமது உடைமைகளை ஒழுங்கு படுத்தினர். "எல்லாச் சாமான்களையும் கொண்டு போகத் தேவையில்லை. முக்கியமானதை பத்திரப்படுத்தினால் போதும்" என்ற முணு முணுப்புகள் எழுந்தன.

எங்கள் அறையிலிருந்த வவுனியா நண்பர் ஒருவர் தனது பையை ஒழுங்குபடுத்தினார். மற்றொரு நண்பனான அருண் சொன்னார், "விடுவாங்கள் என்றால் இந்த பாக் எதற்கு? உடுத்த சாறத்துடன் போவோம்" என்று, பொதுவாகப் பலரும் நம்பியது தங்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படப் போகின்றது என்பதையே...!

புலிகள் மீதான தடை நீக்கப்பட்டாதாகக் காலையில் நண்பர்களால் சொல்லப்பட்ட செய்தியை நாங்களும் ஒரு தடவை கேட்டுவிடுவோம் என்ற ஆதங்கத்தில் மாலை 6.30 மணிக்குச் சொல்லுகின்ற வனொலிச் செய்திக்காக எதிர்பார்த்துச் செய்தி நேரம் சத்தமில்லாது அமைதியாக இருந்தோம்.

'ஊடகங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக அரச தலைவர் செயலகம் சிறப்பு அறிக்கை ஒன்றை அறிவித்துள்ளது'. என்பதே அந்தச் செய்தி. எல்லோரது உற்சாகமும் ஒரு நொடியில் அடங்கிப் போயிற்று. எல்லாக் கைதிகளும் விடுதலை பற்றி அதீத கற்பனைகளுடன் இருப்பதால் எதையும் நிதானித்துக் கேட்பதில்லை. அன்றாடம் பத்திரிகைச் செய்திகளை வாசித்த பின்பும் இவ்வாறான முரண்பட்ட விவாதங்கள் எழுவதுண்டு.




✦✦✦✦

வெளிச் செய்திகள் சிறைக் கைதிகளிடத்தே மிகவும் மனத்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியன. அரசியலில் செல்வாக்கையோ, அழுத்தத்தையோ பிரயோகிக்க முடியாத கட்சிகள் அல்லது தனிநபர்கள் அரசியல் கைதிகளை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அறிக்கையிட்டால் அது ஒரு புல்லரிப்பான விடயம் தான். அன்றே விடு விக்கப்படு வோம் என்ற உணர்வு கைதிகளுக்கு வரும். இது பாதிக்கப்பட்டதன் பின்னணியில் அந்தக் கைதி மலினப்படுத்தப்பட்டதன் மன நிலையின் வெளிப்பாடாகும்.

(தொடரும்)

# அனுபவச் சிறைக்குள்...

■ கந்தர்மடம் அ. அஜந்தன்



கடந்தகாலக் காரிருளில் அகப்பட
மறுக்கிறது மனம்
ஆங்காங்கே போடப்பட்ட அடையாள
அட்டைகளும் அவசியமாயிற்று

நிலையுணர்ந்து பயணப்பைகளில்
நிறைக் குறைப்பு நிகழ்கின்றது
பயண நேரங்களில்
நீட்சிகள் வந்தாயிற்று

வழித்தடங்களில் தடைகளும்
மறிப்புக்களும் மலிந்துவிட்டன
தேடல்களும் கூடல்களும்
அவ்வப்போ ஆங்காங்கே நிகழாமலில்லை


வட்டமிடும் வல்லூறுகளைக் கண்ணுற்ற
கோழிக் குஞ்சுகளாய்
வீதிவிட்டகன்று வீடடைகிறது
விநாடிப்பெழுதுகளில் மனங்கள்

ஆண்டுநிற்கும்
ஆணிவேரில் படிந்திருந்த
அச்சப்படிமம் ஈரலிப்படைகிறது
பொது இடங்களில் போதிய
இடைவெளிகள் தென்படுகின்றன

மனதிலேற்படும் பதற்றத்தின்
செறிவில் சிறு வீழ்ச்சி
காரணம் இலக்குக் குழுக்கள்
வேறென்ற உண்மையின் உயிர்ப்பு

இருந்தும் அனுபவச் சிறையில்
ஆடைபடத் துடிக்கும் மனதை

இழப்புத் துயர்களின் வலிகள்
ஆடைத்துவிட்டே செல்கின்றன



■ டே.த.எட்வின்

# விபத்து

எதிர்பாரா நேரத்தில்
எதிர்பார்க்கா நிலையில்
எதிர்கொள்வதே விபத்து– அது
அதிவேகம், அவசரம், அலட்சியம்
அஞ்சாமையாலும்
நிகழ்வதுவே விபத்து
அதிமேதை யாய்த்
தன்னை காட்டிடும் அறியாமை
தனத்தாலும் வரும் விபத்து– வீதி
விதிமுறைக்கு மாறான
மதியிழந்த சாரத்தியம்
விளைவிக்கும் விபத்து

நேரத்தைச் சிரமத்தை மீதப்படுத்தவே
உருவாக்கிய வாகனம் – நெடும்
தூரத்தை குறுகிய நேரத்தில் கடக்கவும்
உதவிடும் சாதனம்
வீரத்தைக் காட்ட உன்
விரட்டலுக்கு அடங்கி மா இவ்
உயிரற்ற ஆதனம்– சாரதிய
தீரனே மூர்க்கம் கொண்ட
உன் செயலுக்கு
சாவே வேதனம்

பாதையில் வேகமாய்
வாகனத்தை ஓட்டுவதும்
ஆபத்திலே முடியும்– மது
போதையில் செலுத்துவதால்
நேரிடலாம் வித்து
எந்தவோர் நொடியும்
சாதனை வீரன்போல்
சாரத்தியம் செய்வதுன்
வாழ்வையும் முடிக்கும்– அதைவிட
வேதனை உன்னயிர் மட்டுமா இன்னும்
பலரின் உயிர்களையும் குடிக்கும்

காலையில் செய்தித்தாள்
கையில் எடுத்தால்
முக்கியம் ஒன்றிருக்கும் – எங்கேனும்
சாலையில் குறைந்தது
ஓரிரு விபத்தேனும்
நிச்சயம் நடந்திருக்கும்– எந்த
வேளையும் விபத்துக்கள்
பற்றியே செய்திகள்
அறிந்த வண்ணம் இருந்தும் எவரின்
மூளையிலும் ஏறாது
ஏறினும் அவர்களுக்கு
எண்ணமில்லை திருந்தும்





# சுவிஸ் எனும் அழகிய நாடு!

18

■ ஏ.ஜே.ஞானேந்திரன்

**அற்புதமான ஆட்சிமுறை**

ஆட்சி முறை சீராக இருந்தால், நாட்டின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். முன்பொரு தடவை முன்னாள் இலங்கையின் வடக்கு மாகாண முதல்வர் , தனது உரையொன்றில் சுவிட்சர்லாந்தின் ஆட்சி முறைபோலவே இலங்கையிலும் ஆட்சிமுறை அமைக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தார். இப்படி அவர் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு அங்கு என்னதான் ஆட்சிமுறை? மக்கள் தமது விருப்பத்தின்படி வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் ஆட்சிமுறையே அங்குள்ளது. முன்பு இது ஒரு கூட்டமைப்பு. ஆனால், 1848ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த தனி நாடாக உள்ளது. தற்போது மண்டலங்கள் என அழைக்கப்படும் 26 மாநிலங்களைக் கொண்ட 'கூட்டாட்சிக் குடியரசு' ஆகச் செயற்படுகின்றது. அரசில் 3 முதன்மை ஆட்சி ஆணையங்கள் உள்ளன. நாட்டு அதிபரின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கின்றது. சமுதாய ஜனநாயகக் கட்சி, சுதந்திர ஜனநாயகக் கட்சி, சுவிஸ் மக்கள் கட்சி, கிறிஸ்தவ ஜனநாயக மக்கள் கட்சி ஆகிய 4 முக்கிய கட்சிகளே சுவிஸில் ஆட்சி அதிகாரத்தில் உள்ளன.

**தேசிய மதம் என்று எதுவுமில்லை**

தரைப்படை மற்றும் வான் படைகளைக் கொண்ட இந்த நாட்டில் கட்டாய இராணுவச் சேவை உண்டு. நாட்டில் பிரெஞ்சு, ஜேர்மன், இத்தாலிய, ரோமன்ஷ் பண்பாடுகள் வழக்கத்திலுள்ளன. கேளிக்கை நிகழ்ச்சிகள் நிறைய நடைபெறுகின்றன. திரைப்படங்கள், நாட்டுப்புறக் கலைகள் உயிர்ப்புடன் உள்ளன. இசை, நடனம், கவிதை, மரச் சிற்பக்கலை மற்றும் சித்திரத் தையல் கலை பெரிதும் வளர்ச்சி நிலையில் உள்ளது. சுவிட்சர்லாந்து அதிகாரப்பூர்வ தேசிய மதம் எதையும் கொண்டிருக்கவில்லை. பெரும்பாலான மக்கள் 'கத்தோலிக்க திருச்சபை தேவாலயங்களை' ஏற்றுக் கொண்டுள்ளனர். கிறிஸ்தவம் பெரும்பான்மைமிக்க மதமாக உள்ளது. இஸ்லாமிய மக்களும் 4.3சதவீதம் உள்ளனர்.

**தலைமை நகரங்கள்**

சுவிட்சர்லாந்து 'மண்டலங்கள்' என அழைக்கப்படும் 26 மாநிலங்களைக் கொண்ட கூட்டாட்சிக் குடியரசு என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். கூட்டமைப்பின் அதிகாரத் தலைமையிடமாகப் பேர்ன் நகரமும், நாட்டின் பொருளாதார மையங்களாக இதன் இரண்டு உலகளாவிய நகரங்களான ஜெனீவாவும் சூரிச்சும் திகழ்கின்றன. பேர்ன் சமஷ்டி அமைப்புகளின் தலைநகராகவுள்ள போதிலும் சூரிச் வர்த்த உலகில் அறியப்பட்ட நகரமாக உள்ளது.

சுவிட்சர்லாந்து, ஒரு நபருக்கான உள்நாட்டு உற்பத்தியின்படி, உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக உள்ளது. உலகின் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ள நகரங்களில் சூரிச் மற்றும் ஜெனீவா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.



**தொன்மையான மக்கள் ஆட்சி**

உலகின் மிகவும் தொன்மையான மக்கள் ஆட்சியைக் கொண்ட நாடாகச் சுவிட்சர்லாந்து விளங்குகிறது. சுவிஸ் நேரடி மக்களாட்சியில் கூட்டமைப்பு மட்டத்தில் குடியியல் உரிமைகள் எனப்படும் உரிமைகள் உள்ளன. அவற்றில், அரசமைப்பு தொடக்கத் திட்டத்தைச் சமர்ப்பித்தல் மற்றும் பொது வாக்கெடுப்பு ஆகிய நாடாளுமன்ற முடிவுகளைத் தோற்கடிக்கக்கூடிய உரிமைகள் ஆகியவை இதில் அடங்கும்.

ஒரு பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் குடிமக்களின் ஒரு குழுவினர், நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தை எதிர்க்கலாம், அதற்கு அவர்கள் அந்தச் சட்டத்துக்கு எதிராக 100 நாள்களுக்குள் 50ஆயிரம் கையொப்பங்களைப் பெற்றிருக்க வேண்டும். அப்படி இருந்தால், ஒரு தேசிய வாக்கெடுப்பு நிகழ்த்தப்படும், அதில் வாக்களிப்பவர்கள், பெரும்பான்மையின் மூலம் சட்டத்தை ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என முடிவு செய்வார்கள். எட்டு மண்டலங்கள் ஒன்றிணைந்தும் ஒரு கூட்டமைப்பு சட்டத்தின் மீதான பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்க முடியும். சுவிஸ் கூட்டமைப்பில் 26 மண்டலங்கள் உள்ளன. இந்த மண்டலங்களே இங்கு 'கன்டோன்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

(தொடரும்)





# அதியுயர் காண்டத்து மேடைகள்

மேடை - 30

தையிட்டி அ இராசதுரை

தென்மராட்சியர் உள்ளதைச் சொல்லாதபடிக்கு எந்த மகா பொய்யைச் சொல்லி... இந்த சப்ஜெக்ரை மழுப்பியடிக்கலாம் என்ற கணக்காய்... விழுங்கிக் கக்கிக் கொண்டிருந்த நேரம் பார்த்துத்தான்... திடீரட்டி யனவாய் ஓர் ஆமான கோல் ஒன்ற பொறெஸ்ற பக்கத்திலிருந்துதான்... தென்மராட்சியாருக்குப் பொறுத்த நாய்ப் பூட்டு, நரிப் பூட்டு அத்தனையோடும் சேர்ந்த புலிப்பூட்டும் என்ற கணக்காய்... வந்து சேர்ந்தும்விட, ஒரே தண்டவாளத்தில் அசுர வேகத்தில் எதிர் எதிராய்... வந்துகொண்டிருக்கும் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிகளுக்கிடையில் பொறுபப்பாக அகப்பட்டுப் பச்சடியான கணக்காய்... மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமலுக்கு... தென்மராட்சிச் சந்தோசத்தார் காகமும் அணிலும் பாடோரியாய் கொத்தித் தரையில் விழுந்துவிட்டதோர் அழுகிய பலாப்பழக் கோலம் பற்றி நிற்க, திடீரட்டியனவாய் ரஞ்சித் பலாலி முகாமிலிருந்து, குதித்துப் பாய்ந்து வந்தும் விட்ட, வோக்கி டோக்கியின் அழைப்புக்கு வோக்கியைத் தூக்கிக் காதுக்குள் வைத்த கை வாங்க முன்னராய்... டிரக் வண்டி உறுமிக்கொண்டு பறந்தும் விடுகின்றது...

★★★★


கொழும்பிலிருந்து அவசரமாக லெப்ரினன் ஜெனரல் சிவிலியன் பக்கத்துக் கொட்டி செல்லடியைப் பற்றிக் கொட்டித் தள்ளுவதற்காக வந்தே விட்டாரென்ற மிலிட்டறி நியூசையும் கேணல் ரஞ்சித் ஓடேக்கை ஓடேக்கை சிந்தியும் விட்டு...

"ஹலோ...!" கொஞ்சம் லேற்றாகத் தான் தென்மராட்சியார் படபடத்தபடியே விழுந்து கட்டியெடுக்க, எடுத்தும் விட, மறு முனையில், ஒருக்காலுமில்லாத கதையாக, "மேற்படியான் தான்" என்பதை அறிந்ததும், அந்தப் படியவே குலுங்கி மலுங்கிப் போயும் விடுகின்றாரே...!

★★★★

"சேர் இப்ப எங்கடை கோல் வந்த ரைமாக, ஆமி பீப்பிள் உங்கள் கூட நிண்டிருக்கினம்...! அப்படித்தானே ஐயிற்றம்?" இப்படித்தான் அந்தச் சூர சங்காரரின் திறில்லான ரோக்கும் ஒரு ரைகர் பாய்ச்சல் சடினாய்ப் பாய... " ஓ... யெஸ் சேர்! பிளீஸ் மன்னிச்சுக் கொள்ள வேணும்... மன்னிச்சு..." என்றெல்லாம்... ஒரு சமாதானப் புறாவாகச் சிறகடித்துத் தள்ளியவர்... ஒரு சரியான தமிழ்ப் பற்றாளனாய்க் காட்டிக் கொள்ளத் துடித்தவர், பெரும் அக்கப்பாடு பட.... "ஓ யெஸ்! ஓ யெஸ்! இப்ப அதொண்டுமில்லைத்தானே? நீங்களும் இந்த டிபென்ஸ் ஆமி ஏரியாவிலுயுள்ள ஒரு சிவிலி யன் தானே? நவ் டோன்ற் வெறி போ தற் ஐயிற்றம்! நாங்க போராளிகள் மான்! எந்த விநாடியிலையும் பங்ஷன் பண்ணுவம்! சோ எங்களை எவனும் தடுக்க ஏலாது...! ஆனால் ஒண்டு இப்ப ரைமை வேஸ்ற் பண்ணாமலுக்கு, வெறிவெறி சடினாய் இந்த ஆமி ரேஞ்சாலை, வாபஸ் பெறுங்கோ, சுறுக்காய் இங்காலை வந்திடுங்கோ, அதுவரைக்கும் வெயிற் பண்ணுவம்! வெயிற் பண்ணுவம்"

மேற்படியான் இப்படியெல்லாம் ஒரு போராளிக் குண்டாய் வெடித்துத் தள்ளவும், திடீரென்று, பொறெஸ்ற் கோல் கட் ஆகிய கை வாங்க முன்னம், வடக்குத் திசையிலிருந்து, விக்கினேஸ்வரா வீதியில் இரண்டு கப் வாகனங்களும், ஒரு மிலிற்றரி ஜீப் வண்டியுமாய்... பறந்து வந்துகொண்டிருக்கும் காட்சி!




★★★★

"ருமாறோ இந்த றேஞ் சிவிலியன் பீப்பிள் ஒக்கமே இந்த ஆமி ரேஞ் புள்ளா காலி பண் வேணும்! இப்ப இக் மெண்ட கொட்டி செல் ஆவ ஆவா" இப்படித் தமிழில் மிடுக்காகக் கதைத்த ஒரு சீனியர் சீனியர் உயரதிகாரியின் முகத்தைப் பயக்கெடுதியில் பார்த்துக் கொள்ள முடியவில்லை என்றுதான்... வடிவாக மட்டுக் கட்டிக் கொண்ட, தென்மராட்சியார் நாங்கள் இந்த மண்ணைவிட்டுப் போகின்ற வரைக்கும், இனிச் செல்லடியில்லையென்ற துணிவோடு... கொஞ்சம் கூலாய் நிற்க, இப்ப இந்த செக்கன்டே... கொட்டி செல் வந்து கொட்டுண்டாலும், அதற்கிடையில் நின்று மெனக்கெடாமல் ஓடித் தப்புவோம் என்ற பாணியில்... வந்த வாகனங்களின் அசுர கதி, ஓட்ட பாட்டங்கள்...!

அந்த ஆமி ரேஜ்ச் இப்பொழுது ஒரு பரிபூரண அமைதிப் பிரதேசமாய் அத்தனை ஆமிக்காரர்களுக்கும் பறையாமல் அசுக்கிடாமலுக்குக் கூலாய் இருந்து கொண்டுமிருக்கிறது...

(தொடரும்)

> **தென்மராட்சிச் சந்தோசத்தார் காகமும் அணிலும் பாடோரியாய் கொத்தித் தரையில் விழுந்துவிட்டதோர் அழுகிய பலாப் பழக் கோலம் பற்றி நிற்க, திடீரட்டியன வாய் ரஞ்சித் பலாலி முகாமிலிருந்து, குதித்துப் பாய்ந்து வந்தும் விட்ட, வோக்கி டோக்கியின் அழைப்புக்கு வோக்கியைத் தூக்கிக் காதுக்குள் வைத்த கை வாங்க முன்னராய்... டிரக் வண்டி உறுமிக் கொண்டு பறந்தும் விடுகின்றது...**



மிருசுவில் தமிழ்தாசன்.

# மென்மையுடன் வாழ்வோம் வாரீர்!

பாடுபட்டுத் தேடிப் பணத்தைச் சேர்த்து வைக்க
கேடு கெட்ட கள்வர் அதைக் கவர்ந்து செல்ல- காடு
மேடு சென்று கடினமாய் உழைத்து வாழ்ந்தோர்
வாடுமவர் பாடுதனைப் பாரீர்!


பஞ்சமா பாதகங்கள் அஞ்சாமற் செய்பவர்கள்
கஞ்சா கசிப்பருந்திக் காதகராய் வாழ்பவர்கள்- துஞ்சா
விஞ்சாது நின்று வீண்பாவம் புரிபவர்கள்
நெஞ்சாரத் தம் பாவம் உணர்வாரோ?

ஊழ்வினையோ, சூழ்வினையோ சுந்தரத் தமிழ் மண்ணில்
நாள்தோறும் நடப்பவைகள் நல்லவை அல்லனவே! - பாழும்
வாள்வெட்டு வக்கிரங்கள் வஞ்சனைச் சிந்தனைகள்
யாழ்.விட்டுப் பாழ்பட்டுப் போகாதோ!

ஆன்மிகச் சிந்தனையுடன் ஆண்டவர் மேல் வந்தனையும்
வான்மேவும் வாழ்க்கை வழி செல்லவைக்கும் - வீணே
தொன்மைமிகு தமிழினத்தின் பண்பாட்டைப் புண்படுத்தா
மேன்மையுடன் நாம் வாழ்வோம் வாரீர்!

# மனிதப் போர்வை

காயத்திரி சாரா



பேசப்படுபவர்களையும்
பேசப்படுவதற்காகப் பாடு படுபவர்களையும் தவிர
வாழ்ந்து மடிந்த மனிதர்கள் பலர்...

பேசப்படுபவர்களும்
அதற்குப் பாடு படுபவர்களும் மனிதர்கள் தானா
அது ஆராய்ச்சிக்குரியது

வாழ்ந்து மடிந்த, பேசப்படாத,
நினைவில் கொள்ளாத
மனிதர்கள் பலர் இருந்ததும்
தொடர்வதும் கூட ஆராய்ச்சிக்குரியது

ஊமையாக மடிந்த அவர்களைப் புறந்தள்ளி
கடக்கிறது காலம்
மனித முகமூடியில் உலாவும்
பலரக உயிர்களைப் பரப்பியுள்ள பூமி
இதென்பது வாழ்வின் முடிவில்தான்
அவற்றுக்குப் புரிகிறது
புரிதலோடு புதைந்து போவதால்
பயனற்றுப் போகிறது புரிதல்
சந்ததிக்குக் கடத்தப்படாத
அறிவு - அனுபவத்தால்
தொடர்கிறது இந்த மனிதப் போர்வை

### சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி



# மதங்கள் உன்னதமானவை

செ.மகேஷ்

எம்மை ஆன்மீக வழியில் நடத்துவதற்கு உந்தும் ஒவ்வொரு மதமும் உத்தமமான சமய நெறிகளையே எமக்குப் போதிக்கின்றன. அவற்றைப் பின்பற்றி வாழ்வதாகச் சொல்லிக் கொள்வோர் சிலர் அவற்றுக்கு முரணாகத் தமது சுயநலக் கருத்துக்களைச் சொல்லி நிற்கின்ற பரப்புரைகளாலேயே அர்த்தமற்ற விளைவுகள் ஏற்படுகின்றன" என்றார் சிவபாதத்தார்.

அவரது வார்த்தைகளைச் செவிமடுத்த செல்லத்தம்பியர் அது குறித்து நீண்ட நேரம் சிந்தித்தார். 'காலங்காலமாக எங்களிடத்தில் நிலைத்த எமது சமய நெறிகளை நாம் ஏற்றுக் கொண்டு, அதற்கேற்ப வாழ்வை அமைதியாக அமைத்துக் கொண்டுள்ளோம். இன்று ஏனோ எமது மதங்களுக்கிடையே நாம் முரண்படுவது மாத்திரமல்ல, மூடர்களாகக் கருத்துரைத்துக் கடவுளே ஏற்றுக் கொள்ள மறுக்கும் அழிவுப் பயணத்தையும் தொடர்கிறோம்' என்றும் எண்ணிய செல்லத்தம்பியர் வேதனைக்குள்ளானார்.

"மதங்கள் உன்னதமானவை அவை போதிக்கும் தர்மங்கள் தத்துவங்கள் எமது வாழ்வுக்கு வளம்தரும் நற்பண்புகளை எம்மிடத்தில் விதைக்கின்றன வளர்க்கின்றன. ஆனால் அந்த மதங்களைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்வோர் செய்கின்ற மக்களால் ஏற்றுக் கொள்ள இயலாத நீதியற்ற செயல்களால் இந்த நல்நெறி புகட்டும் மதங்கள் மீதும் வெறுப்பை ஏற்படுத்துகிறார்களே!' என்றும் செல்லத்தம்பியர் எண்ணினார்

⊙ ⊙ ⊙ ⊙

அன்றைய நாள்களில் மக்களை நல்வழிப்படுத்தத் தோன்றிய ஆன்மீக வழிகாட்டிகளான தேரர்கள், நாயன்மார்கள், அப்போஸ்தலர்கள், நபிமார் கள் ஆகியோரின் தியாக வரலாறுகள் எமக்கு இன்னமும் அன்பு, அமைதி காருண்யம், சமாதானம் குறித்த பாடங்களைப் புகட்ட வில்லையே! என்றும் கலங்கினார்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் வேதனைகளோடு சாவைத்தழுவிய வேளையில் தனக்குத் துன்பம் விளைவித்த யூதர்க ளுக்கா 'தந்தையே இவர்கள் அறியாமற் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்' என்று வேண்டுகிறார். அதே போல் அண்மையில் நிகழ்ந்த குண்டு வெடிப்புகளால் ஏற்பட்ட துயரத்துக்காகப் பயங்கரவாதிகளைப் பழிதீர்க்க வேண்டும் எனக் கருதாமல் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடு பவர்களைத் தடுப்பதற்காகவே, அதி வணக்கத்துக்குரிய கொழும்பு பேராயர், கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கிறிஸ்தவ மத இறைவாக்கினை முன்வைத்து அமைதியைப் பேண உதவினார்.

அவ்வாறே ஏனைய மதப் பெரியார்கள் பலரும் தத்தம் மனிதநேயமிக்க மதக் கோட்பாடுகளை முன்வைத்து மக்களை வழிநடத்தினார்கள்.

'அன்பே சிவம்' என்பர் இந்துக்கள். 'அயலவனுக்கு உதவுதலே இறைவாழ்வு' என்கிறது இஸ்லாம். 'கொலை செய்யாதே' என்கிறது பௌத்தம்.

இத்தனை ஆன்மீக வழிகாட்டல்களையும் மீறி மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டே ஒரு சிலர் செய்யும் அநியாயங்களால் நாடே கலங்கி நின்றதைப் பார்த்த செல்லத்தம்பியர் மனம் வெந்தார்.

ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்கள் மத்தியிலும் ஒரு சிலர் மதவெறி கொண்டவர்களாக, மனித நேயம் தொலைத்தவர்களாக, ஏனைய மதங்களை மதிக்க மறந்தவர்களாகச் செயற்படுகிறார்களே என்று எண்ணுகின்றபோது அவர்கள் சார்ந்துள்ள மதங்கள் மீதிலும் எமக்கு வெறுப்பு ஏற்படவே செய்கிறது.

அவர்கள் தமது மதத்தின் மாண்பைக் கெடுக்கவே செய்கிறார்கள் என்பதை அவர்கள் அறியாமற் செய்கிறார்களோ என்னவோ! ? செல்லத்தம்பியர் இவற்றை எவரிடம் சொல்வது எனத் தெரியாமல் தடுமாறினார்.

'இறைவன் ஒருவன்' என்பதே செல்லத்தம்பியரின் நமபிக்கையாகும். எதற்கெடுத்தாலும் மனிதர்களுக்குள்ளே இனமத பிரிவினைகளைப் பேசி நீதி நியாயங்களையோ உண்மைகளையோ மறைத்துவிடலாம் என முயல்பவர்கள் என்றுமே வெற்றி பெறப் போவதில்லை. அனைத்தையும் மனத்திலிருத்தி அமைதியாகத் தியானித்த செல்லத்தம்பியர் எதையும் வெளியே சொல்லவில்லை.



வேலணையூர்தாஸ்



## சிறு புன்னகைதான்...

ஒரு சிறு புன்னகை தான்
முகத்தில் அழகை எழுதுகிறது
மௌனமாக இருந்தாலும் மனதோடு பேசுகிறது
மனம் நிறைந்து வரவேற்கவும்
மகிழ்வோடு வழியனுப்பவும் போதுமானதாக இருக்கிறது
சிறு புன்னகைதான்
இரகசியமான கேள்வியொன்றின் விடையாக இருக்கிறது.
புன்னகை நினைவில் இனிக்கின்ற பரிசாக இருக்கிறது .
இசையொன்றை இரசிப்பதாகவும்
ஓர் உணவை ருசிப்பதாகவும் இது சொல்லக்கூடும்
கண்டவரால் விரும்பப்படுவதாகவும்
ஞாபகங்களில் ஒட்டிக் கொள்வதாகவும் இருக்கிறது
சிறு புன்னகை தான்
பெருமகிழ்வாக வளர்கிறது.

புன்னகை எப்போதும் நல்ல செய்திகளையே எடுத்துவருகிறது
ஆயிரம் வார்த்தைகளுக்கீடாக
ஒரு சிறு புன்னகை அமையலாம்
இந்தச் சிறு புன்னகை
இசைக்கும் தேன் வண்டுகளாகிப் பறக்கலாம்.
அவற்றில் சில அழகிய கவிதைகளாக எழுதப்படலாம்
அல்லது இளம் இசையமைப்பாளர் ஒருவரின்
பாடலாகி இசைக்கப்படலாம்
அப்படியொரு சிறு புன்னகைதான்
இன்றிரவு உங்கள் தூக்கத்தைக் கெடுத்திருக்கிறது..

சிவரம்யா



## யாரை நோவது...?

நாட்டிலும் வீட்டிலும் அமைதி குழம்பியது
நாலா பக்கங்களிலும் காவலர் பணி அமைகிறது
இடையிடையே ஊரடங்கு பிறப்பிக்கப்படுகிறது
இறைவனை அழிப்பதற்குச் சதி தொடர்கிறது

கொடுங் குணம் அன்பைக் கொல்கிறது
கொன்று குவித்து இன்பம் காண்கிறது
எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கு உரியது
எல்லாப் பழியும் துஷ்டர்களுக்குச் சேர்வது

சகோதரத்துவம் பேண முடியாது
சமத்துவம் காணத் தெரியாது
பதற்றமும் கவலையும் பீடிக்கின்றன
பயத்துடன் அழுகிறது உலகு

திட்டங்கள் தீட்டி மௌனப் போர் நடக்கிறது
தினமும் பாவச் செயல்கள் தொடர்கின்றன
எவருக்கும் அஞ்சாது புரளி எழுகிறது
எங்கும் சோக அலை வீசுகிறது

## மேடம்

சுக்கிரன்,செவ்வாய்,ராகு,சந்திரனால் நற்பலன் வந்து சேரும். சமூக நிகழ்வுகளின்போக்கு உணர்ந்துசெயல்படுவீர்கள். வாகனப் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். இதமான அணுகுமுறையால் புத்திரரின் மனதில்நம்பிக்கையைபலப்படுத்துவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்வுஏற்படும். வீட்டுதேவைகள்தாராளசெலவில்பூர்த்தியாகும். ஆரோக்கியம்சீராக இருக்கும். மனைவி பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில். வியாபாரத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணியிலக்கை நிறை வேற்றுவர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும்.மாணவர்களுக்குபடிப்பில் சிறந்து விளங்குவர்.

## இடபம்

குரு. சுக்கிரன். சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். பேச்சில் நிதானம் வெளிப்படும். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். வெளியூர்ப் பயணத்தால் எதிர்பார்ப்பு நிறைவேறும். பிள்ளைகள் நண்பர்களுக்கு இணையாகப் பழகுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். உடல்நிலை பலம்பெறும். கடன் அடைபடும். மனைவி உங்களின் ஆலோசனையை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வர். தொழிலில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை மதிக்கவும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## மிதுனம்

சுக்கிரன். சந்திரனால் நன்மை கிடைக்கும். நண்பரின் உதவியால் மனக்குழப்பம் மறையும். செயல்களில் நிதானம் பின்பற்றவும். உடன்பிறந்தவர் வகையில் சுபநிகழ்ச்சி நடந்தேறும். வீடு. வாகனத்தில் பாதுகாப்பு அவசியம். பிள்ளைகள் அறிவுத்திறனில் மேம்படுவர். பூர்வீகச் சொத்தில் பணவரவு அதிகரிக்கும். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர். .மாணவர்கள் பெண்கள் இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர்.

## கடகம்

பெரும்பான்மைகிரகங்கள்அனுகூல அமர்வில் உள்ளனர். முயற்சிகளில் துணிவுடன்இறங்குவீர்கள்.இருக்கும்.தம்பி தங்கை அன்பு பாராட்டுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் செயல்பாடு பெருமிதம் அளிக்கும். வழக்குவிவகாரத்தில்சுமுகதீர்வு கிடைக்கும்.மனைவியின் உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். தொழில் வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும். பணியாளர்கள் அதிக உழைப்பால்முன்னேற்றம்அடைவர். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் அக்கறை கொள்வது நல்லது.

## சிங்கம்

பெரும்பான்மை கிரகங்களால் வியத்தகு நற்பலன் உண்டாகும். உற்சாகமுடன் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். வீடு வாகனம் விரும்பியபடி வாங்க யோகமுண்டு. பிள்ளைகள் தகுதி திறமைகளை வளர்த்துக் கொள்வர். பூர்வீகச் சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். ஆரோக்கியம் சீராக இருக்கும். சத்தான உணவுவகைகளை உண்டு மகிழ்வீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும்.தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிப்பால் லாபம் கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.பெண்கள் புத்தாடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் நண்பர்களுக்கு உதவுவர்.

## கன்னி

சுக்கிரன், சந்திரன் நற்பலன் வழங்குவர். பொதுநலனில் அக்கறை கொள்வீர்கள். மனதில் மகிழ்ச்சியும் உற்சாகமும் கூடும். உறவினர் நெருங்கி வந்து சொந்தம் பாராட்டுவர்.வீடு வாகனத்தில் பராமரிப்பு செலவு ஏற்படும். பிள்ளைகள் உங்களின் அறிவுரையை தயக்கமுடன் ஏற்றுக்கொள்வர். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும்.மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமையை தேடித் தரும். தொழில், வியாபாரம் செழித்து வளர கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பு மூலம் வருமானம் காண்பர். பெண்கள் பிறருக்காக பொறுப்பு ஏற்க வேண்டாம்.மாணவர்கள் விழிப்புடன் செயல்படவும்.

# இந்த வாரம்

**26.05.2019 முதல் 01.06.2019 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## துலாம்

குரு. கேது. சனீஸ்வரர். புதனால் ராஜயோகபலன் கிடைக்கும். உங்கள் பேச்சும், செயலும் வசீகரமாகும். புதியவர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். வாகனப்பயணம் பாதுகாப்பாக அமைந்திடும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் சிறப்பாக இருக்கும். தொழில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். ஆதாயம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் தொழில்நுட்பங்களை அக்கறையுடன் கற்பர். மாணவர்கள்படிப்பில் சிறப்பதோடுநண்பருக்கும் உதவுவர்.

## விருச்சிகம்

சந்திரன் நற்பலன் தருவார்.அக்கம் பக்கத்தவருடன் நிதானமுடன் பேசவும். நிலுவைப்பணிகள் விரைந்து நிறைவேற்றுவது நல்லது. வீடு வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்களுக்கு படிப்பு. வேலையில் அதிக கவனம் வேண்டும். பூர்வ சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். உங்களுக்கு எதிர்ப்பாக செயல்பட்டவர் கூட விலகிச் செல்வர். வெளியூர் பயணத்தில் கூடுதல் கவனம் வேண்டும்.மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் ஒற்றுமை பலப்படும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயற்படுவது நல்லது. பெண்கள் சேமிப்பதில் ஆர்வம் கொள்வர்.

## தனுசு

சூரியன். புதன். சுக்கிரன். சந்திரன் நற்பலன் வழங்குவர். மனதில் புதிய சிந்தனை பிறக்கும். எதிர்ப்புக்களை சமயோசிதமாகச் சரி செய்வீர்கள். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் கிடைக்கும். புத்திரரின் ஆர்வம் நிறைந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். குடும்ப தேவைக்கான செலவு செய்வதில் தாராளம் காட்டுவீர்கள். மனைவியின் அன்பு நெகிழ்ச்சியை தரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சியும், அதிக பணவரவால் சேமிப்பும் உயரும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து முன்னேறுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர். பெண்கள் பணம் சேமிப்பதில் ஆர்வம் கொள்வர்.

## மகரம்

செவ்வாய், குரு. சுக்கிரன். சந்திரனால் அளப்பரிய நற்பலன் கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். அன்றாட வாழ்வியல் நடைமுறை சுமுகமாக இருக்கும். குடும்பச் செலவில் தாராளம் இருக்கும். தம்பி தங்கைக்கு உதவுவீர்கள். புதிய வீடு. வாகனம் வாங்கலாம். பிள்ளைகளின் நற்செயல் பெற்றோருக்கு பெருமை சேர்க்கும்.மனைவி வழி சார்ந்த உறவினர் உங்களின் நற்செயலை பாராட்டுவர். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.தொழில் வியாபாரத்தில்அபிவிருத்திப்பணிசெய்வீர்கள். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். . மாணவர்கள் படிப்பில் அதிக மதிப்பெண் பெறுவர்.

## கும்பம்

சுக்கிரன். புதன். கேது. சந்திரன், சனீஸ்வரர் அனுகூல அமர்வில் உள்ளனர்.ஆர்வம் மிகுந்த செயலால் பணி சிறப்பாக நிறைவேறும். தம்பி தங்கை உங்களின் அறிவுரையை விரும்பி ஏற்றுக் கொள்வர். வீடு வாகனம் விரும்பியபடி வாங்கலாம். பிள்ளைகள் மனதில் நல்லெண்ணத்தை உருவாக்குவீர்கள். பகைவர்கள் சொந்த சிரமங்களால் விலகுவர். நிலுவைப்பணம் வசூலாகும்.மனைவி அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும்.தொழில் வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி செய்வீர்கள். பணியாளர்கள் விரைவாக பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருட்கள் வாங்குவர்.

## மீனம்

சூரியன், சுக்கிரன். குரு. சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். குடும்பத்தினர்களிடம் ஒற்றுமை பலப்படும். வீடு வாகனத்தில் பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும். பிள்ளைகளின் செயலில் மதிநுட்பம் வளர்ந்திட உதவுவீர்கள். நோய் தொந்தரவு விலகி ஆரோக்கியம் சீர்பெறும். மனைவியின் சிறுசெயலும் சிறப்பாகஅமைந்துஅதிர்ஷ்டபலன்தரும். அரசியல்வாதிகள் பதவிபெறஅனுகூலம்உண்டு. தொழில்,வியாபாரத்தில் போட்டி குறைந்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு பணியிடத்தில் அனுகூல சூழல் இருக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் புதிய இலக்கை அடைவர்.

# தென்கிழக்கு திசையில் இருந்து....






அனார்கலி




## அம்பாறையில் வெசாக்

அம்பாறை மாவட்டத்தில் வெசாக் தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் அமைதியான முறையில் நடைபெற்றன. பௌத்த மக்கள் வாழும் அம்பாறை போன்ற நகரங்கள் உட்பட சிங்களப் பிரதேசங்களில் வெசாக் தின நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க தமிழ், முஸ்லிம் பிரதேசங்களிலும் வெசாக் நிகழ்வுகள் இடம்பெற்றன.

குறிப்பாக கல்முனை மாநகரில் முன்னெப்போது மில்லாதவாறு பௌத்த கொடிகள் பெருமளவில் பறக்கவிடப்பட்டிருந்ததுடன் நகரம் முழுவதும் வெசாக் கூடுகளும் தொங்கவிடப்பட்டுக் காட்சியளித்தன.

முன்னொருபோதும் கண்டிராத வகையில் சில முஸ்லிம் பிரதேசங்களிலும் பௌத்த கொடிகள் தொடங்கவிடப்பட்டும் வெசாக் கூடுகளும் முதற்தட வையாகக் காணப்பட்ட புதிய வரலாறு தென்பட்டது.

**இது பௌத்த நாடு எனும் முழக்கங்கள் எழுப்பப்படும் காலமல்லவா?**

## முள்ளிவாய்க்கால்

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வை கல்முனையில் உணர்வுபூர்வமாக நடத்தியது. சங்கத் தலைவர் எஸ். லோகநாதனின் தலைமையில் கல்முனை செற்றடி புலவிப் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடு, அஞ்சலி, விளக்கேற்றல் நிகழ்வுகள் நடைபெற்றன. சங்க ஆலோசகரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான எஸ்.இராசையா, பொருளாளர் ஏ.சுமன் உட்பட சங்க உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**எமது மக்களை நினைந்து அஞ்சிப்போம்.**

## நிந்தவூரில் வெசாக்

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய முஸ்லிம் பிரதேசமான நிந்தவூரில் முதற்தடவையாக வெசாக் தின நிகழ்வு இம்முறை நடைபெற்றுள்ளது. நிந்தவூர் ஆதார மருத்துவமனையில் நல்லிணக்க வெசாக் எனும் தொனியில் நிகழ்வுகள் நடைபெற்றது. இந்த மருத்துவமனையில் கடமையாற்றும் பெரும்பான்மையின மருத்துவ அதிகாரிகளும் அங்கு பாதுகாப்புக் கடமையிலிருக்கும் இராணுவத்தினரும் ஏனையோருடன் இணைந்து வெசாக் தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

மருத்துவமனையின் நுழைவாயிலும் முன் வளாகத்திலும் பௌத்த கொடியுடன் வெசாக் அலங்காரக் கூடுகளும் தொடங்கவிடப்பட்டும் விளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன. நல்லிணக்க வெசாக் ஞாபகார்த்த மரநடுகையும் மருத்துவமனை வளாகத்தில் இடம் பெற்றதுடன் குளிர்பானமும் வழங்கப்பட்டன.

**நல்லிணக்கம் தளைத்தோங்கட்டும்**



## திருச்சடங்கு

தென்கிழக்குப் பிரதேசத்தில் பிரசித்திபெற்ற கண்ணகி அம்மன் ஆலயங்களில் இவ்வருடத்தக்கான திருச்சடங்குகள் ஆரம்பமாகிச் சிறப்புற நடைபெற்று நிறைவுபெற்றன.

குறித்த அம்மன் ஆலயங்களின் வருடாந்த திருச்சடங்கு திருக்கதவு திறத்தல் நிகழ்வுடன் ஆரம்பமாகி கன்னிக்கால் வெட்டும் நிகழ்வு, திருக்குளிர்த்தி வைபவம், திருக்குளிர்த்தி பாடல் என்பனவற்றுடன் நிறைவுபெற்றுள்ளது. இலங்கையில் கண்ணகி வழிபாடு கஜபாகு மன்னன் காலத்திலே தோற்றம் பெற்றது என வரலாறு கூறுகின்றது.

## பதவி துறப்பு

கல்முனை மாநகர சபையின் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எல்.எம்.றிபாஸ், குறித்த உறுப்பினர் பதவியைத் துறந்தார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கல்முனை மாநகர சபைக்கென மருதமுனை 4ஆம் வட்டாரத்தில் தேசிய காங்கிரஸ் சார்பில் சட்டத்தரணி றிபாஸ் போட்டியிட்டிருந்தார்.

தற்போது ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ள நிலையில் சுழற்சி முறையில் கட்சியின் மற்றொரு வேட்பாளருக்கு இடமளிப்பதற்கு ஏதுவாகவே அவர் மாநகர சபை உறுப்பினர் பதவியைத் துறந்ததாகத் தெரிவிக்கின்றார்.

**முன்மாதிரியான செயற்பாடுதான்.**

## சோபை இழந்த முஸ்லிம் பிரதேசங்கள்

புனித நோன்பு காலம் ஆரம்பித்தாலே முஸ்லிம் பிரதேசங்கள் புத்தெழுச்சி கொண்டு மகிழ்ச்சிப் பிரவாகத்தில் திளைத்திருப்பது வழக்கமாகும். ஆனால் நாட்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் இனவாத கும்பல்களின் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் காரணமாக இந்த முறை நோன்பு மாதம் தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் சோபை இழந்தே தென்படுகின்றன.

குறிப்பா நோன்பு காலத்தில் பெருமளவில் இடம்பெறும் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வுகள் வெகுவாகக் குறைந்தே இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது. பல முஸ்லிம் பொதுஅமைப்புக்கள், நிறுவனங்கள், பிரமுகர்கள் வழக்கமான இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வுகளை நடத்துவதில் ஆர்வம் காட்டவில்லை.

**எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?**

## அமோக மீன்பிடி



கல்முனைப் பிராந்தியத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கடல் மீன்பிடி களை கட்டியுள்ளது. குறிப்பாக கல்முனை, கல்முனைக்குடி, காரைதீவு போன்ற பிரதேசங்களில் கரைவலை மீன்பிடியாளர்களுக்குப் பெருமளவிலான மீன்கள் பிடிபட்டு வருகின்றன. குறிப்பாகக் கீரி, பாரை இன மீன்கள் கடந்த வாரம் பல லட்சம் ரூபாய்கள் பெறுமதியில் பிடிபட்டுள்ளன. இதனால் இந்த மீன்கள் கிலோ முன்னூறு ரூபா விலையிலும் விற்பனையாவதால் பொதுமக்களும் பெரும்பயனடைந்து வருகின்றனர்.

**கடல் வழங்கும் செல்வம்**

## நடுவர் சபைகள்



நாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்ட போதிலும் அம்பாறை மாவட்டத்தில் நடுவர் சபைகள் கிரமமாக இயங்கி வருகின்றன. இந்த மாவட்டத்தில் பெரும்பாலான நடுவர் சபைகள் வார நாள்ளில் பாடசாலைகளிலே இயங்கி வருகின்ற போதிலும் பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியிலும் அவை தடையின்றித் தொடர்ந்து இயங்கி வருவதாக நடுவர் சபைகளின் தவிசாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் அம்பாறை மாவட்டத்துக்கான காணி நடுவர் சபையொன்றும் நடுவர் சபைகள் ஆணைக்குழுவால் விரைவில் ஸ்தாபிக்கப்படவிருக்கின்றது.

**வெற்றிகரமாக இயங்கும் சபைகள்**


# பிரெக்ஸிட் தோல்வி எதிரொலி பதவி விலகுகிறார் திரேசா மே

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் செய்துகொள்ளும் பிரெக்ஸிட் ஒப்பந்தம் மூன்று தடவைகள் தோல்வியில் முடிந்ததை அடுத்து கென்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகும் முடிவை அறிவித்தார் பிரிட்டனின் தலைமை அமைச்சர் திரேசா மே.

பிரெக்ஸிட்' தொடர்பாக ஐரோப்பியக் கூட்டமைப்புடன் பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே ஏற்படுத்திய ஒப்பந்தத்தை அந்த நாட்டு எம்.பி.க்கள் ஏற்க மறுத்துவிட்டனர். இதனால்பிரிட்டன்நாடாளுமன்றத்தில்பிரெக்ஸிட்'ஒப்பந்தம் 3முறைபெருவாரியானஓட்டுவித்தியாசத்தில் தோல்வியைதழுவியது. ஆளும் பழமைவாதக் கட்சி உறுப்பினர்களே திரேசா மே ஏற்படுத்திய'பிரெக்ஸிட்'ஒப்பந்தத்தை ஆதரிக்காத நிலையில் முன்னர் சில அமைச்சர்கள் அடுத்தடுத்து பதவி விலகினர்.

இதனால் 'பிரெக்ஸிட்' ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்க 'மாற்றங்களை கொண்டு வந்துள்ள தெரசா மே, அடுத்த மாதம் (ஜூன்) 3ஆம் திகதி நான்காவதுமுறையாகஅந்தஒப்பந்தத்தின்மீதுவாக்கெடுப்பு நடத்த முடிவு செய்துள்ளார். இந்த வாக்கெடுப்பும் தோல்வியில்முடிந்தால்,ஐரோப்பியகூட்டமைப்பில்இருந்துஒப்பந்தம் இன்றி வெளியேற வேண்டிய நெருக்கடி நிலைக்கு இங்கிலாந்து தள்ளப்படும்.

இந்த நிலையில், பிரெக்ஸிட் ஒப்பந்தம் தொடர்பான தெரசா மேயின் புதிய கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவரது கட்சியை சேர்ந்த மூத்த அமைச்சர் ஆண்ட்ரியா லீட்ஸம் தனது பதவியைசமீபத்தில்ராஜினாமாசெய்தார்.தலைமைஅமைச்சர் பதவி மற்றும் ஆளும் கட்சி தலைவர் பதவியில் இருந்து தெரசா மே விலக வேண்டும் என்ற எதிர்ப்பு குரல் தற்போது அதிகரித்துள்ளது. இந்த நிலையில், பழமைவாத (கனசர்வேட்டிவ்) கட்சி தலைவர் பதவியில் இருந்து ஜூன் மாதம் 7ஆம் திகதி விலகும் முடிவை அறிவித்தார்மே.



**'அன்று கமரூன் இன்று மே...'**

# மீண்டும் மலர்ந்த தாமரை



இந்தியமக்களவைத்தேர்தலில்350தொகுதிகளைக் கைப்பற்றி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துள்ளது பாரதிஜ ஜனதா கட்சி.

ஏப்ரல் 17ஆம் திகதி முதல் மே 19ஆம் திகதி வரை இந்தியாவில் மக்களவைக்கான தேர்தல் 7 கட்டங்களாக இடம்பெற்றது. 543 தொகுதி களுக்குத் தேர்தல் இடம்பெற்றது. 272 தொகுதிகளை எந்தக் கட்சி கைப்பற்றுகிறதோஅந்தக்கட்சிதனித்துஆட்சியமைக்கும். இந்த நிலையில் 350 தாகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி அமைத்துள்ளது அமித்சா தலைமையிலான பா.ஜ.க.

இந்த இமாலய வெற்றியை அடுத்து இரண்டாவது தடவையாக இந்தியத் தலைமை அமைச்சராகமோடிதெரிவுசெய்யப்பட்டுள்ளார். காங்கிரஸ் 92 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியது.

**'இமாலய வெற்றிதான்...'**

# கிளர்ச்சிப் படையால் சிரியாவில் தாக்குதல்



சிரியாவில் தாம் இழந்த நகர்களை மீட்பதற்காக கிளர்ச்சிப் படைகள் மீண்டும் ஆவசமான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன.

சிரியாவில்அதிபர்பஷார்அல்அசாத்தின் ஆதரவு அரசுப் படைகளுக்கு எதிராக கிளர்ச்சியா ளர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடந்த 7 வருடங்களாக அரசுப் படைகளுக்கும், கிளர்ச்சி படைகளுக்கும் இடையே உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இதில், லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், வடமேற்கு பகுதியில் அரசு ஆதரவு படைகள் மீது கிளர்ச்சிப் படைகள் நேற்று தாக்குதல் நடத்தின. அரசுப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். ஹமா மாகாணம் காபிர் நபுதா நகரில் நடந்த இந்த சண்டையில் அரச படையைச் சேர்ந்த 26 வீரர்கள் கொல்லப்பட்டதாக மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

**'சிரியாவின் சோகம் என்று தணியும்...'**

ரவுண்ட் த வேள்ட்

தொகுப்பு
பிரகாஸ்




# தென்னாபிரிக்க அதிபராக ரமபோசா மீண்டும் தெரிவு

தென்னாபிரிக்க நாட்டின் அதிபராக சிரில் ரமபோசாவை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் தேர்வு செய்தனர்.

தென்னாபிரிக்கா குடியரசு நாட்டின் நாடாளுமன்றத்துக்கு சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அதிக இடங்களில் வெற்றி பெற்றனர். இந்த நிலையில், அந்த நாட்டின் அதிபராக சிரில் ரமபோசாவை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை மீண்டும்தேர்வுசெய்தனர். அதிபர்பதவிக்குசிரில்ரமபோசாவை தவிர வேறு எவரும் நிறுத்தப்படாத நிலையில் ஆளும்கட்சி உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் சிரில் ரமபோசா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.


**'ரமபோசாவின் இரண்டாவது இன்னிங்ஸ்...'**



இந்தோனேசிய அதிபர் விடோடோவின் வெற்றியை ஏற்க மறுத்து அந்த நாட்டில் பல்லாயிரக் கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

ஆபத்தில் இருப்பவர்களுக்கு உதவும்போது 'செல்பி' எடுக்காதீர்!
உங்கள் சுயரூபம் தெரிந்துவிடும்..

கோபத்தால் நீங்கள் சம்பாதிப்பது வீண் வம்புகளையும் எதிரிகளையும் மட்டுமல்ல,'பிளட் பிரஷ'ரையும், டென்ஷனையும்" தான், நீங்கள் படும் கோபம் உங்கள் உடல்நலனுக்கு எதிரி.







# 'ராங்கி'யாக களமிறங்கும் திரிஷா



திரிஷா நடித்த சதுரங்க வேட்டை 2, கர்ஜனை என்ற இரண்டு படங்களும் வெளியீட்டுக்காகக் காத்திருக்கின்றன. மேலும் '1818', 'பரமபதம்' என கைவசம் உள்ள படங்கள் உள்ளன.

இந்த நிலையில் 'எங்கேயும் எப்போதும்' படத்தை இயக்கிய சரவணன் இயக்கத்தில் திரிஷா முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். ஏ.ஆர்.முருகதாசின் கதை, வசனத்தில் உருவாகிக்கொண்டிருக்கும் இந்தப் படத்தில் திரிஷா தைரியமான பெண் கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கிய இந்தப் படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு சில நாள்களுக்கு முன் நிறைவடைந்தது. அடுத்த கட்டப் படப்பிடிப்பு உஸ்பெகிஸ்தானில் நடைபெற இருக்கிறது. இந்த நிலையில் இந்தப் படத்துக்கு 'ராங்கி' என்று தலைப்பு வைத்து முதல் சுவரொட்டியையும் வெளியிட்டிருக்கிறார்கள். தற்போது இந்தச் சுவரொட்டி சமூக வலைத் தளத்தில் வைரலாகி வருகிறது.

twitter


A.P.Perumal.

ஆயிரம் பேரைக்கூட
எதிர்த்து நில்.
ஆனால் ஒருத்தரைக்கூட
எதிர்பார்த்து நிற்காதே.


ச ப் பா ணி

மோதலில் ஆரம்பித்து
சாதலில் முடிகிறது
விபத்து...


கோழியின்
கிறுக்கல்!!


படிக்கிற காலத்தில
மிஸ்க்கு பயப்படாத
அரசியல்வாதி எல்லாம்,
இப்ப மீம்ஸ்க்கு
பயந்துட்டு இருக்காங்க!




இது புதுசு

இருபாலாருக்குமான தலையை சுத்தப்படுத்தி மஜாஜ் செய்யக் கூடிய கருவி அறிமுகமாகியுள்ளது. இது 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.





twitter






# எமது நாடு போர்களும் துன்பங்களும் நிறைந்த வரலாற்றை கொண்டுள்ளது

## பல்கேரிய அரச தலைவர் திருத்தந்தையிடம் தெரிவிப்பு

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

உலக கத்தோலிக்க மக்களின் ஆன்மிகத் தலைவர் திருத்தந்தை பிரான்சீஸ் உலகெங்கும் பரந்து வாழும் கத்தோலிக்க மக்களை சந்திக்க உலக வலம் வருவதை பற்றி உதயன் பத்திரிகையின் சிறப்பு இணைப்பான சூரிய காந்தியின் கிறிஸ்தவ ஞாயிறு பகுதி வாசக அன்பு நெஞ்சங்களுக்குஅவ்வப்போதுஅறியத்தந்துள்ளோம். அந்தவகையில் இவ்வாரம் திருத்தந்தையின் 29ஆவது வெளி நாட்டுத் திருத்தூதுப் பயணமாக பல்கேரியாவுக்கு மேற்கொண்ட வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணம் பற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

**திருத்தந்தையின் 29ஆவது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணம்**

திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த 5ஆம் திகதியன்று தனது 29ஆவது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தைத் தொடங்கினார்.மூன்றுநாள்கள்கொண்டஇந்தத்திருத்தூதுப் பயணத்தில் முதலில் பல்கேரியா நாட்டில் இரண்டு நாள்கள் பயண நிகழ்வுகளை நிறைவேற்றி மூன்றாவது நாளன்று வட மாசிடோனியா சென்றார் திருத்தந்தை.


வத்திக்கானில் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்திலிருந்துஉரோம்பியூமிச்சினோபன்னாட்டு வானூர்தி நிலையத்துக்குப் காரில் புறப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் வ்ானூர்தி நிலையத்தில் ஆல் இத்தாலியா நிறுவனப் பொறுப்பாளர்களைவாழ்த்தி321ஆல்இத்தாலியா வானூர்தி யில் பல்கேரியத் தலைநகர் சோர்பியாவுக்குப் புறப்பட்டார்.

உரோம் நேரம் காலை 7 மணிக்கு வானூர்தி நிலையத்திலிருந்து திருத்தந்தை புறப்படும் வரை பாதுகாப்பிற்காக உலங்குவானூர்தியொன்றுவானில்வட்டமிட்டுக்கொண்டிருந்தது. இத்தாலிய அரச தலைவர் செர்ஜோ மத்த ரெல்லாவுக்கு செபங்களும் வாழ்த்தும் நிறைந்த தந்திச் செய்தியையும் திருத்தந்தை அனுப்பினார்.

சோர்பியா நோக்கி ஆல் இத்தாலியா வானூர்தி பறக்கத் தொடங்கியவுடன் திருப்பீட இடைக்கால தகவல் தொடர்பாளர் அலெஸ்ஸாந்த்ரோ ஜிசோத்தி வானூர்தியில் பயணம் செய்யும் பன்னாட்டு செய்தியாளர்கள் சார்பாக திருத்தந்தைக்கு காலை வணக்கம் சொல்லி வரவேற்றுப் பேசினார். குரோவேஷியா போஸ்னியா எர்சகொவினா, செர்பியாஆகியநாடுகளின்மேலாகவானூர்திபறந்துசெல்கையில்அந்தந்தநாடுகளின்அரசதலைவர்களுக்குவாழ்த்துத் தந்திகளைஅனுப்பினார்திருத்தந்தைபிரான்சிஸ்.இரண்டு மணி நேரம் பயணம் செய்து பல்கேரியா நாட்டின் சோர்பியாநகர்வானூர்திநிலையத்தைஉள்ளூர்நேரம்காலை பத்து மணிக்குச் சென்றடைந்தார் திருத்தந்தை.

**வானூர்தி நிலையத்தில் திருத்தந்தையை பல்கேரிய தலைமை அமைச்சர் வரவேற்றார்**

வானூர்தி நிலையத்தில் பல்கேரிய தலைமை அமைச்சர் திருத்தந்தையைவரவேற்றார். மரபுஆடைகளை அணிந்திருந்த நான்கு சிறார் திருத்தந்தைக்கு மலர்கள் கொடுத்து வரவேற்றனர். பின்னர்வானூர்திநிலையத்தில்ஓர்அறையில் திருத்தந்தையும் தலைமை அமைச்சரும் தனியே சிறிது நேரம் கலந்துரையாடினர். நம் உலகில் விசுவா சத்தின் அடையாளமாக இருக்கும் மனிதராகிய தங்களை வரவேற்பதில்மகிழ்வடைகிறேன். தாங்கள்அமைதிக்காகச் செபிக்கும் செபம் கிழக்கே உக்ரைன் வரையும் மேற்கு பால்கன் பகுதி வரையும் விரிந்துள்ள எம் பகுதிக்கு மிகவும் தேவைப்படுகின்றதுஎன்றுதலைமைஅமைச்சர் திருத்தந்தையிடம் தெரிவித்தார். பின்னர் திருத்தந்தைக்கு பல்கேரியத் தயிரைக் குடிக்கக் கொடுத்தார் தலைமை அமைச்சர். தான் அர்ஜென்டீனாவில் சிறுவனாகஇருந்தசமயத்தில்பாட்டிதனக்குமுதன் முறையாக பல்கேரியத் தயிரைக் கொடுத்தார் என திருத்தந்தை நினைவுகூர்ந்தார். மேலும்ஆர்த்தடாக்ஸ்புனிதக்குறியீடுகள், ஆர்த்தடாக்ஸ்பாரம்பரியஆயர்ஆடைஆகியவற்றையும் திருத்தந்தைக்கு அன்பளிப்பாக அளித்தார்பல்கேரியத்தலைமைஅமைச்சர். இச்சந்திப்புக்குப் பின்னர் அங்கிருந்து 9.8 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அரச தலை வர் மாளிகைக்குச் சென்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.




**பல்கேரிய அரசுத்தலைவர் மாளிகையில் வரவேற்பு**

பல்கேரிய அரச தலைவர் மாளிகையின் முகப்பிலேயே திருத்தந்தையை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். அந்த மாளிகையில் இராணுவ அணிவகுப்பு மரியாதைகளும் திருத்தந்தைக்கு வழங்கப்பட்டன. அரச தலைவர் திருத்தந்தையும் தனியே கலந்துரையாடினர்.

பல்கேரிய குடியரசுக்கு அதிகாரப்பூர்வ பயணத்தை மேற்கொண்டிருக்கும் திருத்தந்தையே தங்களுக்கு எமது இனிய வரவேற்பு பழமையான கிறிஸ்தவ நாடுகளில் ஒன்றான பல்கேரியா 12 நூற்றாண்டுகளுக்கு முன்னர் கிறிஸ்தவவிசுவாசத்தைத்தழுவியது. இந்தநாடுதனது அறநெறி மற்றும் ஆன்மீக நற்பண்புகளாலும் திருஅவை மற்றும் சிரில் அவர்கள் உருவாக்கிய எழுத்துக்களாலும் விசுவாசம் மற்றும் அறிவாலும் அனைத்து சோதனைகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளிலிருந்து வெளிவந்துள்ளது.

'நம் பூமிக்கு அமைதி உண்டாகட்டும்' என்பது இத்திருத்தூதுப் பயணத்தின் விருதுவாக்காகும். கடவுளின் ஞானம் என்றபெயரையேகொண்டுள்ளபல்கேரியத்தலைநகரிலிருந்து இந்த உலகெங்கும் அமைதிக்கான அழைப்பு எதிரொலிக்கின்றது. எமது நாடு போர்களும் துன்பங்களும் நிறைந்த வரலாற்றைக் கொண்டது. இதனாலேயே அமைதியின் விலையை எம்மால் அறிய முடிகிறது. பல்வேறு மத இன மற்றும் நாடுகளுக்கு இடையே மனிதமும் சகிப்புத் தன்மையும்நிலவினால்மட்டுமேஅமைதிஇயலக்கூடியது. திருத்தந்தையே தங்களின் உயிர்ப்புப் பெருவிழா செய்தியில் சுவர்களை அல்ல பாலங்களைக் கட்டி எழுப்புங்கள் எனக் கேட்டுக்கொண்டீர்கள்.

9ஆம் நூற்றாண்டில் புனித மேரி மேஜர் பசிலிக்காவில் திருத்தந்தை 2ஆம் ஏட்ரியன் பல்கேரிய எழுத்துக்களைப் புனிதப்படுத்தினார். புனித திருத்தந்தை 23ஆம் ஜான் பல்கேரிய திருத்தந்தை என சிலரால் அழைக்கப்படுகிறார். இவர் சோர்பியாவில் பத்தாண்டுகள் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியாகப் பணியாற்றினார்.

திருத்தந்தையே இக்காலத்தில் வெறுப்பும் அந்நியர் மீது காழ்ப்புணர்வும்ஐரோப்பாவில்மீண்டும்நுழைந்துள்ளன. தங்களின்சொந்தமொழிகளில்கடவுளைமகிமைப்ப டுத்த ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதே உறுதிப்படுத்துவதே புனித உடன்பிறப்புகள் சிரில் மற்றும் மெத்தோடியஸின் பெரிய மறைப்பணியாக அமைந்திருந்தது.

திருத்தந்தையே, தங்களது பல்கேரியப் பயணம் நம் உறவுகளின் புதிய வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகஅமைந்துள்ளது. ஏனெனில்அமைதி மற்றும் பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டுள்ள இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வைப் பாதுகாப்பது குறித்து நாம் கருத்தாய் இருக்கின்றோம். அமைதியான நியாயமான மற்றும் மனிதம் நிறைந்த உலகைக் கட்டியெழுப்புவதற்கு பல்கேரிய மக்கள் மீது தாங்கள் வைத்திருக்கும் அன்புக்கும் நம்பிக்கைக்கும் சான்றாக இத்திருத்தூதுப் பயணம் அமைந்துள்ளது என தனது வரவேற்புரையை நிறைவு செய்தார் பல்கேரிய அரசதலைவர்.


**புனித 2ஆம் யோன்போல் மற்றும் புனித 23ஆம் ஜோண்**

உரோமை ஆயரான புனித 2ஆம் யோண்போல் பல்கேரியாவுக்கு முதல் முறையாக வந்து முதுபெரும் தந்தை மாக்சிமைச் சந்தித்ததைத் தொடர்ந்து இந்த சந்திப்பு நிகழ வேண்டும் என்பதை நான் மிகவும் விரும்பினேன். இந்த என் பயணம் இந்த நாட்டில் தங்கியிருந்த புனித 23ஆம் ஜோனின் அடிச்சுவடுகளைத் தொடர்கிறது. இந்நாட்டுமக்களின் நேர்மை கடின உழைப்பு மற்றும் போராட்டங்களின் நடுவே அவர்களிடம் விளங்கிய மாண்பு ஆகியவற்றை புனித 23ஆம் யோண்போல் மிகவும் பாராட்டினார். அவர் துவங்கிய 2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் கலந்துகொள்ள பல்கேரிய ஆர்த்தடாக்ஸ்திரு அவைக்குவிடுத்த அழைப்பை ஏற்று ஒரு சில பிரதிநிதிகள் அதில் கலந்துகொண்டனர். அதைத் தொடர்ந்து பல்கேரிய ஆர்த்தடாக்ஸ் சபைக்கும் கத்தோலிக்கத் திரு அவைக்கும் இடையே கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக உறவுகள் வளர்ந்துள்ளன.

உரையாடல் வழியே நமது உறவு இன்னும் வலுவடையும் என்று நான் நம்புகிறேன். நாம் வாழும் இன்றையக் காலத்தில் வறியோருக்கும் புறக்கணிக்கப் பட்டோ ருக்கும் பணிகள் செய்வதில் நாம் இணைந்து பயணம் செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இந்தப் பயணம், வறியோரின் கிறிஸ்தவ ஒன்றிப்பு பயணம்.

**ஒன்றிப்பையும் சமாதானத்தையும் வளர்ப்போம்**

இவ்விருவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாமும் இயேசுவின்பெயரால்ஒன்றிப்பையும்சமாதானத்தையும்வளர்ப்பவர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். நம்மிடையே நிலவும் பன்முகத் தன்மை கொண்ட கலாசாரம் மரபுகள் ஆகியவை நம்மை பிரிப்பதற்குப் பதில் வேற்றுமையில் ஒற்றுமை காணும் பக்குவத்தை தரவேண்டும் என்பதை புனிதர்களானசிரிலும்மெத்தோடியசும்நமக்குச்சொல்லித் தருகின்றனர். திருத்தந்தையே, சகோதரர்களே, உங்கள் அனைவருக்கும், இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் என் செபங்களைஉறுதியாக்குகிறேன். செபமேஅனைத்துநன்மைகளையும் திறந்துவிடும் கதவு என்பதால் உங்கள் செபங்களில், எனக்கும் ஓர் இடம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிறிஸ்து உயிர்த்துள்ளார்.



**செய்தியாளர்களுக்கு வாழ்த்து**

சோர்பியா நோக்கி ஆல் இத்தாலியா வானூர்தி பறக்கத் தொடங்கியவுடன் திருப்பீட இடைக்கால தகவல் தொடர்பாளர் அலெஸ்ஸாந்த்ரோ ஜிசோத்தி வானூர்தியில் பயணம் செய்யும் பன்னாட்டு செய்தியாளர்கள் சார்பாக திருத்தந்தைக்குகாலைவணக்கம்சொல்லிவரவேற்றுப்பேசினார். திருத்தந்தையே இது இந்த ஆண்டில் தாங்கள் மேற்கொள்ளும் நான்காவது திருத்தூதுப் பயணம். அமெரிக்கா ஆசியா ஆபிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களில் திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டு தற்போது நான்காவது கண்டமாக ஐரோப்பாவிற்குச் செல்கிறீர்கள்.

திருத்தந்தையரின்திருத்தூதுப்பயணங்களில்செய்தியாளராக நூறாவது முறையாக போர்த்துக்கீசிய வானொலிச் செய்தியாளர் தற்போது நம் அனைவரோடும் பயணம் மேற்கொள்கிறார் என அந்தச் செய்தியாளரை திருத்தந்தைக்கு அறிமுகப்படுத்தினார் ஜிசோத்தி. அந்தச் செய்தியாளரின் பெயரைச் சொன்னவுடனேயே போர்த்துக்கீசியரா? எனத் திருத்தந்தை கேட்க செய்தியாளர்கள் எல்லாரும் மகிழ்ச்சியால் ஆரவாரித்தனர். பல்கேரியச் செய்தியாளர்கள் அந்த நாட்டின் தேசிய கால்பந்து குழுவின் எண் 3 என குறியிடப்பட்ட வீடற்றவரின் சட்டை ஒன்றை திருத்தந்தைக்கு அன்பளிப்பாக அளித்தனர். அச்சட்டையில் 'நம்பிக்கையின் குழு பல்கேரியா பிரான்செஸ்கோ' என எழுதப்பட்டிருந்தது. மேலும், பல்கேரிய தொலைக்காட்சி பழங்கால முத்திரை ஒன்றை திருத்தந்தை வழங்கியது. ஏனைய செய்தியாளர்கள்தங்கள்பிள்ளைகள்அனுப்பியசெய்திகள் மற்றும்ஓவியங்களையும்சீனா பற்றிய ஒரு நூல் ஒன்றையும் திருத்தந்தைக்கு அன்பளிப்பாக அளித்தனர். திருத்தந்தைஅனைத்துச்செய்தியாளர்களுக்குநன்றிகூறினார். இப்பயணம் மிகவும் குறுகியது மூன்று நாள்களைக் கொண்டது ஆயினும் இதற்குத் தயாரித்தவர்கள் நிறைய நிகழ்வுகளைத் திட்டமிட்டுள்ளனர் என்று சொல்லி செய்தியாளர்கள் ஒவ்வொருவரையும் கைகுலுக்கி வாழ்த்தினார்.

கருங்கடல்கடற்கரையில்அமைந்துள்ளபால்கன்நாடாகிய பல்கேரியா மலைகளையும், டான்யூப் நதி உட்பட ஆறுகளையும் கிரேக்க, ஸ்லாவிய, ஒட்டமான் மற்றும் பெர்சிய கலாச்சாரங்களையும் கொண்டுள்ளது. இந்நாடு, நடனம், இசை, மரபு ஆடைகள், கைவினைப்பொருள்கள் போன்றவற்றிற்கும் பெயர்போனது. ஐரோப்பிய ஒன்றியத்தில் மிகவும்ஏழைநாடானபல்கேரியமக்களின்எதிர்பார்ப்புக்களை, திருத்தந்தையின் இத்திருத்தூதுப்பயணம்நிறைவேற்றும் எனநம்புவோம். அதற்த காகச் செபிப்போம்.



## பேரறிவு பெருக

புத்தகங்கள் வாசி... தம்பி
புத்தகங்கள் வாசி!
புத்துணர்வை யூட்டுகின்ற
புத்தகங்கள் வாசி!

நித்தமொரு புத்தகத்தை
நேரத்தோடு வாசி!
புத்தறிவுக் கருத்துகளைப்
புரிந்துகொள்ள வாசி!

நல்லநல்ல புத்தகங்கள்
நமதுநண்ப ராகுமே...! தன்
நம்பிக்கை பெற்றுமகிழ
நாள்தோறும் வாசி!

வெல்வதற்கு வழிகாட்டும்
விதவிதமாய்ப் புத்தகம்... நாம்
விரும்புகின்ற வாழ்க்கைதரும்
விவேகமான புத்தகம்!

கற்றுக்கொள்ள கடலளவு... நம்
கண்முன்அளிக்கும் புத்தகம்,
காலம்முழுதும் கற்றுத்தரும்
கையளவுப் புத்தகம்!


பெற்றுக்கொள்ள மனமிருந்தால்
பெரிய பரிசு, புத்தகம்... நம்
பேரறிவை விரிவாக்கும்
பெருங்கருத்துப் பெட்டகம்!

## ஆத்திசூடி புதியது



அ : அகந்தை அழிவைத் தரும்
ஆ : ஆணவம் வெற்றிக்குத் தடையாகும்
இ : இழிகுலம் போற்றுதல் தவறு
ஈ : ஈவதே சிறப்பு
உ : உறவினரை நேசிப்பதே சிறப்பு
ஊ : ஊக்கமுடன் செயல்படு
எ : எண்ணம் ஆராய்தல் நலம்
ஏ : ஏற்றம் பெற வந்த வழியை நினைவு கொள்
ஐ : ஐயம் தவிர்
ஒ : ஒழுக்கம் போற்று
ஓ : ஓதுவதில் மனதைச் செலுத்து
ஔ : ஔவைபோல தமிழ் படித்து வாழ்
ஃ : எஃகு போல செயலில் உறுதி கொள்

## ஒரு நிமிட வரம்



கடவுள் ஒரு நாள் ஒருவன் முன் திடீரென தோன்றினார்.
ஒரே ஒரு நிமிடம் மட்டும் உன் முன்னால் இருப்பேன். நீ எதை நீட்டினாலும், அதில் தங்கக் காசுகளை நிரப்புவேன். அதற்காக, என் வீட்டு அறை முழுக்க நிரப்பு, அலுமாரியில் கொட்டு என்றெல்லாம் வரம் கேட்கக் கூடாது. ஏனென்றால், அத்தகைய காசுகளெல்லாம் மாயமாக மறைந்து விடும் என்று கூறினார்.
அந்த மனிதனுக்கோ ஆனந்த அதிர்ச்சியில் என்ன செய்வதென்றே புரியவில்லை. அவன் வீடு முழுதும் தேடினான், தங்கக் காசுகளை நிரப்பிப் கொள்வதற்குப் பெரிய சாக்கு ஏதும் கிடைக்கிறதா என்று பார்த்தான். சோதனையாக சாக்கு ஒன்று கூடத் தென்படவில்லை. கிடைத்ததெல்லாம் சிறு பைகளாகவே இருந்தன. அதிலும் அவை கிழிந்திருந்தன.
அவன் தேடிக் கொண்டே இருந்தான். கடவுள் சிரித்துக் கொண்டிருந்தார். அவருக்குத்தான் மனிதனின் இயல்பு தெரியுமே! ஒரு நிமிடத்தில் கடவுள் மறைந்து போனார்.
வேதனையில் துவண்டு போய் தரையில் உட்கார்ந்தான் அந்த மனிதன். அப்போது அசரீரியாகக் கடவுளின் குரல் கேட்டது.
அற்ப மானிடனே... வரம் தந்த உடனேயே கொஞ்சமும் பேராசைப்படாமல் உன் இரு கைகளையும் நீட்டி இருக்கலாமே... சாக்கைத் தேடுகிறேன் என்று நேரத்தைக் கடத்தி, பொன்னான ஒரு வாய்ப்பை இழந்து விட்டாயே என்றார். குரலும் மறைந்து போனது. இதுதான் உண்மை!
எது எமக்குக் கிடைக்க வேண்டும் என்ற நிலை உள்ளதோ, அதைப் பெற்றுக் கொள்வதே அறிவுடைமை. பேராசைப்பட்டால், இருப்பதும் இல்லாமல் போய் பெரும் நஷ்டம் தான் ஏற்படும்.



## வெற்றிக்கு உதவும் ஆறு குணங்கள்

சூசன் ஸ்மித், தாமஸ் மார்ஸ்கி தம்பதியினர் ஆறு பக்க ஆப்பிள் என்கிற புத்தகத்தை எழுதியிருக்கின்றனர். வாழ்க்கை எனும் ஆப்பிளைச் சுவைக்க அதன் ஆறு பக்கங்களுக்கும் ஒரு அம்சத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

**பணிவு**
ஒரு துறையில் புதிதாக வேலைக்குச் சேர்ந்தவர் நாலு விசயங்களைப் பழகியவுடன் கர்வம் அவர்களுடைய தலைக்கு மேல் ஏறிக் கொள்கிறது. என்னைப் போல் யார்? என்று நினைக்கிறார்கள். இதுதான் அவர்களின் சரிவுக்கான முதல் படி. முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை. இதற்குப் பதிலாகத் துணிவை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் வெற்றிக்கு அது துணை நிற்கும்.

**கருணை**
உங்களைச் சுற்றியுள்ளவர்கள் துயரத்தை அனுபவிக்கும் போது, அவர்களுக்கு ஆறுதலாக இருங்கள். உங்களுக்குப் பிரச்சினை என்று வரும் போது அவர்கள் உதவுவதற்கு ஓடோடி வருவார்கள்.

**பழகும் தன்மை**
வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, உங்களுக்கு மேலே உள்ளவர்களிடமும், கீழே உள்ளவர்களிடமும் வெளிப்படையாக நடந்து கொள்ளுங்கள். திறந்த புத்தகமாக வாழத் தொடங்குங்கள். பல புதிய வெற்றி வாசல்கள் திறப்பதை அறிவீர்கள்.

**அரவணைக்கும் குணம்**
உலகில் எல்லாவிதமான மனிதர்களும் இருப்பார்கள் என்பதை ஒப்புக் கொண்டு, அவர்களிடம் உள்ள நல்ல விடயங்களைப் பார்த்துப் புரிந்து கொண்டு பழகத் தொடங்கினால் நட்பு வட்டம் பெருகும். வாழ்க்கை சிறகடிக்கும்.

**இணைந்து பணியாற்றும் தன்மை**
நாம் ஒவ்வொருவரும் பல தனிப்பட்ட திறமை கொண்டவர்களாக இருப்போம். நாம் அனைவரும் இணைந்து பணியாற்றினால் அந்த வெற்றி பல மடங்காக உயரும்.

**முடிவெடுக்கும் திறன்**
நாம் தினந்தோறும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஏதாவது ஒரு முடிவை எடுக்கிறோம். நமது திறமை மற்றும் அனுபவத்தைச் சரியான விகிதத்தில் யோசித்து எடுக்கும் முடிவுகள் நமது வாழ்வின் முக்கிய திருப்புமுனையாக அமையும். **இவையே நமது வெற்றியின் வளர்ச்சியைத் தூக்கிவிடும்.**

## அன்னை தெரசாவின் வேண்டுகோள்!



அன்னை தெரசா அவர்களுக்கு உலகப் புகழ் பெற்ற 'நோபல் பரிசு' 1979 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இந்தப் பரிசினைப் பெறுவதற்காக அன்னை தெரசா சுவீடன் நாட்டிற்குச் சென்றார். நோபல் பரிசு பெறுபவர்களுக்கு ஆடம்பர விருந்து அளித்துப் பாராட்டிப் பரிசு வழங்குவது வழக்கம். இதையறிந்த அன்னை தெரசா பரிசுக் குழுவி னரிடம் சென்றார்.
“இவ்வளவு பெருந்தொகை செலவழித்து ஏன் விருந்து வைக்க வேண்டும்? அந்தத் தொகையினை என்னிடம் வழங்கினால் அதைக் கொண்டு மேலும் பல ஏழைகளுக்குப் பசி போக்கிட உதவ முடியும்" என்றார் அன்னை தெரசா.
அன்னை தெரசாவின் பேச்சு விழாக் குழுவினரை நெகிழ வைத்து விட்டது.
அவரது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, விருந்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும் அன்னை தெரசாவிடமே வழங்கினர்.



## மரம் வளர்ப்போம்

பள்ளி செல்லும் தம்பியே !
பசுமை எங்கும் நிறைந்திட
வீட்டில் வீதியில் பள்ளியில்
விரும்பி மரம் நடுவாய் !

சுற்றுச் சூழல் சிறந்திடுமே !
சோம்பல் எல்லாம் பறந்திடுமே !
மண்ணின் மைந்தன் மரங்களினால்
விண்ணின் மழைத்துளி கிடைத்திடுமே !

புவியின் வெப்பம் குறைந்திடுமே !
குளங்கள் எல்லாம் நிறைந்திடுமே !
தூய காற்று கிடைத்திடுமே !
இயற்கை இன்பம் பெற்றிடுமே !

பிறந்த நாளில் நட்டிடலாம்
அரசு விழாக்களில் வைத்திடலாம்
**நினைவுப் பரிசாய்த் தந்திடலாம்**
**நீங்கா இன்பம் பெற்றிடலாம் !**

## வர்ணம் தீட்டுவோம்



# வளர்ச்சிக்கு காத்திருக்கிறது தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்காவில் நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சிரில் ரமபோசா வெற்றி பெற்றிருக்கிறார்; ஜேகப் சுமாவிடமிருந்து 2018ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நேரடியாக அதிபர் பதவியில் அமர்ந்த ரமபோசா, இந்த முறை தேர்தல் மூலம் பதவிக்கு வருகிறார். பொருளாதாரத்தைச் சீர்தி ருத்துவது, அரசின் நிறுவனங்களுக்குப் புத்துயிர் ஊட்டுவது, அரசியல் ஊழல்களுக்கு விடைகொடுப்பது என்ற மிகப் பெரிய சவால்கள் அவருக்காகக் காத்திருக்கின்றன. அரசியல் ஊழல்கள்தான் நாட்டின் வளர்ச்சிக்குப் பெரிய தடைக்கல்லாக இருக்கின்றன.


அதிபர் தேர்தலில் பதிவான வாக்குகளில் 58சதவீதம் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் (ஏ.என்.சி) கட்சிக்குக் கிடைத்தது. முக்கிய எதிர்த்தரப்பான ஜனநாயகக் கூட்டணி 21சதவீத, பொருளாதார சுதந்திரப்போராட்ட வீரர்கள் கட்சி 11மூ மற்றும் சிறிய கட்சிகள் 11சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கின்றன. பதிவான வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையை ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் கட்சி பெற்றிருந்தாலும், கடந்த சில தேர்தல்களாக அதன் வாக்குகள் தொடர்ந்து குறைந்துவருவ தையும் இங்கே கவனிக்க வேண்டியிருக்கிறது.

2004ஆம் ஆண்டில் 69சதவீதம், 2009 ஆம் ஆண்டில் 66சதவீதம், 2014ஆம் ஆண்டில் 62சதவீதம் ஆக இது இருந்தது. நிறவெறி அரசுக்கு எதிராகப் போராடி 1994ஆம் ஆண்டில் மக்களின் அனைத்துத் தரப்பினரின் ஆதரவுடன் பெற்ற வெற்றியானது படிப்படியாகக் குறைவதும், கட்சியின் உயர் நிலையில் உள்ளவர்கள் ஊழலில் ஊறித் திளைப்பது அதிகரிப்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஊழல் குற்றச்சாட்டுகளை அடுத்து அதிபர் பதவியிலிருந்து ஜேகப் சுமா பதவி விலகினார். அவர் ஆட்சியின்போது ஊழலில் தொடர்புள்ளவர்களைக் களையெடுக்கும் வேலையை ரமபோசா மேற்கொள்வது அவசியம்.

தென்னாபிரிக்காவில் வேலையில்லாத் திண்டாட்டம் 27சதவீதம் ஆக இருக்கிறது. அரசின் நிதி நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது. சமூகநலத் திட்டங்கள் போதிய நிதி ஒதுக்கப்படாமல் வாடுகின்றன. 1.7 கோடி மக்கள் அரசின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் திறமையற்ற நிர்வாகத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

'சிலருக்குப் பிடிக்கிறதோ இல்லையோ... ஊழலை ஒழிப்பேன்' என்று தேர்தல் வெற்றிக்குப் பிறகு அறிவித்தார் ரமபோசா. அதை நிறைவேற்ற வேண்டும். கல்வி, சுகாதாரம், மக்கள் நலத் திட்டங்களுக்கு நிதி கிடைக்க வேண்டும் என்றால் உரிய பயனாளிகளுக்கு நிதி நேராகப் போய்ச் சேர்வதை உறுதிசெய்ய வேண்டும். வேலைவாய்ப்பில்லாமல் வாடும் இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சித் திறனை அளிக்க வேண்டும். நல்ல நிர்வாகத்தை அளிக்கவும் பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்தவும் முதலில் கட்சியில் களையெடுப்பை மேற்கொள்ள வேண்டும். இதற்கு ரமபோசா தயங்கக் கூடாது.

## சொற்சிலம்பம் போட்டி இல: 571



**அனுப்புபவர் பெயர்:.............................................**

**முழுமையான தபால் விலாசம்: .................................**

**.............................................................................**

**கையொப்பம்:.......................................................**

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 569
இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) விவசாயி (4) மாதவி (7) வாரம் (8) ஈக்கு (9) தம்பிமார் (11) கதி (12) ராசி (13) மது (14) அணி (15) அரி (17) தின் (18) நடித்தல் (19) கடகம் (21) தில்லை (22) கல்லாமை

### மேலிருந்து கீழ்

(1) விவாதம் (2) வரம் (3) சாம்பிராணி (4) மார் (5) தக்கது (6) விகுதி (8) ஈர் (10) மாசி (13) மரித்தல் (14) அன்டல் (15) அடி (16) கொல்லாமை (17) திகதி (18) நம் (20) கலை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.571**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (05.06.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.571 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 09.06.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

### இடமிருந்து வலம்

1. தமிழன்னைக்கு காப்பாக அணி செய்வது
5. எந்த நேரமும்
7. குடும்பத்தில் கடைசியை இப்படி அழைப்பர்
9. மூட்டுகளில் வரும் நோய்
11. ஒரு வகை தோல் நோய்
12. சிறிய பொதி
13. அதரம்
15. சமிபாட்டு உறுப்பு
16. மழைகாலம்
17. சமுத்திரம்
19. பெண்களின் நற்குணங்களில் ஒன்று
20. தோழன்
22. யானைக்கு சிறப்பு உறுப்பு இது
23. ஒரு தானிய வகை

### மேலிருந்து கீழ்

1. பாண்டவர்கள் அனுபவித்தது
2. வேள்ளி
3. தானை
4. தடக்கிப் பேசுதல்
5. உடுப்பு
6. சவரம் செய்யாவிட்டால் வளர்ந்து விடும்
8. தண்டனை
10. நிலம்
13. தேகம்
14. மூத்த தாய்
15. நுளம்பின் வாழ்க்கைப் பருவத்தின் ஆரம்பம்
17. ஒரு வாத்தியக் கருதி
18. பெண் அல்ல
19. போதை தருவது
20. சிரி
21. இடம்

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 569 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
பா.அபிநயன்,
தரம் 9ஏ, யாழ்.மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
மே.வெ.மரியநாயகம்,
இல.1625, இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**
ஜெ.ஜெரோசிகா,
இல.30/48 பூண்டி மாதா வீதி,
எமில்நகர், மன்னார்.

**4 ஆம் பரிசு**
மு.அக்ஷிகா,
A முரளிதரன், கலட்டி முந்தல்,
கொக்குவில் கிழக்கு கொக்குவில்.

**5 ஆம் பரிசு**
க.கௌரிதேவி,
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

### பாராட்டுப் பெறுவோர்

திருமதி செ.க.அருள்நேசன்,
யா.பாஷையூர், சென் அன்ரனீஸ்
றோ.க.மகளிர் வித்தியாலயம்.

ந.ஜெயகணேசன்,
இல.216/2 பெட்ரிகாவீதி,
கொழும்பு - 6

யோ.சிவசோதி,
இல.38, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**சொற்சிலம்பம் போட்டி 569 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## விற்பனைக்கு

தனி கண்ணாடியால் ஆன சோக்கேஸ் (எந்தக் கடைக்கும் உகந்தது) இரண்டு வட்ட வடிவான இரும்பில் ஆன படிகள். வீட்டுத் தளபாடங்கள், வட்ட வடிவான குருவிக் கூடு என்பன விற்பனைக்குள்ளன.

**077 303 0918**

உதயன்
தொடர்புகளுக்கு
0214931111
advt@uthayan.com

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை

இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

### தெல்லிப்பளை தம்போதனை விநாயகர் ஆலயம்

தெல்லிப்பளை தம்போதனை விநாயகர் ஆலயம் புனருத்தாபனம் செய்யப்பட்டு எண்ணெய்க் காப்பு, பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் மற்றும் அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும், இறுதி நாளன்று 108 சங்காபிஷேகமும் நடைபெற்று இனிதே நிறைவேறியது. இந்த விழாக் காலங்களில், அடியார்கள் திரளாக வந்து விநாயகப் பெருமானின் அருளைப் பெற்றுச் சென்றது குறிப்பிடத்தக்கது.



(IN 10302)

## சிறுநீரகம் தேவை

50 வயதுடைய ஒருவருக்கு $O^+$ or $O^-$ இரத்த வகையை சேர்ந்த சிறுநீரகம் தேவை. (C 25335) (14,17)

**075 666 9289**

## K.S.M சிவஸ்ரீ முரளிதரன் குருக்கள்

சிவாகமவிதிப்படி அபரக்கிரியைகள் மரணச்சடங்கு, அந்தியேட்டி செய்விப்பதற்கு தொடர்புகொள்ளவும் மாலைகள் ஓடருக்கு கட்டித் தரப்படும். ஓதுவார் தேவை.

நெல்லண்டை, தபால்கந்தோர் அருகில்
நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை.
**077 557 5259, 076 685 5759, 077 220 8196**

## ஐரோப்பிய STUDENT விசா

- Medicine
- Engineering
- Business Management
- Language Studies
- Hospitality & Tourism
- IT & many more....

- No Need IELTS
- No Age Limit
- No Need Sponsor
- No Need BankBalance

2019 September Intake now on

**Contact : EURO UNI**
No.44, Vajira Road, Colombo - 04
Email: eurounilk@gmail.com
Whatsapp,Phone - 077 4796 483

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் பிரதான வீதியில் N.D.B வங்கிக்கு அருகாமையில் 2பரப்பு விற்பனைக்கு உண்டு. (CS 25394)(14,17)

**077 051 1876**

## கடைகள் வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 2 நகைக்கடைகளும், ஸ்ரான்லி வீதியில் ஒரு கடையும் வாடகைக்குண்டு. தரகர் தேவையில்லை.

**077 693 5610** (CS/25559) (14,17)

## வீடு வாடகைக்கு தேவை

அரச ஊழியர்கள் 3 பேர் பரீட்சை தயார்படுத்தலுக்காக கல்வி கற்பதற்கு 4 மாதத்திற்கு வடமராட்சிப் பகுதியில் வசதியான வீடு வாடகைக்கு தேவை.

**077 063 1768**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகளை செய்வதற்கு உடனடியாக வீட்டுப் பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் சமுகம் தரவும். (CS 00623) (14,17)

தொடர்பு : கச்சாய்
**076 056 5092**

## நீர்கொழும்பு கடற்கரை வீதியில் காணியுடன் வீடு உடனடியாக விற்பனைக்கு

- 12.12 பேர்ச்சஸ் காணியில் அமைந்துள்ள முழுமையாக புதுப்பிக்கப்பட்ட வீடு
- தெளிவான உறுதி
- வீட்டின் முன்பின் பக்கங்களில் மா, தென்னை, வாழை பயிரினங்கள்.
- பெரிய அளவிலான உட்புகும் வாசல்
- சிறிய அறையொன்று காரியாலயமாக அல்லது இளைப்பாற்று அறையாக பாவிக்கலாம்.
- மூன்று பெரிய படுக்கை அறைகள் (ஒரு அறை புதிதாக குளிரூட்டிக் கருவி இணைக்கப்பட்டுள்ளது) இணைந்த குளியலறை இல்லை.
- பெரிய அளவான வசதியான சாப்பாட்டு அறை.
- தனியான சமையலறையும் அதற்கான புதிய அலுமாரிகளும் .
- தனியான ஒரு கழிப்பறையும், குளியலறையுடன் கூடிய கழிப்பறையும்.

**விலை 25 மில்லியன்**
**தரகர் தேவையில்லை.** (IN 12327) (14,17)

**தொடர்பு : + 94 777 880 152**

## புளோறன்ஸ் நைற்றிங்கேள் தாதியர் பயிற்சிப் பாடசாலை

**படித்துவிட்டு வேலைவாய்ப்பின்றி இருக்கின்றீர்களா?**

**உங்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு**



ஒருவருட பயிற்சி பாட நெறியைப் பூர்த்தி செய்தபின் வைத்தியசாலை தாதியராக நிரந்தர வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பாடமுடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.**

**077 718 6438, 021 492 8916**

குஞ்சர்கடையடி, கரணவாய் மத்தி, நெல்லியடி. (சுபாஸ் பேக்கரி மேல்தளம்)
K.K.S.Road,மருதனார்மடம், (ஆஞ்சநேயர் கோயில் முன்பாக)

# VACANCY @ BLC Campus Jaffna



Seeks suitable candidate to following Vacancies

**1. Receptionist (Female)**
- Should have a pleasant and outgoing personality
- Should have good English Speaking skills and good communication skills.
- Willing to work as team member
- Should have very good interpersonal and public relation skills.
- Experience in a similer position would be an added advantage

**2. Marketing Excecutive**
- Recruitment of student to collage
- Processing aplications, Facilitating admission & Studant enrolment.
- Implimenting marketing stretagies to promote the college
- Developing and maintaning relationships with career advisors of schools & institutes engaging with prospective with students.
- Participate in recruitment activities such as education exhibition open days & information sessions.
- Assiting with the development & implementation of subsequent sales and marketing plans
- Experience in a similar position would be an added advantage.
- Demonstrated success in achieving recruitment targets with a strong commitmant to excellence in customer service

**3. Admin Assistant**
- Dynamic multitasking candidate with good communication skills
- Should be fluent in both written and spoken English
- Previous work experience in a similar possion would be an added advantage
- **Should be able to**
  - ✓ Work independently
  - ✓ Handle office admin work work on MS office package, Internet & E mail.
  - ✓ Handling student, Lectures documents
  - ✓ Handling lecture scheduling & fallow up

Please send your CV to info@blccampus.edu.lk

BLC CAMPUS

23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## மரண அறிவித்தல்கள்



### ...ருமதி ஞானேஸ்வரி தம்பிநாயகம்

...தரிய மாதா கோயிலடி(வடமூலை) வயாவிளானைப் பிறப்பிடமாகவும் இல. 140, D10 உருத்திரபுரத்தில் ...தவரும் தற்போது இல. 185, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட ...தி ஞானேஸ்வரி தம்பிநாயகம் நேற்று (25.05.2019) சனிக்கிழமை காலமானார்.

...னார் காலஞ்சென்றவர்களான சிங்கநாயகம் - ஞானம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் ...சன்றவர்களான மரியாம்பிள்ளை இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சூசைதாசன் ...த்தின் அன்பு மனைவியும் குனேஸ்வரி, தனேஸ்பரநாயகம், ராஜேஸ்வரி, சௌந்தரேஸ்வரி, ...தேஸ்வரி, செல்வேஸ்பரநாயகம், மங்கலேஸ்பரநாயகம், சந்திரேஸ்பரநாயகம் ஆகியோரின் ...காதரியும் லில்லி திரேசா, காலஞ்சென்ற மரியஞானேந்திர தமிழ்ச்செல்வன் (தினேஸ்) ... றுவீனா தேன்மொழி, ஞானதமிழ்ச்செல்வி (கணக்குப் பதிவாளர் -கரைச்சி தெற்கு ப.நோ. ...சங்கம் கிளிநொச்சி), அருந்தமிழ்ச்செல்வன்(கிராமசேவையாளர் - பிரதேச செயலகம், சாவகச்சேரி), அருங்கலைச்செல்வன்(நிர்வாக உத்தியோகத்தர் மகளிர் விவகார அமைச்சு வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அன்ரன் ஜெயசேகரம், மரியதர்ம குலசிங்கம், பாலேந்திரன்(பொது முகாமையாளர் - கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்.கிளிநொச்சி), றெஜீனா, யூலியட் அஞ்சலா ஆகியோரின் அன்பு மாமியாரும் மேர்சி லூட்ஸ் - டொமினிக் சேவியர்(கனடா),அன்ரனி தமிழ் செழியன், அன்ரனி வைமன், அன்ரனி நோர்மன், அன்ரனி நியூமன், அன்ரனி சைமன், நோவோட் நிசாந்தன், டனுசா, சிலக்சனா, சிலக் ஷன், சுவிதா, சவிதா, ரசிதன், நிரோஜன், கஜீவன், சஜீவன், குலதீபன், அனோசிகன், அனோசிகா, அனோஜன் ஆகியோரின் பேர்த்தியும் மெர்வின், மெய்ரோன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (27.05.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்திலிருந்து பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 10.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக நாரந்தனை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.185, கொழும்புத்துறை வீதி,**
**பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.**

(CS 24877) (14,17)

**தகவல்:**
**பிள்ளைகள்.**

**021 222 8623**

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு 14 . 11 . 1945



இறப்பு 23 . 05 . 2019

### முருகேசன் முத்தையா (கட்டட கலைஞர்)

வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசன் முத்தையா 23.05.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-செட்டிச்சி தம்பதியரின் மருமகனும், பொன்மலரின் அன்புக் கணவரும், மதியழகன் (நோர்வே), தயாலினி (கொழும்பு), அன்பழகன் (டட்லி-லண்டன்), தமிழரசி (சீலி-சுவிஸ்), அறிவழகன் (காண்டீபன்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாசினி (நோர்வே), தம்பித்துரை (கொழும்பு-கட்டட ஒப்பந்தகாரர், நயினாதீவு), பாலச்சந்திரன் (பாலன்-சுவிஸ்), சிந்துஜா (சிந்து-லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிறோஸ், விதுஷா, நிவேதன், பிரதீபன், சாருந்தன், சாருஜன், டெய்சிகா, டிலக்ஷிகா, ராஜசிம்மஜி, ஸ்ரீமன், யாசிகன், சாகிதன், கௌஷல்யா, அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாளயங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மருமகன் பரமசாமி தம்பித்துரை**
**(கட்டட ஒப்பந்தகாரர்)**

**தொலைபேசி : 077 308 6910**



பிறப்பு 15 . 08 . 1950

இறப்பு 25 . 05 . 2019

### திருமதி இராமநாதன் பாக்கியராணி

**(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்)**

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் பாக்கியராணி நேற்று (25.05.2019) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதிகளின் புதல்வியும், இராமநாதனின் (ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், கதிரவேற்பிள்ளை, காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், சிவபாக்கியம் மற்றும் பாக்கியலட்சுமி (யா/ மல்லாகம் தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்), யோகநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நிர்த்திகாவின் பாசமிகு தாயாரும், சுதாகரனின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவன் வீதி,**
**ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.**

(CS/25606)(11.17)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**021 205 8107**

பிறப்பு 07 . 01 . 1953



இறப்பு 25 . 05 . 2019

### சிவராசா சந்திராதேவி

பலாலி கிழக்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும் மட்டுவில், வவுனியா, (75/78 வியாசர் வீதி, தோணிக்கல்) சுன்னாகம் ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகக் கொண்ட சிவராசா சந்திராதேவி நேற்று (25.05.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னர் - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் சிவராசாவின் அன்பு மனைவியும் இந்திராதேவி, காலஞ்சென்ற மாரியம்மா மற்றும் இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பழனித்தேவன்(நெதர்லாந்து), பகிரதி (பிரான்ஸ்), செந்தூரன் (லண்டன்), பத்மஸ்ரீ (ஜேர்மனி), துருபதன்(இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விக்னேஸ்வரன், சிவகுமார், தனுசா, கௌசி ஆகியோரின் மாமியும் நிலானி, விதுசன், நிதுசன், டனுஷ்கா, ஜெய்சன், சஞ்ஜீத் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2019) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

• இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**முத்துகிருஸ்ணன் வீதி,**
**சுன்னாகம்.**

(CS 24877) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**செந்தூரன் (மகன்) - 0044 798 4926 753**
**துருபதன் (மகன்) - 0094 766 552 725**
**பகிரதி (மகள்) - 0033 761 179 078**

உ
சிவமயம்




புதூர் – புளியங்குளம்

# அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய

# வருடாந்த பொங்கல் விழா

# 03.06.2019



வரலாற்றுச்சிறப்புமிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 03.06.2019 திங்கட்கிழமை நடைபெற உள்ளதால் அடியார்கள் தங்களது நேர்த்திக் கடன்களை செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாக உள்ளது.

## விஷேட அறிவித்தல்

- அடியார்களுக்கு விசேட போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அடியார்கள் சிரமமின்றி வழமையான இடத்திலேயே இறங்கி ஆலயத்திற்கு வந்து செல்லலாம்.
- வியாபார செய்யும் வியாபாரிகள் ஆலய பரிபாலனசபையிடம் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 01.06.2019 சனிக்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்கவும். அதன்பின் வரும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.
- கத்தி மற்றும் கூரிய ஆயுதங்களைக் கொண்டு வருவதோ அல்லது விற்பனை செய்வதோ முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
- அடியார்கள் தேவையற்ற பொருட்களை கொண்டு வருவதை தவிர்த்துக்கொள்ளவும்.
- அடியார்கள் தேசிய அடையாள அட்டை அல்லது தங்களை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு ஆவணத்தை கொண்டுவருதல் வேண்டும்.
- அடியார்களின் பாதுகாப்பு நலன்கருதி இவ்வருடம் தூக்குக்காவடி (பறவைக்காவடி) எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

நாகதம்பிரான் அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ஆலய பரிபாலனசபை

தொ.பே : 077-0240403, 077-5152864, 077-7708553

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.04.2019 அன்று இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவி



## அமரர் திருச்செல்வம்
## தேவசேனா

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிகு நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்திதயத் தெய்வமே!
நாள்கள் முப்பத்தொன்று
ஆனபோதும் ஆறவில்லை எம்துயரம்.

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (26.05.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மதியபோசனத்தில் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

குடும்பத்தினர்
077 026 0424

# Hair Beauty Skin

**3 Days Work shop in Jaffna**

JAFFNA BEAUTICIAN ASSOCIATION

**கம்சிகா மஹால்**
**(ராஜா கிறீம் கவுஸ்)**

இல.37, சேர் பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

**காலம்:- 31.05.2019, 01.06.2019, 02.06.2019**

3 Days 5000/=
1 Day 2000/=

Hair - Kamal Kingsley
Bridal - Sureka
Skin - Jay & Samanthika

TEL:- Mrs.Lagi (Secretary Of JDBA) - 077 891 9613
Mr.Neil - 077 204 2567



## மணமகள் தேவை

கிரக நிலை V ஆண் நவாம்ச நிலை

கிரக நிலை (மேல்: மீனம் மேடம் இடபம் மிதுனம்; இடது: கும்பம் மகரம்; வலது: கற்கடகம் சிங்கம்; கீழ்: தனு விருட் துலாம் கன்னி)

| | | | |
|---|---|---|---|
| 12 | ல / ராகு | சுக் | சூரி செவ் |
| சந்திரன் | உதய லக்கின மேடம் | | புதன் |
| குரு | சந்திர லக் கும்பம் | | 5 |
| 9 | 8 | சனி கேது | 6 |

நவாம்ச நிலை (மேல்: மீனம் மேடம் இடபம் மிதுனம்; இடது: கும்பம் மகரம்; வலது: கற்கடகம் சிங்கம்; கீழ்: தனு விருட் துலாம் கன்னி)

| | | | |
|---|---|---|---|
| சுக் 5 | சூரி சனி கேது | செவ் 7 | 8 |
| சந் 4 | நவாம்ச லக்கி விருட்சிகம் | | குரு 9 |
| 3 | நட்சத்திரம் சதயம் 3 | | 10 |
| 2 | ல / புதன் | ராகு 12 | 11 |

**பிறப்பு - 07.07.1985**

**அதிகாலை 2 மணி 2 நிமி**

**உயரம் 5-' 6" அரச பொறியியலாளர்**

**கி.பா.42**

**தகுந்த மணமகள் தேவை**

**077 025 5934**



**யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி**
**பழையமாணவர் சங்கம்**
**வருடாந்த பொதுக்கூட்டம் - 2019**

காலம் : 02.06.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி
இடம் : பஞ்சலிங்கம் கேட்போர் கூடம், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

பொதுக்கூட்டத்திற்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**வி.தயாபரன்**
**செயலாளர்,**
**பழையமாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(IN 10287)(14.17)



## நன்றி செலுத்தும் வழிபாடு



**செல்வி சத்தியமலர் சின்னப்பு**

முன்னாள் அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை – கோப்பாய்
முன்னாள் முகாமையாளர் – சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
ஸ்தாபக உறுப்பினரும் முதல் தலைவரும் – லயன் கழகம், நல்லூர்

அன்னாரின் வாழ்வுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு
பரி.யாக்கோபு ஆலயம் நல்லூரில் 27.05.2019 திங்கட்கிழமை
பி.ப 4.00 மணிக்கு நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.



## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும்
சுப்பர் மார்கட் ஒன்றிற்கு
பின்வரும் பணியாளர்கள் தேவை

1. விற்பனை உதவியாளர், காசாளர் (ஆண், பெண்)

நேரம் : 8.00 am - 9.00 pm வரை
சம்பளம் ரூபா 18000.00 - 22000.00 வரை

**077 477 3481**



## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும்
சுப்பர் மார்கட் ஒன்றிற்கு
பின்வரும் பணியாளர்கள் தேவை

1. களஞ்சிய பொறுப்பாளர் - ஆண்
2. கணினி பதிவாளர் (GRN) - ஆண், பெண்
3. கணக்குபதிவாளர் - ஆண், பெண்
4. பொதிசுமப்பாளர் - ஆண்

**077 447 9815**



## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும்
சுப்பர் மார்கட் ஒன்றிற்கு பின்வரும்
பணியாளர்கள் தேவை
விற்பனை உதவியாளர், காசாளர்

**077 054 6048**



## தவறவிடப்பட்டுள்ளது

24.05.2019 வெள்ளிக்கிழமை டிப்போ சந்திக்கும், கரடிப் போக்குச் சந்திக்குமிடையில் தேவபாலன் றஞ்சிதமலர் என்பவருடைய இரட்டைப்பனைக்குளம், கல்மடுநகர், இராமநாதபுரம் என்னும் விலாசத்தையுடைய காணி போமிற் தவறவிடப்பட்டுள்ளது இதனை கண்டெடுத்தவர்கள் அதில் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அல்லது கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

**077 869 8627**



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம்,1979 இல் பிறந்த, கார்த்திகை நட்சத்திரம், குற்றமில்லாத சூரியன், செவ் அரச உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**சூரியன் திருமண சேவை**
**561, K.K.S. வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.**



## சேவை நலன் பாராட்டு



மிக நீண்ட காலமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும்

**திரு.குமாரசாமி கணேசதாசன்**

அவர்களை மனதாரப் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்

Best Wishes

**சண்டிலிப்பாய் பிரதேச மக்கள்.**



QUEST INTERNATIONAL UNIVERSITY PERAK



# Dual MBA

Leading to Doctor of Business Administration (DBA)

Sri Lanka UGC Recognized

## MBA

- முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை தொழில்சார் கல்வித் தகைமையா.....?
- வர்த்தக ரீதியான தந்திரோபாயங்கள் உங்கள் வாழ்க்கையை உயர்த்திடும்.
- இரட்டைத் தகைமை MBA என்றும் உங்கள் முன்னேற்றத்துக்கு உந்து சக்தி...

# MBA in

**Finance**
**Marketing**
**HR**

**Duration Approximately 12 to 18 Months**

**Why Choose Us?**

- Industrial visit to foreign country
- Flexible lecture time and mood
- Well experienced and qualified panel of lecturers

BLC CAMPUS

**For more information: 0777 174 443**

23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443

E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யில் கதிரியக்கவியலாளராகக் கடமையாற்றும் சுந்தரம் ஜெகதீசன் அவர்களின் அன்புத் தந்தை

**ஆறுமுகம் சுந்தரம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் ஒன்றியம், யாழ்ப்பாணம்.**

(CS/25616)(11.17)

## அம்மாவுக்கு அஞ்சலி
## 4 ஆவது ஆண்டு நினைவுநாள்



அன்புத் தாயார்

**திருமதி நடராசா தங்கபூபதி**

மலர்வு 09.12.1938 — உதிர்வு 26.05.2015

எமது அன்புத்தாயாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல நிகரை ஞானவயிரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

நாகலிங்கசுவாமி வீதி, சங்கானை. — குடும்பத்தினர்.

(CS: 24730)(4.17)

**076 624 2951**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 10 . 10 . 1923 — இறப்பு 14 . 05 . 2019

எமது கழகத்தவரான லயன் **விஜயேந்திரன்** அவர்களின் தாயாரும், லயன் சீமாட்டி **அனுராதாவின்** மாமியும் ஆகிய

**குமாரசாமி செல்வநாயகி**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இயற்கை அன்னையை வேண்டுகின்றோம்.

**தலைவரும், உறுப்பினர்களும், லயன்ஸ் கழகம், வட்டுக்கோட்டை.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 17 . 12 . 1961 — மறைவு 27 . 04 . 2019

**அமரர் தேசிங்கம் சிவராசா**
**(C.T.B.சிவம்)**

கடந்த 27.04.2019 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (27.05.2019 ) திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படவுள்ளது. அன்னாரின் அந்தியேட்டி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி, முகநூல் மூலமும் கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் துயர் பகிர்ந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஆதியாமலை, உடுப்பிட்டி. — குடும்பத்தினர்.

(AVA-845)(11.17)

**076 303 5739**

---

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

## யாழ். கலாலயா பயிற்சியகம்



இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.





- FACIALS (10 வகை), GALVANIC FACIAL, Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- BRIDAL DRESSINGS
*(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**



- *பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் மகளிருக்கான ஆடைகள் தைக்கும் சான்றிதழற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

**பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!**



**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**29.05.2019 புதன் காலை 10.00 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**01.06.2019 சனி காலை 10.00மணி**

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

Guru

---

## Video Editing Services

உங்களின் சகலவிதமான வீடியோக்களும் (Video) குறைந்த விலையில் Video Editing செய்து கொடுக்கப்படும். (CS 25498)(14.17)

**077 632 5336**

## கார் விற்பனைக்கு

**Toyota Corolla** கார் **16 - xxxx**
விற்பனைக்குண்டு.
**A/C, DVD, Back Camara.**

**077 324 7173**

## கடை கட்டடம் காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் மின்சாரநிலைய வீதியில் 4 மாடி புதிய கடை கட்டடமும் கல்வியங்காடு விளையாட்டு அரங்கம் வீதியில் 2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. நேரடியாகப் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/25576)(11.17)

**077 335 9750**

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
**021 222 9306/077 138 7596**

## வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலியில் அனெக்ஸாக வீடு வாடகைக்குண்டு.

**077 112 0314**

## சர்வதேச திருமண இணைப்புச்சேவை

1989, 1988, 1980 (ஆஸ்திரேலியா Eng),1980, 1987, 1989 (பிரான்ஸ்), 1986, 1980, 1985 (லண்டன் Eng), 1980 (லண்டன் IT), 1985 (லண்டன்), உள்நாடு டொக்டர் (1984, 1989) மற்றும் ஆசிரியர், வங்கியாளர், அரச உத்தியோகம் 1989,1984 (D.O) மணமகள் தேவை. ஆசிரியர் பெண் (1992, 1993, 1989) டொக்டர் (1989, 1992) மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு தகுதியான மணமகன் தேவை. 1987 non Rc கணக்காளருக்கும் மணமகன் தேவை. கனடாவில் வசிக்கும் படித்த 1989 மணமகளுக்கும் 1977 ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மணமகளுக்கும் பட்டதாரி மணமகன் தேவை. சூரியன் செவ்வாய் சேர்ந்திருக்கும் ஏராளமான குறிப்புகளும் எம்மிடம் உண்டு. இன்றே தொடர்புகொள்க.

**077 946 4287, 077 215 1329, 076 533 1829**

## லொறி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **10 WHEEL**
**லொறி** விற்பனைக்குண்டு
இல: WP LL XXXX
வருடம்: 2011

விவரங்களுக்கு: **077 362 9517**

## Your Royal Auto Mobiles

எம் வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு வேலையாள்கள் தேவைப்படுவதால் உடன் அழையுங்கள்.
தொடர்புக்கு:

**Tel: 07777 63533**

## மரணஅறிவித்தல்

### திருமதி காண்டீபன் அனுஷா



பிறப்பு 02.03.1985 — இறப்பு 24.05.20

அளவெட்டியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காண்டீபன் அனுஷா 24.05.2019 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசுமகாதேவன் ஜானகி தம்பதிகளின் அன்பு மகளும் தயாபரனின் அன்புச் சகோதரியும் இரத்தினம் காண்டீபன் (ஆசிரியர் அருணோதயாக் கல்லூரி) இன் பாசமிகு மனைவியும் மாதேஷ், ஆராதனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10. மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம், அளவெட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணேஸ்வரம், அளவெட்டி. — தகவல்: குடும்பத்தினர்.

**076 575 3754**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 12 . 05 . 1943

இறப்பு 26 . 04 . 2019

### சின்னத்துரை கமலம்

குன்றாத ஒளிவிளக்கே குடும்பத்தின் குலவிளக்கே!
பாசமுடன் உறவாடி நேசமுடன் எமை வளர்த்து
எமக்கு வாழ்வூட்டி வழிகாட்டிய தெய்வமே!
அன்பின் அரவணைப்பாய் பண்பின் சிகரமாய் பாசத்தின்
உறைவிடமாய் நீங்கள் எம்முடன் வாழ்ந்தகாலம்
கனவாகிப் போனாலும் நெஞ்சிருக்கும் வரை
உங்கள் நினைவிருக்கும் அம்மா!

இன்று (26.05.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**40/1, குறுக்குத்தெரு,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



### கந்தசாமி சிவாஜி M.A (English)

**(ஓய்வுபெற்ற அதிபர் - யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி - சுன்னாகம் )**

உடுவிலைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவாஜி நேற்று (25.05.2019) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் உடுவில் காலஞ்சென்றவர்களான அ.கந்தசாமி( முன்னாள் அதிபர், விவாக பிறப்பு இறப்பு பதிவாளர்), தங்கரத்தினம் தம்பதியினரின் தவப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு (முன்னாள் கனிஸ்ட அதிபர் - நடேஸ்வரா கல்லூரி, காங்கேசன்துறை) சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகனும் கலாநிதி கருணாதேவியின் (துறைத்தலைவர், ஆங்கிலமொழி கற்பித்தல் துறை - யாழ்.பல்கலைக்கழகம்) அன்பு கணவரும் திருமதி கௌரி சிவராஜாசுந்தரத்தின் (இளைப்பாறிய ஆசிரியர், மானிப்பாய் மகளிர்கல்லூரி) அன்புச்சகோதரனும் செல்வி மாதுமை (முன்னைநாள் தற்காலிக பயிற்றுவிப்பாளர் - ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), செல்வி சாம்பவி (தற்காலிக விரிவுரையாளர், கட்புல அரங்க கற்கைகள் பல்கலைக்கழகம், கொழும்பு), ஆரமுதன் (கனிய அளவையியல் மாணவன், மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"தெய்வீகம்"**
**உடுவில் மேற்கு, உடுவில்**

தகவல்: **கருணாதேவி சிவாஜி**(மனைவி)
**0212240798**

## நாடு முழுவதும் சோதனை: 24பேர் கைதாகினர்

கொழும்பு, மே 26

இராணுவமும்பொலிஸாரும் இணைந்து நாடுமுழுவதும் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்புச் சோதனைகளில் 24 பேர் கைதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மாக்கும்புர, மட்டேகொட பகுதிகளில் போதைப்பொருள் வைத்திருந்தமைக்காக முஸ்லிம் நபர் ஒருவர் கைதானார். இராணுவச் சீருடையை வைத்திருந்தமைக்காக சிங்களவர் அங்கு கைது செய்யப்பட்டார். புத்தளம் மற்றும் குருநாகலை மாவட்டங்களிலும் கூட்டு சோதனை நடத்தப்பட்டது. அங்கு தும்மலசூரிய, மாதம்பே பகுதிகளில் 9 பேர் கைது செய்யப்பட்டனர். ஸஹ்ரானின் ஒளிப்படங்களை வைத்திருந்தமை, ஸஹ்ரானின் ஒளிப்படங்கள் ஒட்டப்பட்ட இறுவட்டுக்கள் வைத்திருந்தமை மற்றும் 12 வாள்களுடன் அவர்கள் கைதாகினர். களுத்துறையில் வியாங்கலை, பதுரெலிய ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் துப்பாக்கி வெடிமருந்தை வைத்திருந்தமைக்காகவும், அடிப்படைவாத குறுந்தகவல்களை பரிமாற்றியமைக்காகவும் இரண்டு சிங்களவர்கள் கைதாகினர். கம்பகா மாவட்டத்தின் எண்டேரமுல்லையில் 80 கடவுச் சீட்டுகள் வைத்திருந்தமை, வாள்கள் வைத்திருந்தமை போன்ற காரணங்களுக்காக 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும், வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் கணக்கியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான **கலாநிதி எஸ்.ரமேஸ்** அவர்களின் அன்புத் தந்தையாரான

**வைத்திலிங்கம் ஸ்கந்தவரதர்**
(ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர்-இ.போ.சபை)

அவர்கள் கடந்த 24.05.2019 அன்று இறைபதம் எய்தினார். அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் **திரு.இ.காண்டீபன்**
அவர்களின் பாசமிகு மனைவி

**அனுசா காண்டீபன்**



அவர்கள் நேற்று முன்தினம் (24.05.2019) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைசமூகம்**
**யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 08 . 03 . 1948

இறப்பு 25 . 05 . 2019

என்னைக்கற்பித்து நல்வழிப்படுத்திய ஆசானும்
அற்லான்ரா வைத்தியசாலையை
ஆரம்பித்து வைத்தவருமான
**கந்தசாமி சிவாஜி அவர்கள்**
காலமாகி விட்டார் அவர்களின் மறைவையொட்டி எமது அஞ்சலியினை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

*Dr. T* . சேத்திரபாலன்
அற்லான்ரா வைத்தியசாலை, மருதனார் மடம்
**077 371 5670**

# சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்களை பலப்படுத்துமாறு மைத்திரி பணிப்பு

கொழும்பு, மே 26

**எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி இடம்பெறும் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றாடல் வாரமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், சுற்றாடல் பாதுகாப்புக்காகத் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அனைத்து செயற்றிட்டங்களையும் பலப்படுத்தி அவற்றை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரச தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.**



நேற்றுமுன்தினம் முற்பகல் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அரச தலைவர் இவ்வாறு பணித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


அதில் உள்ளதாவது:

சுற்றாடல் அதிகார சபையால் இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் அரச தலைவர் கவனம் செலுத்தினார்.

சுற்றாடல் வழிகாட்டி செயற்றிட்டத்தை தாமதமின்றி நிறைவு செய்தல், பாடசாலை மட்டத்திலான சுற்றாடல் வழிகாட்டிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது. பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட இதனோடு தொடர்புடைய சகல தரப்பினரையும் இணைத்து சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான ஈடுபாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாக அரச தலைவர் சுட்டிக்காட்டினார்.

பொலித்தின் தடை, வாகனங்களில் அதிக ஒலியை எழுப்புவதைத் தடை செய்தல், சுற்றாடல் பொலிஸாரைப் பலப்படுத்துதல் போன்ற சுற்றாடல் பாதுகாப்புக்காக அரசால் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான தீர்மானங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பாக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் மீளாய்வு செய்யப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் ஏ.ஜே.எம்.முஸம்மில், பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜயசிங்க உள்ளிட்ட மீத்த அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர் - என்றுள்ளது. (எ)



## திடீரெனத் தீப் பற்றி எரிந்த பேருந்தால் பெரும் பரபரப்பு

கொழும்பு, மே 25

தனியார் பயணிகள் பேருந்து ஒன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்து நாசமாகியுள்ளது. பயணிகள் உயிர்ச்சேதம் இன்றித் தப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை 6.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இரத்தினபுரியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த தனியார் பேருந்து அவிசாவளை, கிரிவந்தல பகுதியில் தீப்பிடித்துள்ளது.

பேருந்து தீப்பிடித்து எரிந்த வேளை, பேருந்துக்குள் சுமார் 50க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்துள்ளனர்.

பேருந்து திடீரென தீப்பிடிப்பதை அவதானித்த பேருந்தின் சாரதியும் நடத்துநரும் துரிதமாகச் செயற்பட்டு அனைத்துப் பயணிகளையும் பஸ்ஸுக்குள் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றியுள்ளமையால் பயணிகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை.

ஆரம்பத்தில் பேருந்தின் இயந்திரப் பகுதியில் தீ பரவியுள்ளது எனவும், பின்னர் குறித்த தீ கட்டுப்பாட்டை மீறியமையால் பேருந்து முழுவதுமாக எரிந்து நாசமாகியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதிக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் விரைந்து நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அந்தப்பகுதியில் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-22)

## சடலமாக தலவாக்கலை இளைஞர் மீட்பு

கொழும்பு, மே 26

தலவாக்கலையில் தலையில் பலத்த காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலிரூட் பகுதியில் தொடருந்து பாதையில் நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் குறித்த சடலம் மீட்கப்பட்டுது. அந்தப் பகுதியால் சென்ற பொதுமக்கள் சடலமொன்று கிடப்பதைக் கண்டு தலவாக்கலைப் பொலிஸாருக்கு அறிவித்தனர். அதையடுத்து சடலம் மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தலவாக்கலை ஒலிரூட் கீழ்ப் பிரிவைச் சேர்ந்த பெனடிக் றொஷான் (வயது-23) என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் தோட்ட தேயிலைத் தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் இரவு நேரத் தொழிலுக்குச் சென்றிருந்தார். எனினும், நேற்றுக் காலைவரை வீடு திரும்பவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர் தொடருந்தில் சிக்குண்டு உயிரிழந்துள்ளாரா அல்லது எவராவது கொலை செய்து தொடருந்து பாதையில் வீசிச் சென்றார்களா அல்லது இவர் தற்கொலை செய்துகொண்டுள்ளாரா? எனப் பல கோணங்களில் தலவாக்கலைப் பொலிஸார் தீவிர விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (எ-22)

## ஆஸிக்கு தப்பிச்செல்ல முயன்ற 41 பேர் கைது!

கொழும்பு, மே 26

ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக படகு மூலம் தப்பிச் செல்ல முற்பட்ட 41 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு ஆயிரத்து 370 கடல் மைல் தொலைவில் இவர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 32 ஆண்கள், ஐந்து பெண்கள் மற்றும் நான்கு சிறுவர்களும் அடங்குகின்றனர் என்றும், மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## துப்பாக்கி, வெடிபொருளுடன் நால்வர் கைது

கொழும்பு, மே 26

பிலியந்தல - ஹெடிகம பிரதேசத்தில் துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகள் உட்பட பல பொருள்களுடன் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கார் ஒன்றை நேற்றுக் காலை சோதனை செய்தபோதே இவை மீட்கப்பட்டுள்ளன என்றும், 200 கிராம் வெடிமருந்துகள் கைப்பற்றப் பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் மொரவக, பேலியகொட மற்றும்களனிபிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## போர் வெற்றியினது அபிமானத்தை எதிர்காலத்தினர் அறியவேண்டுமாம்

கொழும்பு, மே 26

30 வருட கால போர் வெற்றியின் அபிமானத்தை எதிர்காலத் தலைமுறையினரும் உலகத்தினரும் அறிந்துகொள்வதற்கானவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற 'உத்தமாச்சாரய' (வணக்கம்) நூல் வெளியீட்டு விழாவின்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவச் சிப்பாய்களின் போர்த்திறமை, தேசப்பற்று மற்றும் உன்னத மனித நேயம் தொடர்பில் எதிர்கால சந்ததியினர் வாசித்து தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் 30 ஆண்டு காலப் போர் வெற்றியின் வீரச் சரித்திரத்தை நூலாகத் தொகுக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. அதனை வாசிப்பதனூடாக நாட்டை நேசிக்கும் தேசப்பற்றுடைய எதிர்கால தலைமுறையொன்று உருவாக்கப்படுவதுடன், 30 வருட கால போரின் உண்மைத் தன்மை, பின்னணி மற்றும் அதற்கான காரணங்களைப் போன்ற விவரங்களை உலகத்தினருக்குத் தெரியப்படுத்த முடியும் - என்றார். (ம)

# அரச தலைவர் தேர்தல்தான் முதலில் நடக்கும் சாத்தியம்

### *அழகப்பெரும எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, மே 26

அரசமைப்பின்படி அரச தலைவர் தேர்தலே முதலில் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும.

அரச தலைவர் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தலை ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி வெளியிட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அர தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் அறிவித்துள்ளமை தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மாகாண சபை தேர்தல் தொடர்பில் நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் எதிர் தரப்பினர் மாத்திரமே கருத்துக்களை வெளிப்படுத்தினோம். தேர்தலை காலவரையறையின்றிப் பிற்போடுவதற்கான காரணிகளை மாத்திரமே அரசு காண்பித்ததே தவிர தேர்தலை விரைவாக நடத்துவற்கு எவ்வித ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வில்லை.

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் எந்த தேர்தலும் இடம்பெறாது என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாக இருந்தது. அவர்களின் நோக்கம் இன்று வெற்றிப் பெற்றுள்ளது. மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் எல்லை நிர்ணய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அறிக்கை தோற்கடிக்கப்பட்டது. இதன் பின்னர் தேர்தலை விரைவுபடுத்தஎல்லைநிர்ணயமீளாய்வு குழு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நியமிக்கப்பட்டது-என்றார். (எ)

## இதய அஞ்சலி



சிவபூமி அறக்கட்டளையின் உபதலைவரும் புகழ்பூத்த ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய

**கந்தசாமி சிவாஜி** அவர்களின்

பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகின்றோம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய

இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**ஆறு. திருமுருகன்**
**தலைவர், சிவபூமி**

**நிர்வாகசபை,**
**சிவபூமி அறக்கட்டளை (இலங்கை)**

# அரசியல் கைதிகளையும் அரசு விடுவிக்க வேண்டும்

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் கோரிக்கை

கொழும்பு, மே 26

ஞானசார தேரரின் பொது மன்னிப்பு மீதான விடுதலை சரியா பிழையா என்பதை விட இது அரச தலைவருடைய மனிதாபிமானத்தை எடுத்துக் காட்டுகின்றது.

அதேபோல இலங்கையில் இருக்கின்ற வட கிழக்கு, மலையகம் உள்ளிட்ட அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு அரச தலைவர் ஆவண செய்ய வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், சிறப்புப் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஞானசார தேரரின் விடுதலை தொடர்பாக கருத்து கேட்ட பொழுது அவர் இவ்வாறு பதிலளித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது,

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டன. இதன்போது ஞானசாரதேரர் விடுதலை செய்யப்பட வேண்டும் என பெரும்பான்மை மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கமைய பொது மன்னிப்பின் கீழ் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இன்று அவருடைய விடுதலை சரியா பிழையா என்ற விவாதம் ஒருபுறம் இருக்க தமிழ் அரசியல் கைதிகளும் இதேபோல பொது மன்னிப்பின் கீழ் மிக விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரச தலைவர் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ம)

## புத்தூர் விவசாயிகளுக்கு நாளை முதல் மானிய உரம்

அச்சுவேலி, மே 26

புத்தூர் கமநல சேவை நிலையப் பிரிவுக்குட்ட விவசாயிகளுக்கான சிறுபோக மானிய உரம் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது.

மானிய உரம் பெறுவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட விவசாயிகள் அடையாள அட்டையுடன் நேரில் வந்து உரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று புத்தூர் கமநல சேவை நிலையப் பெரும்போக அலுவலர் சி.ரகுபரன் அறிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை வலயப் பகுதி விவசாயிகளுக்கும், நாளை மறுதினம் அச்சுவேலி தெற்கு விவசாயிகளுக்கும், 29ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களும் புத்தூர் கிழக்கு விவசாயிகளுக்கும் உரம் வழங்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-11)

## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு



யாழ்ப்பாணம்,மே 26

உசன் சிறிமுருகன் சிறுவர் கழக உறுப்பினர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. மிருசுவில் உசன் பகுதியில் கடமையாற்றிய கடமையாற்றிக் கொண்டிருக்கும் கள அலுவலகர்களது முயற்சியால் போதைப் பொருள்கள் பாவனையிலிருந்து விடுபட்டவர்கள் பிரிவு சமுர்த்தி பயனாளிகள் சங்கத்தில் வழங்கிய சேமிப்பு நிதி யிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கற்றல் உபகரணங்களே வழங்கப்பட்டன.

பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரிவில் கடமையாற்றிய கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற வெளிக்கள அலுவலர்கள் கலந்து கொண்டு சிறுவர் கழக உறுப்பினர்களுக் கற்றல் உபகரணங்களை வழங்கினர். (ஐ-9)

## 50 வீத மானியமாக 12.5 மில். ரூபா பலநாள் படகுகளுக்கு மிக அதிகம்

### வடமராட்சி மீனவர் சங்க சமாசம் கூறுகின்றது

யாழ்ப்பாணம், மே 26

பல நாள்கள் படகுகளை 50 வீத மானியத்தில் தலா 12.5 மில்லியனுக்குப் பெறவிரும்புவோர் விண்ணப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், குறித்த படகை தனி நபர் உற்பத்தி செய்தால் 17 அல்லது 18 மில்லியன் ரூபா போதுமானது என்று வடமராட்சி மீனவர் சங்க சமாசத் தலைவர் நா.வர்ண குலசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களில் பல நாள் படகுகளைப் பெற்றுத் தொழில் புரிய வசதி வாய்ப்பை ஏற்படுத்த தொழிலாளர்களுக்கு 25 மில்லியன் ரூபாவில் படகு தயாரித்து அதனை 50 வீத மானியத்தில் வழங்கவுள்ளதாக மாவட்ட நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார். இவற்றைப் பெற விரும்புவோர் பதிவு செய்யுமாறும் கடந்த வியாழக்கிழமை கூறியிருந்தார்.

இது தொடர்பில் வடமராட்சி மீனவர் சங்க சமாசத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

55 அடி நீளமான ஓர் படகைக் கட்டுவதற்கு எவ்வளவு செலவாகும் என்று நாம் படகு கட்டுமானத் தொழிற்சாலைகளுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு கேட்டபோது, 17 மில்லியன் ரூபா என்று தெரிவிக்கின்றனர். ஒரு படகுக்கே இந்த செலவு எனில் பல படகுகளை பதிவு செய்தால் மேலும் குறைவடைவதற்கான சந்தர்ப்பம் உள்ளது என்றும் தெரிவித்தனர்.

இதன்படி பார்த்தால், மானிய விலை என்று அரசு கூறிக்கொண்டு படகுக்கான அதிகபட்ச முழுப் பணத்தையும் எம்மிடமே அறவிட முயற்சிக்கின்றது என்றே கருதுகின்றோம் - என்றார்.

படகு கட்டுமான தொழிற்சாலை ஒன்றில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒரு அடி நீளத்துக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் 82 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் இயந்திரம் 53 லட்சம் ரூபாவுடன் மேலதிக சாதனங்கள் 25 லட்சமும் என்பனவே செலவாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (து-105)

## பேருரை

யாழ்ப்பாணம், மே 26

மல்லாகம் அருள்மிகு பெரிய நாயகி சமேத பெரியதம்பிரான் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா வழிபாடுகளும், தீ மிதிப்பு வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் இவ்வாண்டும் தெய்வீக வர்ணனைப் பேருரையினை தெய்வீக ஞானத்தமிழருவி வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் ஆசிரியர் நிகழ்த்தவுள்ளார். (ம)

## பொதுக் கூட்டம்

சாவகச்சேரி, மே 26

சாவகச்சேரி தனன்களப்பு கமக்கார அமைப்பின் பொதுக் கூட்டம் தனன்களப்பு பொது நோக்கு மண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். அமைப்பின் தலைவர் வி.சதானந்தன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் முதன்மை விருந்தினராக கைதடி கமநல சேவைகள் நிலைய பெரும்போக அலுவலர் கு.கோகுலன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ -9)

## இறுவட்டு வெளியீடும் கலைஞர்கள் மதிப்பளிப்பும்

நெல்லியடி, மே 26

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் வரலாற்று நூல், பாடல் இறுவட்டு வெளியீடு மற்றும் கலைஞர்கள் மதிப்பளிப்பு என்பன இடம்பெறவுள்ளன.

நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய பரிபாலன சபை உப தலைவர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் , கரவெட்டி பிரதேச செயலக செயலர் ஈ. தயாரூபன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-422)

## ஓய்வூதியக் கொடுப்பனவு சீராக்கத்துக்கு வரவேற்பு

அச்சுவேலி, மே 26

இலங்கை அரசு ஓய்வூதியர்களின் சம்பளக் கொடுப்பனவைச் சீராக்கம் செய்வதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு இலங்கை ஆசிரியர் ஓய்வூதியர் சங்கம் வரவேற்புத் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கத்தின் செயலர் எஸ்.சரவணபவன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சம்பள உயர்வு நியமங்கள் மற்றும் சம்பள முறைமைகளைக் கருத்தில் கொள்ளாமல் இதுவரைகாலமும் வழங்கி வந்த ஓய்வூதியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை நியமங்களுக்கு அமைய அரசு மாற்றி அமைத்து வழங்குவதற்கு முன்வந்து நடவடிக்கை எடுப்பதை ஆசிரியர் ஓய்வூதியர் சங்கம் வரவேற்கின்றது.

ஓய்வூதியர்களின் மாதாந்தக் கொடுப்பனவு தொடர்பான நிபுணத்துவக் குழு ஆய்வு செய்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மறுசீரமைப்பு செய்ய வேண்டியது தொடர்பாக அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் தொடர்பாக தலைமை அமைச்சர் பதிலளித்துள்ளதுடன், ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு கொடுப்பனவைச் சீரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்றுள்ளது. (எ-11)

## வெடிபொருள்கள் அகற்றப்பட்ட இடங்களில் மக்கள் குடியமர்வு

பளை, மே 26

பச்சிலைப்பள்ளி, மேற்கு இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டு கையளிக்கப்பட்ட 150 ஏக்கர் காணியில் மக்களை மீளக்குடியமர்த்தும் நிகழ்வு வேம்பொடு கேணிப் பிரிவில் நேற்று இடம்பெற்றது.

பளை பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கௌரிதாசன், பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி மா.மகேந்திரன், உதவிப் பிரதேச செயலர் மற்றும் பிரதேச செயலக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மீளக்குடியமரவுள்ள 3 கிராமங்களைச் சேர்ந்த பெருமளவு மக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். முகமாலை, அம்பளாவளை, இத்தாவில் மேற்கு, வேம்பொடு கேணி, இந்திராபுரம் ஆகிய கிராம மக்கள் கடந்த 2000ஆம் ஆண்டு அங்கிருந்து இடம் பெயர்ந்து வெளியிடங்களில் தங்கியுள்ளனர்.



இந்தப் பகுதிகளில் மேலும் பல பகுதிகள் இன்னமும் வெடிபொருள்கள் அகற்றப்படாததால் மேலும் பல குடும்பங்கள் மீளக்குடி யமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விரைவில் மேலும் ஒரு தொகுதி மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிகழ்வில் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு 49 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (ம-9)

## அரசியல்...

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காகக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பு வழங்கி அவரை விடுத்துள்ளார்.

ஞானசார தேரருக்குப் மன்னிப்பளித்து விடுதலை செய்ய முடியுமாயின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை ஏன் விடுதலை செய்யமுடியாது? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபாலவிடம் பன்னாட்டு செய்தி நிறுவனம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் வினவிய போதே மைத்திரி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் பயங்கரவாதி அல்லர். அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவரும் அல்லர். நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டே அவர் மீது முன்வைக்கப்பட்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது. நான், எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரைப் மன்னிப்பில் விடுதலை செய்ததில் தவறேதும் இல்லை. ஆனால், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் தண்டனை அனுபவித்துவரும் அரசியல் கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள். அவர்களுக்குத் தற்போதைய நிலமையில் மன்னிப்பு வழங்குவது கடினம்.

ஞானசார தேரரைப் மன்னிப்பளித்து விடுவிக்குமாறு பௌத்த மத பீடங்கள், சிவில் அமைப்புகள் உள்படப் பல்வேறு தரப்புக்களும் என்னிடம் கோரி வந்தன. அதற்கமைய அவருக்கு நான் மன்னிப்பு வழங்கினேன். விடுதலையானவுடன் அவர் தனது தாயாருடன் என்னை வந்து நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். அவரின் தாயாரும் எனக்கு நன்றி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது பல விடயங்களை நான் தேரரிடம் கூறியுள்ளேன். மன்னிப்பில் விடுவிக்கப்பட்டவர்கள் மீண்டும் குற்றமிழைத்தால் அது மன்னிக்க முடியாத பெரிய குற்றமாகக் கருதப்படும் என்று அவரிடம் நான் நேரில் தெரிவித்துள்ளேன்.

ஞானசார தேரருடன் அரசியல் கைதிகளை ஒப்பிட வேண்டாம். இவர் செய்த குற்றம் வேறு. அவர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றம் வேறு. இரண்டையும் ஒப்பிட வேண்டாம். தற்போது 200 இற்கு உட்பட்ட அரசியல் கைதிகள்தான் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் உள்ளனர். ஏனையோர் படிப்படியாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளில் குற்றவாளிகளும் உள்ளனர்; சந்தேக நபர்களும் உள்ளனர்.

குற்றவாளிகள் தண்டனையை அனுபவிக்கின்றார்கள். சந்தேகநபர்கள் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இவர்கள் அனைவரினதும் விடுதலை விவகாரம் தொடர்பில் நாம் உயர்மட்ட பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் இவர்களுக்குத் தற்போது மன்னிப்பு வழங்குவது கடினம். அதேவேளை, இவர்களில் பெரிய குற்றங்களைப் புரிந்தவர்களை எந்தக் காரணம் கொண்டும் விடுவிக்கவும் முடியாது. இது தான் உண்மை நிலவரம்.

ஆனால், அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் நாம் தொடர்ந்து உயர்மட்டப் பேச்சுக்களை நடத்துவோம். அவர்களை வைத்து எவரும் அரசியல் செய்ய வேண்டாம் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

(ஒ.5.22)

## மாமுனை...

றியுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர். படகில் பயணித்த மருதங்கேணியைச் சேர்ந்த இருவரைக் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினரும் காங்கேசன்துறை கடற்படையினரும் இணைந்து சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். நேற்று அதிகாலை 2 மணியளவில் மாமுனைக் கடற்பரப்பில் சந்தேகத்துக்கு இடமான படகை அவதானித்தனர். அதனை மடக்கிச் சோதனையிட்டபோது அதிலிருந்து 233 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதாகவும், அவை 111 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்த கடற்படையினர், படகில் பயணித்த இருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

கஞ்சாவையும், கைதானவர்களையும் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடற்படையினர் நேற்று மாலை பாரப்படுத்தினர். (ஒ.5.26.105)

## பாடசாலைப்...

றோரை பலவந்தப்படுத்தி இதற்காக நிதி சேகரிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் நாம் மிகுந்த அவதானத்துடன் இருக்கின்றோம். இவ்வாறு கொள்வனவு செய்யுமாறு நாம் எந்த அறிவித்தலும் விடுக்கவில்லை. இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் குற்றச்செயலில் ஈடுபடும் நபர் அல்லது குழுக்கள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலர் நிஹால் ரணசிங்கவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் முப்படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புத் தரப்பினர், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இருப்பினும் ஏற்படுத்தப்படுகின்ற வதந்திகள் தொடர்பில் கவலையடைகின்றேன். தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தாத வகையில் செயற்படுவது அனைவரது பொறுப்பாகும்.

பொதுமக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் நபர்கள் அல்லது குழுக்கள் தொடர்பில் கல்வி அமைச்சின் 1988 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தகவல்களை வழங்க முடியும் - என்றார். (ஒ.5)

## பிறந்தநாள்...

தெரிவித்தனர்.

'தனு ரொக்கின் பிறந்த நாள் என்ற தகவல் அறிந்த யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தினேஸ் கருணாரத்னவின் கீழ் இயங்கும் சிறப்பு பொலிஸ் பிரிவினர் மானிப்பாய் பகுதியில் சிவில் உடையில் களமிறக்கப்பட்டனர். மானிப்பாயில் தனு ரொக்கின் வீடு அமைந்துள்ள பகுதிக்கு பின்பக்கமாக உள்ள குளக்கட்டுப் பகுதியில் பிறந்த நாள் கொண்டாடிய ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். அதனையடுத்து நவாலி வயல் வெளியில் பகுதியில் வைத்து தனு ரொக்கின் மற்றொரு பகுதியினர் பிறந்த நாள் கொண்டாடிய போது நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் தனு ரொக்கும் அடங்குவார். கைது செய்யப்பட்டவர்களில் இருவருக்கு மட்டும் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவர்கள் இருவரும் தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வந்தனர். கைது செய்யப்பட்ட 9 பேரும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படுவார்கள்' என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, வாள்வெட்டுக் குழுவின் உறுப்பினர் என்று பொலிஸாரால் கூறப்படும் மனோஜ் என்பவருடைய பிறந்த தினத்தை கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள விடுதி ஒன்றில் கொண்டாடிய போது, பொலிஸார் சுற்றிவளைத்தனர். பொலிஸாரால் தேடப்பட்டவர்கள் தப்பி ஓடிய நிலையில் ஐவர் மட்டும் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5.37)

## வடக்கில்...

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் டி.ஜி.ரி.டபுள்யூ. தல்டுவ, யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் பிராந்தியத்துக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எச்.எஸ். என்.பீரிஸ், எல்பிட்டிய பொலிஸ் பிராந்தியத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். பொலிஸ் மனித வளப் பிரிவில் பணியாற்றும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி.பி.வீரசிங்க, மன்னார் பொலிஸ் பிராந்தியத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (ஒ.5.105)

## தேவாலயம்,...

தோர் இந்தத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மன்னார் மடு பொலிஸ் நிலையப் பகுதிக்கு உட்பட்ட கீரிச்சுட்டான் பகுதியில் கிறிஸ்துராசா ஆலயத்துக்கான கட்டுமானப் பணி இடம்பெற்று வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை பி.ப. 6 மணி வரையில் ஆலயக் கட்டுமானப் பணிகள் இடம்பெற்றன. இரவு 7 மணியளவில் ஆலய மேற்பார்வையாளர்கள் ஆலயத்துக்குச் சென்று பார்வையிட்டபோது ஆலயத்தின் இரு சொரூபங்களையும் காணவில்லை என்று பங்குத் தந்தையின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். ஊர்மக்கள் சொரூபத்தைத் தேடினர்.

ஆலயத்திலிருந்து 75 மீற்றர் தூரத்தில் உள்ள பற்றைக்குள் சொரூபம் வீசப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. சொரூபத்தின் தலைப் பாகம் உடைந்து காணப்பட்டது. மற்றைய சொரூபம், ஆலய வளாகத்துக்குள் இருந்த கிணற்றுக்குள் சேதமாக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள கீரிச்சுட்டான் அரசினர் தமிழ் கலவன் ஆரம்ப பாடசாலையிலும், பாடசாலையின் நுழைவாயில் கதவு சேதமாக்கப்பட்டதுடன் பாடசாலையில் இருந்த கதிரைகள், மேசைகள், குடிநீர் குழாய்கள், மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் எல்லாம் சேதமாக்கப்பட்ட நிலையிலும் கதிரைகள் சில சேதமாக்கப்பட்ட நிலையில் பற்றைக்குள் வீசி எறியப்பட்ட நிலையிலும் காணப்பட்டன. பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கியும் கோவில் காணிக்குள் வீசப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும், கீரிசுட்டான் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இன்னும் திறப்புவிழா செய்யாத மருத்துவமனை கண்ணாடி ஜன்னல்கள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன.

உடைக்கப்பட்ட தேவாலயம், பாடசாலை, மருத்துவமனை மூன்றும் அருகில் இருப்பதால் பாலம்பிட்டி இராணுவத்தினர் மற்றும் மடு பொலிஸார் பலத்த பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர், தேவாலயம், பாடசாலை, மருத்துவமனை பகுதிகளைச் சபைச் செயலருடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் செல்லத்தம்பு சந்தியோகு, முழுமையான கிறிஸ்தவர்கள் வசிக்கும் இந்தப் பகுதியில் பதட்டத்தை உண்டாக்குவதற்காகவோ அல்லது இந்த கிராமத்தின் வளர்ச்சி பிடிக்காமல் விசமிகளால் தீய செயல்கள் செய்யப்பட்டுள்ளன. பொலிஸார் குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடித்து தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (ஒ.5.60.213)

## ஆட்டத்தை...

கள் தமது தேவைகளுக்கு ஏற்ப இந்த் நாட்டை அராஜகநிலைக்கு இட்டுச் சென்றுள்ளனர். தமக்குத் தெரியாத விடயங்களைக் கூறிக் கொண்டு திரியாது ஒரு ஓரமாக இருக்குமாறு இந்த நாட்டிலுள்ள தேரர்களுக்கும், ஏனைய குழுக்களுக்கும் சொல்கின்றோம். எவ்வாறாயினும், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை நாம் நிறைவுக்கு கொண்டு வருவோம் - என்றார். (ஒ.5)

## காணிகளை...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து, வலிகாமம் வடக்கில் 25 ஏக்கர் காணி விடுவிக்கப்படவிருந்த நிலையில், அது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் சரி இலங்கை முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தேசத்தின் பாதுகாவலர்களான இராணுவத்தினர் பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராது தமது கடமைகளை செவ்வன ஆற்றி வருகின்றனர்.

கடந்த காலங்களில் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு பொதுமக்களின் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. மேலும் 25 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்படுவதாக இருந்த நிலையில் அந்த நிகழ்வு அரச தலைவரின் வருகை நிறுத்தப்பட்டிருந்த நிலையில் காணி விடுவிப்பு நிகழ்வும் ஒத்தி வைக்கப்பட்டது.

ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதிகளின் தாக்குதலின் பின்னர் நாட்டில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக சிலர் போலி விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். காணிகள் அரச தலைவரின் பணிப்புரைக்கு அமைய விடுவிக்கப்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தினரின் பாவனையில் உள்ள காணிகள் விடுவிப்பதில் எந்தவித பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லை. மக்களுடைய காணிகள் தொடர்ச்சியாக விடுவிப்பதற்கு இராணுவத்தினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றார். (ஒ.5)

## 2000...

டும். அதில் இரண்டு கல்லறைகள் தோண்டிய நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. புதையலுக்காக கல்லறைகள் தோண்டப்பட்டிருக்கலாம். தோண்டப்பட்ட கல்லறைகளில் ஒன்று சுமார் மூன்று மீற்றர் ஆழமாக காணப்படுவதுடன் மற்றொன்றின் கற்கள் உடைக்கப்பட்டு அருகில் உள்ள வீட்டின் மதில் கட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ.5)

## ஸ்டாலினை...

யாழ்ப்பாணம், மே 26

தமிழகத்துக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் இடையே சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியான தொடர்புகளை வலுப்படுத்தலாம் என்று ஆராய்வதற்காக இலங்கைக்கு வருகை தருமாறு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு, முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றமைக்கு வாழ்த்துத் தெரிவித்து அவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரியுள்ளதாக, தமிழ் மக்கள் கூட்டணி அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் இறுதிப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டபோது திராவிட முன்னேற்ற கழகம் செயற்பட்டவிதம் தொடர்பில் எமது மக்கள் மத்தியில் இன்றும் ஏமாற்றமும் மற்றும் கசப்புணர்வும் இருந்துவருவதை நீங்கள் அறிவீர்கள். இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் எமது மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக வேணவாக்களை நிறைவேற்றும் வகையில் காத்திரமான நடவடிக்கைகளை நீங்கள் எதிர்காலத்தில் முன்னெடுப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

இதற்கு என்னாலான சகல உதவிகளையும் ஒத்தாசைகளையும் நான் வழங்குவேன். அத்துடன் எமது மக்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காகவும் எவ்வாறு தமிழகத்துக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் இடையே சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியான தொடர்புகளை வலுப்படுத்தலாம் என்று ஆராய்வதற்காகவும் நீங்கள் இலங்கைக்கு பயணம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கோரிக்கை விடுக்கின்றேன். இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்றுள்ளது.

இதேவேளை, இந்தியத் தலைமை அமைச்சராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள நரேந்திர மோடிக்கும் முன்னாள் முதலமைச்சர் வாழ்த்துச்செய்தி அனுப்பி வைத்துள்ளார்.

(ஒ.5)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 26
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பேர் பங்கு பற்றும் வே. நகுலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இதில் மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஒற்றுமை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணாசியைடி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், மே 26
'ஏபி' விளையாட்டுக்கழகம் நடத்தும் ஜப்னா துடுப்பாட்ட லீக் தொடரின் ஆட்டங்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 'ஏபி' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மதியம் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)





# சென்.மேரிஸ் - அருணோதயா இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், மே 26
செம்பியன்பற்று சென்.பிலிப்நேரியஸ் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு சென்.பிலிப்நேரியஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய வடமராட்சி கிழக்கு கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் செம்பியன்பற்று சென். பிலிப்நேரியஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று மாலை 3 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அருணோதயா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முதன்மை விருந்தினராக வடமாரட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சுகிர்தன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உறுப்பினர் அருளானந்தசோதி, பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் ம.நவநீதமணி,கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் நவநேசன்,வடமராட்சி கிழக்கு கால்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் த.தங்கரதீஸ்வரன், மதிப்புறு விருந்தினர்களாக தர்மபுரம் பங்குத்தந்தை வி.சில்வெஸ்ரதாஸ், இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரியின் உப அதிபர் றெஜிக்குமார்,9ஆம் வட்டார உறுப்பினர் ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

# இளங்கதிர் கழக அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மே 26
அரியாலை சிறிகலைமகள் சனசமூக நிலையத்தின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை சிறிகலைமகள் விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் இணுவில் இளங்கதிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி சார்பாகப் பந்துவீச்சில் சஞ்செயன், துசி ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

65 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி 5.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 62 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அந்த அணி சார்பாக சஞ்செயன் 30 ஓட்டங்களையும், உதயா 12 ஓட்டங்களையும் பெற்றனர். இணுவில் இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி சார்பாகப் பந்து வீச்சில் டெஸ்மன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (எ-23)

# ஜொலி போய்ஸ் - ரெட்செவின் ஆட்டம் சமநிலையில்

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் யங்கம்பன்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டச்சுற்றுத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்று சமநிலையில் முடிவடைந்தது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஜொலி போய்ஸ் - ரெட்செவின் அணிகள் மோதின. இதில் இரண்டு அணியினரும் நிர்ணயிக் கப்பட்ட நிமிடங்களில் கோல் எதனையும் பதிவு செய்யாதவிடத்து ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. ஆட்ட நாயகனாக ஜொலி போய்ஸ் அணி வீரர் திரிஷன் தெரிவானர். (23)



# இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், மே 26
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் வடமாரட்சி ரீதியாக நடத்திய அணிக்கு 11பேர் பங்கு பற்றும் 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட சின்னத்தம்பி சிற்றம்பலம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மதியம் 1 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)









# நவசக்தி வி.க. - ஐங்கரா வி.க. இறுதிப் போட்டி இன்று

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 21 வயதுப்பிரிவினருக்கான அணிக்கு 8பேர் பங்கு பற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மதியம் 12.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

உலகக் கிண்ண
பயிற்சி ஆட்டங்களில்

# வீரர்கள் உடல் தகுதியில் அதி கூடிய அக்கறை

12ஆவது உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் 4 நாள்களே உள்ளன. இதனிடையே பங்குபற்றவுள்ள 10 அணிகளுக்குமான பயிற்சிப் போட்டிகள் இங்கிலாந்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் இலங்கை -தென்னாபிரிக்கா அணிகள் மோதியிருந்தன. மற்றைய போட்டியில் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதியிருந்தன. இந்தப் போட்டிகளை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு அணியும் தங்களுடைய முக்கியமான வீரர்களின் உடல் தகுதியில் அக்கறை செலுத்தியிருந்ததைக் கவனிக்க முடிந்தது. இலங்கை- தென்னாபிரிக்கா அணிகள் மோதிய போட்டியில் தென்னாபிரிக்கா அணி 87 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றிருந்தது. தென்னாபிரிக்கா அணியின் இலக்குக் காப்பாளர் குயின்டன் டீ குக். இந்தப் போட்டியில் அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டது. அவர் நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். போட்டியில் மும்பை அணி சார்பாக ஆடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்கா அணியைப் பொறுத்த மட்டில் மாற்று இலக்குக் காப்பாளர் இல்லை. ஆனால் நேற்றைய போட்டியில் அந்தப் பொறுப்பை மில்லர் செய்திருந்தார். தென்னாபிரிக்காவின் துடுப்பாட்ட வீரர்கள் சகலரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர். பந்து வீச்சில் பெலுக்குவையோ அசத்தியிருந்தார்.

இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரட்ண பொறுப்புடன் ஆடியிருந்தார். மத்தியூசும் தான் சளைத்தவர் இல்லை என்பதைக் காட்டியிருந்தார். பின்வரிசை வீரர்கள் பிரகாசிப்பு இலங்கை அணியைப் பொறுத்தமட்டில் போதாமல் இருப்பது அணியின் வீழ்ச்சிக்குக் காரணமாகக் காணப்படுகின்றது. அவிஷ்க பெர்னாண்டோவுக்கு சிறு காயம்தான் ஏற்பட்டது. எனினும் அவர் மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் போட்டியை எடுத்துக் கொண்டால் ஆப்கானிஸ்தான் அணி உண்மையில் சிறப்பாக விளையாடியது என்றே கூறலாம். எனினும் பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்கள் இலக்கை மையப்படுத்தி பந்தை வீசவில்லை என்றே கூறலாம். ஏனெனில் அமீர் சிறப்பாக பந்து வீசிய போதும் அவருக்கு 6 பந்துப்பரிமாற்றங்களே கொடுக்கப்பட்டன. சா அப்ரிடி பந்து வீசுவது குறைவு. ஆனாலும் அவருக்கு பந்துப்பரிமாற்றங்கள் கொடுக்கப்பட்டன. அவர் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 51 ஓட்டங்களைக் கொடுத்திருந்தார். பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டம் சிறந்த முறையிலே காணப்படுகின்றது. ஆப்கானிஸ்தானின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் மிகவும் நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. பன்னாட்டு தரவரிசையில் முதல் நிலை பந்து வீச்சாளர் ரசிட் ஹான் சிறப்பான பந்து வீச்சை மேற்கொண்டிருந்தார். ஆப்கானிஸ்தான் அணியும் தாங்கள் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்திருந்தனர்.




## இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், மே 26
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 7பேர் பங்கு பற்றும் 5பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மயில்வாகனம் ஜெயக்குமார் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 3 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)





# FIFA நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்காது

பீபா உறுதி

கட்டாரில் 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க கால்பந்தாட்ட சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் திட்டமிட்டிருந்தது. எனினும் அந்த எண்ணத்தை கைவிட்டுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கையை 2026ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டத்தின்போது 32 நாடுகளிலிருந்து 48 நாடுகளாக அதிகரிக்கவுள்ளதாக கால்பந்தாட்ட சங்கங்களின் சர்வதேச சம்மேளனத்தின் தலைவர் ஜியான்னி இன்பென்டீனோ தெரிவித்திருந்தார். இந்த நிலையில், அந்தத் திட்டத்தை மாற்றி 2022 இல் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். எனினும் இது கைவிடப்பட்டுள்ளது.

கட்டார் உலகக் கிண்ண ஏற்பாட்டுக் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கையில்; 2022 இல் பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கைய அதிகரிக்கும் விடயத்தில் கட்டார் திறந்த மனதுடன் இருந்தது. மேலும் அதற்கு தயாராவதற்கான சாத்தியமான செயற்பாடுகளிலும் அந்த நாடு ஈடுபடத் தயாராவே இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக வரவேற்பு நாடென்ற வகையில் கால்பந்தாட்டத்தின் நலன்கருதி நாடுகளின் எண்ணிக்கை 48 ஆக அதிகரிக்கப்படுவதை எதிர்பார்த்திருந்தோம். அரபு உலகக்கு பெருமையும் புகழும் கிடைக்கும் வகையில் உலகக் கிண்ண வரலாற்றில் அதி சிறந்த கால்பந்தாட்டப் போட்டியை அரங்கேற்றுவோம் - என்றனர்.

## மோர்கனுக்கு காயம்

உலகக் கிண்ணத் தொடர் 30ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில் தற்போது பயிற்சி ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக இங்கிலாந்து அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்போது களத்தடுப்பில் பயிற்சி மேற்கொண்ட அணித் தலைவர் மோர்கனின் இடது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டது. இதனால் காயத்தின் வீரியம் குறித்து அறிய எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. ஒருவேளை எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால் அவர் பயிற்சி ஆட்டத்தில் விளையாடுவது சந்தேகமே? இங்கிலாந்து அணி மோர்கன் தலைமையில் கடந்த நான்கு ஆண்டுகளாக வலுவான ஓர் அணியாகக் காணப்படுகின்றது. இந்த அணி முதன்முறையாக தனது சொந்த மண்ணில் கிண்ணத்தை வெல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் கருதப்படுகிறது.



## மாந்தை மேற்கு பி. செ. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மே 26
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கபடித் தொடரில் மாந்தை பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு உள்ளக அரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலக அணியை எதிர்த்து மடு பிரதேச செயலக அணி மோதியது. இதில் 32:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் மாந்தை மேற்கு பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது. (23)

## கிண்ணத்தைக் கைப்பற்றியது மன்னார் பி. செ.

யாழ்ப்பாணம், மே 26
மன்னார் மாவட்ட பிரதேச செயலங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடித் தொடரில் மன்னார் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது. கடந்த ஞாயிற்றுக் கிழமை மன்னார் பொது விளையாட்டு உள்ளக அரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை பிரதேச செயலக அணி மோதியது. இதில் 47:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் மன்னார் பிரதேச செயலக அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (23)



## உடனடி வேலைவாய்ப்பு

**R.I.B Group (Pvt) Ltd நிறுவனத்தில்**

- பதவிகள்:- ✓விற்பனைப் பிரதிநிதிகள் (Sales Representative) - 06
  ✓விற்பனை நிர்வாகி (Sales Executive) - 02
- தகைமை:- முன்னனுபவம் விரும்பத்தக்கது
  Driving Licence உள்ளவர்
  கல்வித் தகைமை O/L, A/L
- நேர்முகப்பரீட்சை :- 28.05.2019 (செவ்வாய்க்கிழமை)
- இடம் :- இல.83, காதி அபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம். (வைத்தீஸ்வரா கல்லூரி அருகில்)

**076 138 9356, 077 799 4445**


# அன்று தீவிர ரசிகன் இன்று இளம் வீரன்

## பாண்டியா நெகிழ்ச்சி

2011ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்ற போது நான் ரசிகனாக கொண்டாடினேன். தற்போது இந்திய அணியில் இடம்பிடித்துள்ளேன் என்று ஹார்திக் பாண்டியா தெரிவித்தார். இந்திய அணியின் வேகப்பந்து வீச்சு சகலதுறை ஆட்டக்காரர் ஹார்திக் பாண்டியா. 2016ஆம் ஆண்டு இந்திய அணியில் அறிமுகமானார். தற்போது முன்னணி வேகப்பந்து வீச்சு சகலதுறை ஆட்டக்காரராக உள்ளார். அவர் உலகக் கிண்ணத்துக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார்.

25 வயதாகும் இவர், "2011ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றபோது நண்பர்களுடன் வெற்றியை கொண்டாடினேன். தற்போது இந்திய அணியில் இடம்பிடித்து விளையாட இருக்கிறேன். எனது கனவு நனவாகி விட்டது." என்று தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.


### வீடு வாடகைக்கு

நல்லூர் கோயில் பின் வீதியில் அமைந்துள்ள வீட்டின் மேல் மாடி 3 அறை, பெரிய சமையலறை பெரிய Hall, 2Bathroom வாடகைக்கு உண்டு.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

**021 222 6461**

### காணி விற்பனைக்குண்டு

பலாலி வீதி கோண்டாவில் டிப்போவிற்கு அருகில் 2¾ பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.
(CS 25602) 04.17)

**077 411 8851/077 220 8432**

### வகுப்பு

A/L இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் பாடங்கள் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும். வினாக்களும் செய்து விடப்படும்.

**077 074 7906/076 686 7099**





### சச்சினுடன் கோக்லியை ஒப்பிட முடியாது

லாரா தெரிவிப்பு

உலகக் கிண்ணப் போட்டியில் வெல்லவதற்கு இந்தியாவுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. அந்த அணியின் தலைவர் விராட் கோக்லி மனிதரே அல்ல. அவர் ஒரு ஓட்ட மிஷின். கோக்லி ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்துவிட்டால் அவரை கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். அவரது ஆட்ட திறன் 80 மற்றும் 90 ஆண்டுகளில் விளையாடிய வீரர்களை நினைவுபடுத்துகிறது என்று மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் அணித் தலைவர் பிரையன் லாரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

என்னை பொறுத்தவரை சச்சின் என்றுமே மிகச்சிறந்த வீரர். அவருடன் கோக்லியை ஒப்பிட முடியாது. ஆனால் கோக்லியிடம் சிறப்பான திறமைகள் பல உள்ளன. இளம் வீரர்களுக்கு அவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றார். அவரது தலைமையில் உலககோப்பையில் இந்திய அணி சிறப்பாக செயல்படும் என நம்புகிறேன்.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ராவின் வேகம் அனைத்து அணிகளையும் உற்று நோக்க வைத்துள்ளது. தற்போது வரை ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் அவரது பந்து வீச்சை சிறப்பாக எதிர்கொள்ள வழிகளை தேடி கொண்டிருக்கிறார்கள். நான் அவரது பந்துவீச்சை எதிர்கொள்ள நிலை இருந்தால் எதிர்முனையில் இருக்கும் துடுப்பாட்ட வீரருக்கு விட்டுவிடுவேன். தற்போது பும்ரா சிறந்த வேகப்பந்து வீச்சாளராக திகழ்கிறார் - என்றார்.


### வாடகைக்குண்டு

சுன்னாகம் சம்பத் வங்கிக்கு எதிரே
1 ஆம் மாடி கடைத் தொகுதியும்,
2 ஆம் மாடி நவீனவீடும் வாடகைக்குண்டு
(cs.cs 15043) (13)

**077 187 4757**

### ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

### சிவப்பு மணல் விற்பனைக்குண்டு

எம்மிடம் வீட்டு அத்திவாரங்கள் நிரப்புவதற்கும் பள்ள நிலங்களை சீர் செய்வதற்கும் உகந்த சிவப்பு மணல் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோருக்கு டிப்பர் மூலம் தங்கள் இடத்துக்கே கொண்டுவந்து தரமுடியும்.

**T.P 077 790 6291**

### Study in LATVIA

**ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு**

Admission open for 2019 Sep Intake



- ★ நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவரா?
- ★ IELTS இன்றி உயர் கல்வியினை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
- ★ கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
- ★ கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
- ★ 100% விசா உத்தரவாதம்.
- ★ குறைந்த பாட நெறி கட்டணம்
- ★ Schengen visa

**100% Scholarships Available in ITALY & CHINA**

iCS A Complete Visa Solutions Study Abroad
Admissions :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107 B 1/1 , Galle Road , Colombo 6


## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

பொல்காவலையைப் பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கந்தசாமி 23.05.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - அரசம்மா தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் (பெரியங்கிள்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவமணி தேவி மற்றும் விஜயகுமாரி (கனடா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் பத்மநாதன், அருளானந்தம் (கனடா), பரமேஸ்வரன் (சுவிஸ்), கணேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்னேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரி, ஜெயராணி (கனடா), பிரவீணா (சுவிஸ்), தனுஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷாரங்கன், ரமேஷ், சங்கீதா, கிரிஷாந், அஜந்தன், கவிநயா, அரிசுதன், ஸ்ரீஜன், தேஜன், ஸ்ரீதா, ரஸ்ணா, தஸ்ணா, கனுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சண்முகம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கமுத்து, காலஞ்சென்றவர்களான சின்னையா, மகேஸ்வரி மற்றும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன்வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.**

(CS/25612)(11.17)

**தகவல்:
குடும்பத்தினர்.**

**077 047 4260**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.